அறைவு 03 இயம் 44 May 16-22, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC

026 2227622 - 07702 03 201

HELLO MOBILE WORLD




122, NC Road Trincomalee

0777154663 - 0712674050

# வாகரையில் நினைவேந்தல்

## கிழக்கில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு




தமிழ் மக்கள் பெருமெடுப்பில் அழிக்கப்பட்ட போர் முடிவிற்கு வந்த நாளை நினைவுகூர்வதற்கான ஏற்பாடுகளை கிழக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தில் நடைபெறும் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பு யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூறும் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கிழக்கில் வாகரையிலும் வடக்கில் முள்ளி-வாய்க்காலிலும் நடாத்தத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நடவடிக்கைகளை முனெடுத்து இருப்பாகத் தெரிவித்தார்.



கிழக்கு மாகாணத்தில் கூட்டு நினைவேந்தல் நிகழகள் நடைபெறுவது அரிதாகியிருப்பதால் இந் நினைவேந்தலை தெரிவு செய்யப்பட்ட வாகரையில் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகத்....

17

# சம்பூர் மண்ணை விடுவிக்கும் வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை

சம்பூர் காணிகளை விடுவித்து சனாதிபதியால் வழங்கப்பட்ட ஆணையை உயர்நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ளது. இவ் ஆணை விசேட வர்த்தமானி அறிவிப்பாகக் கடந்த 8ம் திகதி வெளியாகியிருந்தது.

ஆணையின்படி 808 ஏக்கர் காணியில் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கருகிலுள்ள 214 ஏக்கர் காணியையும் மக்கள் குடியேற்றத்திற்குப் பயன்படுத்தப் போவதாக மீள்குடியேற்ற அமைச்சரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

எனினும் குறித்த 214 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள கடற்படை முகாமை அகற்றுவதில் காலதாமதம் இருப்பதைக் கிழக்கின் ஆளுனர் வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து முதலீட்டுச் சபையின் ஊடாக 808 ஏக்கர் காணிகளைப் பெற்றுள்ள நிறுவனம்

17




## "திருகோணமலையில் நினைவேந்தல்"

### திருகோணமலைத் தமிழ் சிவில் சமூகம் மக்களுக்கு அழைப்பு

மே18ல் யுத்தத்தினால் அழித்தொழிக்கப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூறும் கூட்டு நினைவேந்தல் நிகழ்வொன்றை நடாத்தத் திருகோணமலை மாவட்டத் தமிழ் சிவில் சமூக அமைப்பானது ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய இக் கூட்டு நினைவேந்தலானது எதிர்வரும் மே மாதம் 18ம் திகதி வெலிக்கடைத் தியாகிகள் அரங்கின் முன்றல் கடற்கரையில் நடைபெறவிருப்பதாக ஏற்பாட்டாளர்களில் ஒருவரான வண. பிரபாகர் அடிகள்

17

## திருமலை நகரசபை கலைந்ததைக் கொண்டாடிய தொழிலாளர்கள்!



திருகோணமலை நகர சபை நேற்று 15ம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டதை தொழிலாளிகள் வெடிகளை கொழுத்திக் கொண்டாடியுள்ளனர்.

15ம் திகதி நல்லிரவுடன் உள்ளூராட்சி சபைகளைக் கலைக்கும் அரசின் அறிவித்தல் வெளியானதை அடுத்தே நேற்று

17

## ஊடகவியலாளர் தாக்கப்பட்டதற்குக் கடும் கண்டனம்



திருகோணமலை மாவட்ட பிராந்திய செய்தியாளர் அப்துல் சலாம் யாசிம் செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது தாக்கபட்ட சம்பவத்திற்கு திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் கடும் கண்டனத்தை தெரிவிக்கின்றது.

கடந்த திங்கட்கிழமை 11.05.2015 அன்று பன்குளம் மகதுல்வெவ எனும் இடத்தில் இடம் பெற்ற விவசாய சம்மேளகக் கூட்டத்தின் போது செய்தி சேகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அதிகரிக்கும் மக்கள் போராட்டங்கள்!

நல்லாட்சி என்ற கோதாவில் களமிறங்கியுள்ள புதிய அரசிற்கான மிகப் பெரும் சவாலாக மக்கள் போராட்டங்கள் பல வலுப்பெற்றுத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக வடக்குக்கிழக்கில் இப்போராட்டங்கள் அன்றாடம் நடைபெறுவது பதிவாகியுள்ளது.

மக்கள் போராட்டங்களின் ஊடாக இரண்டு விடயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். முதலாவது கடந்த அரச ஆட்சியின் போது மக்களின் தேவைகள் எந்தளவிற்குப் புறக்கணிக்கப்பட்டிருந்தன என்பதுடன் எந்தெந்த விடயங்களால் மக்கள் சொல்லனாத் துயரங்களுக்கு உள்ளாகியிருந்தனர் என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றன.

இரண்டாவதாக தற்போதைய அரசும் இதே விடயங்களில் பாராமுகமாக இருக்கத் தொடங்கியதைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட மக்கள் அச்செயற்பாட்டைத் தொடரவிடாது தமது எதிர்ப்பைப் போராட்டங்கள் ஊடாக வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

நல்லாட்சி என்ற கோதாவில் இறங்கிய புதிய அரசினால் "கொடுங்கரம்" கொண்டு இந்த மக்கள் போராட்டத்தை அடக்க முடியாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி என்ற கோதாவில் இறங்கியுள்ள இந்த அரசினாலும் முன்னைய நடவடிக்கைகளே ஏன் தொடர்கின்றன என்ற கேள்வி எம்முன் எழுகின்றது.

இங்கு புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய செய்தி யாதெனில் பழைய ஆட்சியின் புதிய முகமொன்றே எம்முன் அறிமுகமாகியுள்ளதேயொழிய முன்னைய ஆட்சியின் பெரும்பாலான பண்புகள் அவ்வாறோ இந்த ஆட்சியிலும் தொடர்கின்றன என்பதையே!

ஏனெனில் முன்னைய ஆட்சியின் அமைச்சர்கள் பலர் தற்போதைய ஆட்சியிலும் அமைச்சுப் பதவிகளை நிரப்பியிருப்பதுடன் அவர்களின் கையாட்களாகக் கிராம மற்றும் மாவட்ட மட்டங்களில் செயற்பட்டவர்களின் கை தற்போதும் அந்தப் பிரதேசங்களில் ஓங்கியிருக்கின்றதையே காண முடிகின்றது.

இதனால் கீழ் மட்டத்தில் மக்களின் குறைகள் என்னவோ தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. முன்னைய காலகட்டத்தில் அரசாட்சி செய்பவை சிங்களக் கட்சிகளாகவும் தமிழருக்காகப் போராடுபவை தமிழ்க் கட்சியாகவும் இருந்தன. ஆனால் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் கூட்டாண்மையினால் தமிழரால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்க் கட்சியும் அரசுடன் இணைந்திருக்கின்றது.

இதனைக் கிழக்கு மாகாண ஆட்சியில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்துவதுடன் தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையில் சந்திரிக்கா அம்மையார் பேசும் போது ஆட்சியில் தமிழக்கட்சியின் பங்களிப்புள்ளது என்று குறிப்பிட்டதும் தெளிவுபடுத்துகின்றது.

அதனை மேலும் உறுதிப்படுத்தும் முகமாக குறிப்பாக திருகோணமலையில் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட காணாமற்போனோருக்கான பகிஷ்கரிப்பு, சம்பூர் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி நடைபெறவிருந்த பகிஷ்கரிப்பு, இரால்குழி மக்களின் போராட்டத்தைக் கைவிடக் கோரியமை போன்ற போராட்டங்களை தமிழ்த் தரப்பே எதிர்த்திருப்பது அவர்களும் அரசின் பங்காளிகளாகச் செயற்படுவதை வெளிப்படுத்தியுள்ளது.

எனவே தமிழ் மக்கள் கைவிடப்பட்டுள்ள நிலையில் போராட்டங்களை முன்னெடுப்பதே ஒரே வழி!

## சமாதான நீதவான்



(அச்சுதன்)

திருகோணமலை தோப்பூரைப் பிறப்பிடமாகவும், அல்லை நகர் 06ம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட அப்துல் றகுமான் நஜீமா உம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வாரன ஏ.ஆர். முகம்மட் லரீப் (ஆசிரியர்) அவர்கள் மூதூர் மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஜனாப் ஐ.என் றிஸ்வான் அவர்கள் முன்னிலையில் திருகோணமலை மாவட்ட நீதி நிருவாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்

## இடமாற்றங்களை வழங்குங்கள்

### பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்கக்கோரி கிழக்கு மாகாண சபையின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் கடந்த பல வருடங்களாக திருகோணமலை மாவட்டத்தில் பணியாற்றிவரும் தமக்கு உரிய முறையில் இடமாற்றம் வழங்க வேண்டும் என்று எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

புதிய நியமனங்கள் வழங்கும்போது, சொந்த மாவட்டங்களில் பணிபுரிவதற்குரிய வகையில் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபிஸ் நஸீர் அஹமட்டிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி வெற்றிடங்களை இனங்கண்டு சொந்த மாவட்டத்தில் பணியாற்ற நடவடிக்கை எடுப்பதாக இதன்போது கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு உறுதியளித்தார்.



## "அநீதி இழைக்கப் பட்ட ஆசிரியர்கள் சந்தியுங்கள்"

### கிழக்கின் முதலமைச்சர்

"கிழக்கு மாகாணத்தில் இம்முறை பயிற்சி முடித்து வெளியான ஆசிரியர்களுக்கு கிழக்கு மாகாணம் தவிர வேறு மாகாணங்களில் நியமனம் வழங்கப்பட்டிருந்தால் அவ்வாறான ஆசிரியர்கள் தன்னை உடனடியாகச் சந்திக்கவும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

சுமார் 1860 க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் கிழக்கில் இருந்தும், கிழக்கு மாகாண ஆசிரியர்களை வெளி மாகாணங்களுக்கு அனுப்பி இருக்கும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரைக் கண்டித்த முதலமைச்சர் உடனடியாக குறிப்பிட்ட ஆசிரியர்களை கிழக்கு மாகாண சபைக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு அநீதி இழைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

## 10 ஆண்டுகளின் பின் சம்பூரில் மரணக் கிரியைகள்

சம்பூர் மக்கள் தமது பூர்வீக சம்பூர் மயானத்தில் 10 ஆண்டுகளுக்கு பின் அமரர் செல்லையா இராசமாணிக்கம் அவர்களின் மரணக்கிரியைகளைக் கடந்த 10.05.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று நிகழ்த்த அனுமதிக்கப்பட்டனர். (அச்சுதன்)





## காணி அபிவிருத்தி அமைச்சர் காளி கோயிலுக்கு வருகை

காணி அபிவிருத்தி அமைச்சர் எம் கே டி எ எஸ் குணவர்த்தன கடந்த 12ம்திகதி முள்ளிபொத்தானை கல்மெட்டியாவ தெற்கு பத்ரகாளி அம்மன் தேவலாயத்துக்கு விஜயம் செய்து பூஜை வழிபாட்டில் ஈடுபட்டார். அந் நிகழ்வில் காவல்துறை கிழக்கு மாகண பிரதி காவல் மா அதிபர் உட்பட பல காவல்துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(அப்துல் ஹலீம்)



## "கொட்டியாபுரச் சிங்கம்" அறிமுக விழா

வைத்திய கலாநிதி அ. சதீஸ்குமார் எழுதிய கொட்டியாபுரத்து சிங்கம் எனும் வரலாற்று குறுநாவலின் அறிமுக விழா கவிஞர் மூதூர் முகைதீன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10.05.2015) மூதூர் அந்நஹ்ஹார் மகளிர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இன்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி க.வெற்றிவேல், சிறப்புப் பிரதியை க.தேவகடாட்சம் ஆகியோர் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். நிகழ்வில் ஏ.எஸ்.உபைத்துல்லா, கே.எம்.அமிர்தீன், கே.எம்.இக்பால், அமானுல்லா நூலாசிரியருடன் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

(அச்சுதன்)



## ஜெலி உண்ட மாணவிகள் வைத்தியசாலையில்

திருகோணமலை அபயபுர சிங்கள மஹா வித்தியாலய மாணவிகள் 12 பேர் உணவு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த 14ம் திகதி இவர்கள் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த திகதியில் ஒன்பது வயதுடைய மாணவிகள் காலை வேளையில் கடையொன்றில் ஜெலி வாங்கி சாப்பிட்டதாகவும் அதனையடுத்து வாந்திபேதி ஏற்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாகக் காவல்துறை விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(யாசின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேற்றக் கோரிக்கை ஆர்ப்பாட்டம்



வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு அடிப்படை வசதிகளை செய்துகொடுத்து அவர்களின் சொந்த நிலத்தில் மீள்குடியேற்றுமாறு கோரி நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு, ஏறாவூர் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், இனவாதம் கக்கும் ஊடகங்களையும் செய்திகளை திரிபுபடுத்தும் ஊடகங்களையும் தாம் கண்டிப்பதாக கோஷம் எழுப்பினர்.

ஏறாவூர் முஹைதீன் ஜு"ம்மா பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்ததும் பெரிய பதாதையுடன் கொழும்பு– மட்டக்களப்பு நெடுஞ்சாலையூடாக பேரணியாக வந்து ஏறாவூர் நகரசபை முன்றலில் நகரபிதா எம்.ஐ.எம்.தஸ்லீமிடம் "வடக்கில் வாழ்ந்த ஒட்டுமொத்த முஸ்லிம்களும் வெளியேற்றப்பட்டு, இப்பொழுது 30 வருடங்களாகின்றது. இருந்தபோதிலும், அவர்கள் மீள்குடியேற்றப்படவில்லை. சுமார் 100 அகதி முகாம்களில் இந்த வடபகுதி முஸ்லிம்கள் அல்லற்பட நேர்ந்தது. அகதிகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 5,700 குடும்பங்கள் தாம் பூர்வீகமாக வாழ்ந்த, தற்போது காடுகள் அடர்ந்து கிடக்கும் முசலிப் பிரதேசத்தில் அரசாங்க அங்கிகாரத்துடன் தமது சொந்தச் செலவுகளில் மீள் குடியமர முயற்சிக்கின்றபோது இனவாத சக்திகள் அதனைத் தடுத்து வருகின்றன. எனவே, இந்த இனவாத ஊடகங்களின் போக்கை கண்டிப்பதுடன், வெளியே-ற்றப்பட்ட அனைத்து வடபகுதி முஸ்லிம்களையும் மீள்குடியேற்றம் செய்யுமாறு கோருகின்றோம்" என குறிப்பிடப்பட்ட மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## லொறியும் மோ.வண்டியும் மோதல்




களுவாஞ்சிக்குடி பகுதியில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. லொறி சராதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது. குறித்த விபத்தில் 68 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார். காவல்துறையினர் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## தற்கொலை மரணம் உறுதி

இருதயபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை தனக்குத் தானே மண்ணெண்ணையை ஊற்றி தீ வைத்துக் கொண்ட க.நளாயினி (வயது 40) என்பவர் மறுநாள் உயிரிழந்துள்ளார். திங்கட்கிழமை பிற்பகல் தீ வைத்துக் கொண்ட இவரை உறவினர்கள் உடனடியான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரின் மரண விசாரணை மேற்படி போதனா வைத்தியசாலையில் காத்தான்குடி வடக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ச.கணேசதாஸினால் நடத்தப்பட்டது. பிரேத பரிசோதனை செய்த சட்ட வைத்தியர் யாப்பா பண்டார தீ காரணமாக 90 வீதம் உடல் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிக்கை சமர்ப்பித்தார். தற்கொலை மரணம் என்று மரண விசாரணை அதிகாரி அறிக்கை வழங்கினார்.

## வெளி மாகாண நியமனங்கள் ரத்து

ரவைதீன்

குறிப்பிட்ட ஆசிரியர்களை உடனடியாக அவரவர் மாவட்டத்துக்கு மாற்றவேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு வெளி-மாகாணத்துக்கு வழங்கிய அனைத்து நியமனங்களும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இன்று ஸ்ரீ.மு.கா தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி ஆகியோர் நேற்று காலை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமை சந்தித்து உரையாடியதன் பயனாக உடனடியாக அமுல் படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள அனைவருக்கும் அவரவர் மாவட்டத்துக்கு நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தொடர்ந்து நால்வர் பலி

கடந்த வியாழக்கிழமை கவந்தாறுமூலை பேக் ஹவுஸ் வீதி பலாச்சோலையைச் சேர்ந்த கந்தையா பத்மநாதன் (வயது 55) என்பவர் கரடியனாறுக்குட்பட்ட சந்தனமடு ஆற்றை கடப்பதற்கு முற்பட்ட போது காணாமல் போயுள்ளார் என்று உறவினர்கள் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. இவர் இரவுவேளையே ஆற்றில் காணாமல் போயுள்ளார். உறவினர்களும் ஊர்மக்களும் காவல்துறையினரின் உதவியுடன் இவரை தேடி வருகின்றனர்.

கடந்த 4 மாதகாலத்துக்குள் சந்தனமடு ஆற்றில் மூழ்கி மூவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சிகரெட் விற்றவருக்கு தண்டம்

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் திருப்பெருந்துறைப் பிரதேசத்திலுள்ள சிறுவன் ஒருவனுக்கு சிகரெட் விற்பனை செய்தமைக்காக வலையிறவு பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் தொடரப்பட்ட வழக்கில் சிகரெட் விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாவினால், கடந்த புதன்கிழமை 2,000ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகாரச்சட்டத்தின் கீழ், இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

18 வயதிற்குக் கீழுள்ளவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்யக் கூடாதென்பது மிகக் கடுமையாக இருந்து வரும் சட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெற்றிகரமாக நடாத்தப்பட்ட நடமாடும் சேவை

ரவைதீன்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களிடத்தில் காணப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு கிழக்கு மாகான சபை முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமதின் உத்தரவின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை கடந்த 14.05.2015 காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு நிறைவடைந்தது.

இந்நடமாடும் சேவையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பாகங்களில் இருந்தும் பொது மக்கள் வருகை தந்து தங்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நடமாடும்சேவையில் கிழக்கு மாகாண சபை சகல அமைச்சர்களும், அவர்களின் அதிகாரிகளும், சகல திணைக்களங்களும் கலந்து கொண்டு பொது மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கான தீர்வினை உடனே வழங்கி வைத்தனர்.

இடம்பெற்ற இந்நிகழ்வில் 1067 முறைப்பாடுகள் சமர்பிக்கப்பட்டு அதில் 672 முறைப்பாடுகளுக்கான தீர்வு உடனடியாக வழங்கி வைக்கப்பட்டது. குறிப்பிட்ட முறைப்பாட்டில் 395 முறைப்பாடுகளுக்கு விரைவில் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படவிருக்கிறது.

## ஆவணமின்றி மாடுகள் கடத்தல்



வாழைச்சேனையில் சட்டவிரோதமாக 14 மாடுகளை ஏற்றிவந்த வாகனத்துடன், இரண்டு சந்தேக நபர்களை வாழைச்சேனை காவல்துறையினர் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கைதுசெய்துள்ளதாக தெரிவித்தனர். புனாணை, ரிதிதென்ன பகுதியிலிருந்து கல்முனை பிரதேசத்துக்கு கொண்டுவரப்பட்ட-போதே, இந்த மாடுகளுடன் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த மாடுகளை ஏற்றிவந்த சந்தேக நபர்கள் இருவரும் கல்முனையைச் சேர்ந்தவர்கள் என்றும் மாடுகளை ஏற்றிச் செல்வதற்கான எந்தவித ஆவணங்களும் இவர்களிடம் இல்லை என்றும் வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்தனர்.

## 510,000 ரூபா பண மோசடி

வெளிநாடு அனுப்புவதாக கூறி அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, பள்ளிக்குடியிருப்பு, ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஏழு பேரிடம் இருந்து 5இலட்சத்து 10 ஆயிரம் ரூபா (510 000.00) பணத்தைப்பெற்று வெளிநாடு அனுப்பாமல் ஏமாற்றி மோசடி செய்த அக்கரைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த நபரெருவரை அக்கரைப்பற்று காவல்துறையினர் கைது செய்து அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது வாங்கிய பணம் முழுவதையும் அவரவருக்கு வழங்குவேன் என உறுதியளித்ததையடுத்து குறித்த நபரை நீதிபதி பிணையில் விடுவித்து அடுத்த மாதம் 4 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# கொழும்பு நூலக சிற்றுண்டிக்கு தடை

கொழும்பு பொது நூலக சிற்றுண்டிச்சாலை பழுதான உணவுகளை விற்பனை செய்ததால் நேற்று சீல் வைக்கப்பட்டுள்ளது. சுகாதாரமற்ற, காலாவதியான உணவுப் பண்டங்களை விற்பனை செய்வதாகக் கூறி நுகர்வோர் வழங்கிய முறைப்பாடுகளையடுத்து சிற்றுண்டிச்சாலையை நுகர்வோர் அதிகாரசபை சுற்றிவளைத்துள்ளது. இதன்போது காலாவதியான உணவுப் பண்டங்கள், சோஸ் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் சில உணவுகளில் பூச்சிகள் இருந்துள்ளமையையும், அவ்விடம் சுத்தமான முறையில் பேணப்படாமையையும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இதனையடுத்து சிற்றுண்டிச்சாலையை அதிகாரிகள் சீல் வைத்து மூடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## படுகொலை செய்யப்பட்ட மாணவிக்காக பல்வேறு அமைப்புக்கள் எதிர்ப்பு

புங்குடுதீவு பிரதேச பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுவந்த அந்த மாணவி கடந்த புதன்கிழமை பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பாத நிலையில் அவரது பெற்றோர் காவல்துறையில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மாணவியின் சடலம் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன் சடலத்தில் காயங்கள் காணப்பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் குறித்த மாணவியின் சடலம் பாழடைந்த வீடொன்றினுள் இருந்து 14.05.2015 அன்று மீட்கப்பட்டது. இது தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப் படுகொலையை கண்டித்து யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டங்கள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. பல பாடசாலைகளும் பல்கலைக்கழகமும் தமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.





## பாலியல் இலஞ்சம் - அதிபருக்குச் சிறை

பிள்ளையைத் தரம் ஒன்றில் சேர்ப்பதற்காகச் சென்ற தாய் ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய கொட்டாவை பிரதேச பாடசாலை ஒன்றின் அதிபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

வழக்கு விசாரணைகளின்போது குறித்த அதிபர் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதற்கமைய, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜராங்கனி பெரேரா, குற்றவாளிக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 8 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

## கோத்தாவைக் கைதுசெய்வதைத் தடுக்கும் ஆணையில் சந்தேகங்கள் - ரணில் தெரிவிப்பு

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்ய இடைக்கால தடை விதித்து, உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் குழாம் வழங்கிய உத்தரவில் குழப்பங்கள் காணப்படுவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்ய இடைக்கால தடை விதித்து, உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் குழாம் வழங்கிய உத்தரவில் குழப்பங்கள் காணப்படுவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு எதிராக கோத்தபாய ராஜபக்சவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் அடிப்படையில், இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை அவரை கைது செய்ய இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூன்று நீதியரசர்களில் ஒருவர் விசாரணைக்கு சற்று முன்னர் விலகிய நிலையில் இருவர் மாத்திரமே இந்த உத்தரவை பிறப்பித்தனர் என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குப்பைத் தொட்டியிலிருந்த சிசு



கொழும்பு கிரான்பாஸ், ஸ்ரேஸ் வீதியில் உள்ள குப்பை தொட்டியில் இருந்து சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பிரதேசவாசியொருவரினால், கிரான்பாஸ் காவல் நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்தே சிசு மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது. குறித்த சிசு சுமார் 6 அல்லது 7 மாதத்தை கொண்டதாக இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## பின்னணியில் ரணிலுமா?

கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்படுவதில் இருந்து கடந்த தினம் இறுதி நேரத்தில் தப்பியுள்ளார். அவர் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு விசாரணக்காக சென்றிருந்தால் கைது செய்யப்பட்டிருப்பார். இதன்காரணமாகவே அவர் அதற்கு சமுகமளித்திருக்கவில்லை. மாறாக அவர் நீதின்றத்தில் அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்து, கைது செய்யப்படுவதில் இருந்து இடைக்கால தடை உத்தரவை பெற்றுள்ளார். இதன் பின்னணியில்



ரணில் விக்ரமசிங்கவும், சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளதாக, ஆங்கில ஊடகம் ஒன்று சந்தேகம் வெளியிட்டுள்ளது.

## கவனயீர்ப்புப் போராட்டம்

நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள மரமொன்றில் ஏறியிருந்து ஒருவர் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். முறையற்ற சிகிச்சை காரணமாகவே தன்னுடைய மனைவி இறந்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து மகஸின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர். இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், நீண்டகாலமாக தமிழ் அரசியல் கைதிகளாக எம்முடன் இருந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் போதிய விரைவு மருத்துவ சேவையின்றி 14.05.2015 அன்று உயிரிழந்த சக நண்பன் சுந்தரம் சதீஸ் அவர்களின் இழப்பு எம்மைப் பெரிதும் துன்பமடைய வைத்துள்ளது. அதுதவிர இதற்கு முன்னரும் அமரர்களான தெய்வேந்திரம், நெல்சன், கோபி போன்ற தமிழ் அரசியல் கைதிகளும் இவ்வாறே உடனடி மருத்துவ



சேவையின்றி சிறைக்குள் சாவடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நீண்ட நெடுஞ்சிறை வாழ்வை அனுபவித்து மன அழுத்தங்களால் பாதிக்கப்பட்டு இறப்போரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. எனவே இவற்றுக்கான தீர்வை வலியுறுத்தி ஒரு நாள் உணவுத் தவிர்ப்பை மேற்கொள்ள எண்ணுகிறோம் என எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்வதாக தெரிவிப்பு

டுபாய் மெரியட் ஹோட்டலின் உரிமை தன்னுடையதல்ல என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அமெரிக்க டொலர் 4.8 கோடி (634.03 கோடி ரூபாய்) டுபாய் மெரியட் ஹோட்டலும், அமெரிக்க டொலர் 19 கோடி (2509.71 கோடி ரூபாய்) உருக்கு திணைக்களமும் இந்த ஹோட்டலுக்கு முதலீடு செய்துள்ளது. இவ்வாறிருக்கையில் நிதி மோசடி விசாரணை பிரிவு தனக்கு எதிராக பொய்யான பிரசாரங்களை முன்னெடுக்கின்றது என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நந்தன லொக்கு விதான என்ற பெயரில் தான்தான் அந்த ஹோட்டலில் பங்குதாரராக இருப்பதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுத்தேர்தலுக்கு முன்னர், இவ்வாறான பிரசாரங்கள் எதிரணியினரால் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாவனைக்குதவாத 5,500லீ எண்ணெய்

மனித பாவனைக்கு உதவாத 5,500 லீற்றர் தேங்காய் எண்ணெயை, பொல்கஸ்ஓவிட்ட பகுதியிலிருந்து கைப்பற்றியதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்தது. கம்பஹா பிரதேசத்திலுள்ள தேங்காய் எண்ணெய் தயாரிப்பு நிலையமொன்றிலிருந்தே மேற்படி எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவ்வதிகாரசபை கூறியது. இந்த தேங்காய் எண்ணெயின் பெறுமதி 15 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க பகுப்பாய்வு அதிகாரியின் அறிக்கையின் பின்னர், மேற்படி எண்ணெய் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை மேலும் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## மீண்டும் இலங்கைக்கு சொல்ஹெய்ம்



தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு மின்னஞ்சல் மூலமாக வழங்கிய விசேட செவ்வியில், இவ்வருடப் பிற்பகுதியில் இலங்கை வருவேன் என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைத்தீவு முழுவதிலும் துரிதமான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடைவதற்கான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக இலங்கை அரசுடனும் புலம்பெயர் தமிழர்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து கடுமையாகப் பணியாற்றுவேன் என்றும் கூறியுள்ளார்.

## தீவிரவாதிகளை மணந்த மூவர் தப்பியோட்டம்

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் சேர இங்கிலாந்து தலைநகர் பிரித்தானியாவிலிருந்து ஷமீமா பேகம், அமீரா அபாஸ், கதீஜா சுல்தானா ஆகியோர் பெற்றோருக்கு தெரியாமல் விமானம் மூலம் கடந்த பிப்ரவரி மாதம் துருக்கி கிளம்பினர்.

இங்கிலாந்தில் இருந்து துருக்கி சென்ற மாணவிகள் அங்கிருந்து சிரியா சென்று ஐ.எஸ் தீவிரவாதிகளை திருமணம் செய்துள்ளனர். அந்த 3 பேரும் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொசுல் நகரில் இருந்து தப்பியோடிய மூன்று மாணவிகளை தீவிரவாதிகள் தேடி வருகிறார்கள். அந்த 3 பேரும் தீவிரவாதம் பிடிக்காமல் தான் தப்பியோடியிருக்க வேண்டும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## செருப்புத் தொழிற்சாலையில் தீ 72பேர் பலி

பிலிப்பைன்ஸ் தலைநகரின் புறநகரப் பகுதியொன்றிலுள்ள பாதணி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தில் குறைந்தது 72 பேர் பலியாகியுள்ளனர். இந்தத் தீ அனர்த்தம் காரணமாக அந்தத் தொழிற்சாலை முழுமையாக அழிவடைந்துள்ளது. அந்த தொழிற்சாலையில் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நியமத் தராதரங்கள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படாது வந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

தொழிற்சாலையில் இடம்பெற்ற பொருத்து வேலையின் போது அந்த தொழிற்சாலை வாசலிலிருந்த தீப்பற்றக் கூடிய இரசாயனங்கள் எரிந்தமை காரணமாகவே இந்த அனர்த்தம்



## மதிப்பளிக்காமையால் மரணதண்டனை



கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி பியோங்கொங்கில் அமைந்துள்ள கங் கொன் இராணுவ அக்கடமியில் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களுக்கு முன்னால், விமான எதிர்ப்பு துப்பாக்கியால் குறுகிய துாரத்தில் வைத்து வடகொரியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஹியோன் யொங்க் சோல் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகொரிய தலைவர் கிம் ஜொங் உன் பங்குபற்றிய நிகழ்வொன்றில் ஹியோன் யொங்க் சோல் தூங்கிவிட்டதாகவும் வடகொரிய தலைவரின் உத்தரவுகளை நிறைவேற்றவில்லை யெனவும் குற்றஞ்சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தென்கொரிய புலனாய்வு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## 39 இந்தியர்கள் ஐ.எஸ்.ஐ இடம்

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான படை தாக்குதல் நடத்திவருகிறது. இரு நாடுகளிலும் கிளர்ச்சி ஏற்பட்ட போது இந்திய அரசு பெரும் நடவடிக்கை எடுத்து இந்தியர்களை மீட்டு வந்தது. இருப்பினும் இந்தியர்கள் சிலர் அங்கு சிக்கியிருப்பதாக கூறப்பட்டது. இந்தியாவில் இருக்கும் அவர்களது உறவினர்களும் இவ்விவகாரம் தொடர்பாக அரசிடம் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 39 இந்தியர்களும் உயிருடன் உள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார். இந்த 39 பேரும் கொல்லப்பட்டு விட்டதாக இவர்களுடன் பிடிபட்டு பின்னர் தப்பி வந்த ஒருவர் தெரிவித்திருந்த நிலையில், அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## இன்னுமொரு வாக்கெடுப்பு இனி இல்லை

பிரிட்டனிலிருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதா இல்லையா என்பது தொடர்பாக கடந்த வருடம் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் பிரிட்டனுடன் இணைந்தே இருப்பதென மக்கள் தீர்மானித்திருந்தனர். இந்நிலையில் பிரிட்டிஷ் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெற்ற நிலையில் பெரும்பான்மை வெற்றிபெற்ற கமரூன் ஏற்கனவே உள்ள சட்டங்களுக்கு அமைவாக ஸ்கொட்லாந்துக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படும் என கூறியதுடன் மற்றொரு சர்வஜன வாக்கெடுப்புக்கு இடமில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

## பழங்குடியுடன் ஐக்கியமான இளவரசர் ஹரி



நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய இளவரசர் ஹரி அங்கு வாழும் மவுரி பழங்குடி மக்களை சந்தித்துள்ளார். பழங்குடி மக்களின் போர் நடனக்கலையை கற்றுக் கொண்ட ஹரி, மவுரி மக்களின் பாரம்பரிய வரவேற்பை ஏற்றுக் கொண்டார். பிரித்தானிய இளவரசர் என்றாலும் பழங்குடி மக்களின் வழக்கப்படி அவர்தான் துடுப்பு போட வேண்டும். எனவே, வாங்கனய் ஆற்றில் 40 நிமிடங்கள், பழங்குடி மக்களுடன் துடுப்பு போட்டு பயணித்துள்ளார். மேலும், அவர்களிடமிருந்து விடைபெறும்போது அவர்கள் வழக்கப்படியே முகத்தோடு முகத்தை நேருக்கு நேராக இணைத்து மூக்கும் மூக்கும் உரசும்படி ஹரி விடைபெற்றுள்ளார்.

## பெண் உறுப்பு அழிப்பு (மூடநம்பிக்கை)

எகிப்து உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளில் பெண் உறுப்பு அழித்தல் எனப்படும் மூடபழக்கம் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான எகிப்தில் திருமணமான பெண்களில் 92 சதவீதத்தினர் பெண் உறுப்பு அழித்தல் பழக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் இந்த நிகழ்வின் போது சுகாதாரமற்ற கத்தி, கத்திரிகோல், உடைந்த கண்ணாடி துகல்கள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இதனால் பல பெண்கள் கடுமையான விளைவுகளை சந்திக்கின்றனர். இது தொடர்பாக எகிப்தின் சுகாதார அமைச்சர் கூறுகையில், திருமணமான பெண்களில் 92 சதவீதத்தினர் பெண் உறுப்பு அழித்தல் மூலம் பாதிக்கப்படுகின்றனர் என்றார்.

## மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு

தமிழக முதலமைச்சராக இருந்தபோது ஜெயலலிதா, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்ந்ததாக, கடந்த 1996ஆம் ஆண்டில், சுப்ரமணியன் சுவாமி கொடுத்த புகாரின் பேரில், தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த வழக்கில், கடந்த ஆண்டு செப்டம்பர் 27ஆம் தேதி, ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேருக்கு, நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்து.



தற்பொழுது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உள்பட 4 பேரையும் விடுதலை செய்து கர்நாடக உயர் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பளித்துள்ளது.

## மொபைல் போனுக்காக கொலை



இங்கிலாந்தில் "அப்பிள்" மொபைல் போனிற்காக வாலிபர் ஒருவர் உயிரிழக்க காரணமான இரண்டு நபர்களுக்கு நீதிமன்றம் அதிரடியான தீர்ப்பை வழங்கியுள்ளது.

இரு நண்பர்கள் ஒன்றாக ரயில் நிலையத்தில் நின்றிருந்த வேளையில், கீழே விழுந்த நபர் உடல்நல குறைபாடு காரணமாக இவர்களை உதவிக்கு அழைத்துள்ளார். தூரத்திலிருந்து பார்த்த இவர்கள் இருவரும், அந்த வாலிபரின் நிலையை உணர்ந்தும் உதவாமல் அங்கிருந்து கிளம்பியுள்ளனர். மீண்டும் அந்த ரயில் நிலையத்திற்கு வந்த நண்பர்கள், அவரது சட்டையில் இருந்த விலையுயர்ந்த அப்பிள் மொபைல் போன் திருடிக்கொண்டு மீண்டும் அந்த நபரை அங்கேயே விட்டுவிட்டு கிளம்பியுள்ளனர்.

அந்த இளஞரின் இறப்பிற்கு இந்த இரண்டு பேரும் காரணமாக இல்லாமல் இருந்தாலும் கூட, அவர்களது மனிதாபமானமற்ற செயல் அவரது இறப்பிற்கு ஒரு காரணமாக அமைதால் இருவருக்கும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

## அமெரிக்காவில் தொடர் மர்மக் கொலைகள்

அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தில் மூன்று பெண்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மேலும் ஒரு பெண்ணின் உடல் கிடைத்துள்ளது. இந்த உடல்கள் மற்றும் உடல் பாகங்கள் குறித்து விரிவான தடயவியல் சோதனைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக நியூ பிரிட்டன் பொலிஸ் தலைவர் ஜேம்ஸ் வார்ட்வெல் கூறியுள்ளார். கொலையாளி யார் என்பது தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த நபர் தனது கொலை வெறியை தொடர முடியாத நிலையில் இருப்பதாக பொலிசார் நம்புவதாகவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வினையடி நீ எனக்கு.. 15



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

- உன் விரல்கள்
ஒவ்வொன்றும்
ஹைகூ கவிதைகள்
உற்றுப்பார்
ஒவ்வொரு விரலிலும்
மூன்று கவிதைகள்-

– துஷ்யந்த் சரவணராஜ்–

நேரம் பன்னிரண்டு மணியைக்காட்டவும் கடைசியாக விரிவுரையாற்ற வந்த அந்த ஆங்கில விரிவுரையாளர் தனது வகுப்பை முடித்துக் கொண்டார்.

அதுவரை மூன்று பேர் மாறி மாறி வந்து விரிவுரையாற்றிச் சென்றிருந்தனர். அன்று கடைசியாக ஆங்கில பாடத்திற்கு வந்திருந்த மகேஸ்வரன் மாஸ்டர் ஆங்கில கவிதைகள் பற்றி படிப்பித்தார். ஷேக்ஸ்பியர், ஷெல்லி, பைரன் என தொடர்ந்த பட்டியலில் நவீன ஆங்கில கவிதைகள் பற்றியும் அவர் கூறினார்.

அன்றைய பாடம் ரதனுக்கும், நிவேதாவுக்கும் மிகப் பயன்பாடாக இருந்தது. நிவேதாவுக்கு தனது முதல் நாள் வகுப்பே வெகு இன்றஸ்டாக இருப்பதாகப் பட்டது. தொடர்ந்து அவர் தனது விரிவுரையில் 'தமிழின் புதுக்கவிதை' என்ற வடிவம் ஆங்கில கவிதைகளில் இருந்து தோற்றம் பெற்றது தொடர்பாகவும் அமெரிக்க கவிஞர் "வால்ட் விட்மன்" பற்றியும் அவரின் 'புல்லின் இதழ்கள்' கவிதைத் தொகுதி பற்றியும் பேசினார்.

அவரது விரிவுரை வெறுமனே ஆங்கில வகுப்பாக இல்லாமல் இலக்கியம் கலந்த ஒரு வகுப்பாக இருந்தது. 'மொடன் பொயட்' எனக் கூறப்படும் புதுக் கவிதை எப்படி ஆங்கிலத்தில் பிரிவேர்ஸ், மொடன் வேர்ஸ் என அழைக்கப்படுகிறது என்பதாகவும் அது தமிழில் ந.பிச்சமூர்த்தி, பாரதியார் சி.சு.செல்லப்பாவின் கையெழுத்து சஞ்சிகை வழியாக தமிழில் காலூன்றியது தொடர்பாகவும், இலங்கையில் புதுக்கவிதை தமிழில் அறிமுகமாக முன்னரேயே சிங்கள மொழியில் "நிசந்தஸ்" என்ற பெயரில் அறிமுகமாகியது தொடர்பாகவும் அவரது விரிவுரை வெகு சுவாரசியமாக இருந்தது.

ரதனைப் பொறுத்தவரை அவர் கூறிய விடயங்கள் அவனுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும் அவன் புதிய விடயங்களை அறிந்து கொண்டான்.

அவர் தொடர்ந்து ஆங்கிலப்பாடலாசிரியர் ஆலன் ஜே.லெனர் பற்றி கூறினார் "பாட்டு எழுத ஒரு மாதம் அவகாசம் வேண்டும் என்று நம்ம ஊர்ப்பாடலாசிரியர்கள் மட்டும் கேட்பதில்லை.

ஆங்கில பாடாசிரியர் ஆலன் ஜே.லெனரும் ஒரு பாடலின் கடைசி வரியை எழுத இரண்டு வார அவகாசம் கேட்டார்....

இரண்டு வார முடிவில் "அடின்ட் இட் பி லவர்லி" என்ற அந்த பாடலின் கடைசி வரியை இப்படி எழுதியிருந்தார்.

ஆலன்- "லவர்லி.....
லவர்லி......லவர்லி
லவர்லி..."

வகுப்பு முடிந்ததைத் தொடர்ந்து அனைத்து ஜூனியர்ஸ் மாணவர்களும், மாணவிகளும் விரிவுரை மண்டபத்தை விட்டு வெளியே வரத் தொடங்கினர்.

அன்றைய வகுப்பிற்கு புதிதாக வந்திருந்த நிவேதாவை அனைத்து மாணவிகளும் சூழ்ந்து கொண்டனர். பரஸ்பர அறிமுகங்கள் நடைபெற்றன. விடுமுறைக்குப் பின்னர் அன்றே எல்லோரும் சந்தித்துக் கொண்டதினால் மாணவர்கள் மத்தியிலும் ஒரு கலகலப்பு இருந்தது.

கடந்த விடுமுறை தினங்களில் அடக்கி வைத்திருந்த கதைகள் அனைத்தும் அங்கு கொட்டித் தீர்க்கப்பட்டது. அப்படியிருந்தும் அவர்களிடையே ஒரு சிறியதான அச்ச உணர்வு இருந்தது.

மதிய உணவு நேரம் எங்கே சீனியர்ஸ் மாணவர்களிடையே மாட்டுப்பட்டு விடுவோமா என்ற பயமே அது.

ஜூனியர்ஸ் மாணவர்களுக்கு அன்று 1.00 மணிக்கு நுண்கலைப்-பீடத்தினால் நடாத்தப்படும் கருத்தரங்கு உண்டு எனவும், அனைவரையும் பிரதான மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறும் ஒரு அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது.

வகுப்பு முடிந்தவுடனேயே ஏனைய குரூப் மாணவர்களும் மாணவிகளும் அதே இடத்தில் வந்து கூடத் தொடங்கியதால் அவ்விடம் கலகலப்பாக இருந்தது.

நேரம் சென்று கொண்டு இருப்பதை அவதானித்த ரதன் தன்னுடன் கதைத்துக் கொண்டிருந்த நண்பர்களிடம் இருந்து மெதுவாக விடைபெற்று நிவேதாவிடம் வந்தான். நிவேதாவும் ரதன் வருவதைக் கண்டு தான் கதைத்துக்கொண்டிருந்த சக மாணவிகளிடம் விடை பெற்று ரதனிடம் வந்தாள். "நிவேதா 1.00 மணிக்கு பைன் ஆர்ட்டிஸ் டிப்பாட்மன்ட்" நடத்துகிற கருத்தரங்கு இருக்கு. எனவே நாம் விரைவாக கண்டினுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வருவம் என்ன" ரதன் சொல்லவும்.....

"ஓம்..... ரதன்.... பேசிக்கொண்டிருந்ததில நேரம் போவதே தெரியவில்லை....". இருவரும் கண்டினுக்குச் சென்றனர். ஏனைய மாணவ மாணவிகளும் கலைந்து செல்லத் தொடங்கினர். தமது வீட்டில் இருந்து வந்திருந்த மாணவர்களும் மாணவிகளும் சாப்பாடு கட்டிக்கொண்டு வந்திருந்ததினால் அந்த விரிவுரை மண்டபத்துக்குள் இருந்தே சாப்பிட ஆயத்தமாகினர். ரதன் சொல்லி வைத்தது போலவே முன்னால் செல்ல அவனுக்கு பின்னே நிவேதா மெல்ல மெல்ல சென்றாள்.

சீனியர்ஸ் கண்டுவிட்டால் இருவருக்கும் சேர்த்தே ராக்கிங் செய்வார்கள் என்பதனால் அந்த முன்னேற்பாட்டு நடவடிக்கையை கடைப்பிடித்தனர். இருவரும் கண்டினுக்குள் சென்றதும் ரதன் கண்டினின் உட்பக்கம் சென்றான். அதில் அதிகம் பேர் இருக்கவில்லை. ஓரிரு யூனியர்ஸ் மாணவர்களே இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ரதன் நிவேதாவை அமர சொல்லிவிட்டு கவுண்டருக்கு போய் இரண்டு சாப்பாட்டுப் பார்சலை எடுத்து வந்தான்.

அது மதிய வேளையாக இருந்ததால் எல்லோரும் சாப்பாட்டு மும்முறத்தில் இருந்தனர். சீனியர்ஸ் மாணவர்கள் கூட யூனியர்ஸ்சைக் கண்டும் அதிக அக்கறை எடுக்கவில்லை. அது யூனியர்ஸ் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக இருந்தது.

"ரதன் இன்றைய எனது முதல் வகுப்பே வெகு இன்டஸ்ட்டிங்காக இருந்தது...."

"...... ஆங்கில கவிதைகளைப்பற்றிய அந்த வகுப்பு நன்றாக

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

இருந்தது என்ன"

'நிவேதா' மகேஸ்வரன் மாஸ்டர் தனது வகுப்பை வெகு இயல்பாக நடாத்துவார். நீங்க பல வகுப்ப தவற விட்டிங்க.... எத்தனையோ முறை டெலி ராமா பற்றியெல்லாம் வகுப்பெடுத்திருக்கார். வெறுமனே பாடங்கள் என்றில்லாமல் பொது விசயங்கள் பற்றியும் கதைப்பார் ......"

"ரதன் நீங்க எப்படி.... ஒரே கண்டின் சாப்பாடுதான் சாப்பிடுவிங்களா...?"

"ஏன் சாப்பாடு சரியில்லையா...?" ரதன்சிரித்தபடி கேட்டான்

"பெரிசா நல்லம் என்று சொல்ல முடியாதுதான். எங்களுக்குப் பரவாயில்லை. உங்களப் போன்ற ஆண்களுக்கு இது காணாது தானே....???"

"இல்லை நிவேதா மேலதிகமாக தேவையென்றா எக்ஸ்ரா சாப்பாடு எடுக்க முடியும்... ஆனா இந்த சாப்பாடே எனக்குப் போதும்"

"நான் ஒரே இங்க எடுப்பதில்லை. வாரத்தில் அதிகமாக நான் லஞ் டைமுக்கு டவுனுக்குப் போய் விடுவன். அங்கு ஒரு வீட்டில ஏற்பாடு செய்திருப்பதால்.... அங்கு போய் லஞ் எடுப்பன்.....?"

"ரதன்..... நான் ஹொஸ்டலில்தான் தங்க வேண்டும் போல இருக்கு.... 'பைன்ஆர்ட்ஸ்' கருத்தரங்கு முடிய கொஸ்டல் விசயம் பற்றி கதைப்பம் என்ன...."

"ஓம்.... வெல்பெயாவுக்குப் போய் போம் எடுத்துக் கொடுப்பம். நாளைக்கு வந்ததும் செங்கலடியில் உள்ள மக்கள் வங்கி கிளைக்குப் போய்.... ஹொஸ்டல் பீஸ் கட்டி வந்து கொடுத்தால் நாளைக்கே ரூமுக்குப் போகலாம்."

"ரதன் நாளைக்கு அதிகமாக மாமாவும் ரிங்கோ போய்விடுவார் போல தெரிகிறது.... எனவே எப்படியாவது நாளைக்கு ஹொஸ்டலுக்குப் போகணும்" "ஏன் சண்முகநாதன் மாமா வீட்டில தங்கமுடியாதா நிவேதா...." "அங்கு தங்கலாம் தான்... ஆனா, தினமும் டவுனுக்கு போய் வாரது கஷ்டமானதா இருக்கும் தானே.... கொஸ்டல் வாழ்க்கையை அனுபவிச்சாதானே.... ரதன்... ஒரு சுகம் இருக்கும்....? நீங்களும் வந்திடுவீங்கதானே..."

"நான் இன்னமும் ஹொஸ்டலுக்க்கு வாறது பற்றி யோசிக்கல்ல..." "என்னது.... நீங்க ஹொஸ்டலுக்கு வர மாட்டிங்களா என்ன சொல்றீங்க.... ரதன்..... நீங்க இல்லாம.... நான் மட்டும் ஹொஸ்டலில் எப்படி தங்க முடியும்...? நிவேதாவின் அந்த ஏக்கமும் தவிப்பும் ரதனுக்குப் பிடித்திருந்தது. அவள் தனக்காக தனது வருகைக்காக காத்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

தனக்கான வருகையை ஒரு அழகான இளம் பெண் எதிர்பார்த்து இருப்பதும் அவனது அருகாமையை அவள் விரும்புவதும் ஆணுக்கு ஒரு தைரியத்தை கொடுக்கிறது அதே வேளை அவனுக்கு அவள் மீதான பிடிப்பையும் மேலும் அதிகமாக்குகிறது. அங்கும் அப்படித்தான் ரதனின் வருகையை நிவேதா ஆவலுடன் எதிர்பார்த்தாள். அவள் தனது வருகையை எதிர்பார்க்கிறாள் என்பது ரதனுக்கு நிவேதா மீது அதிகமான பிடிப்பை ஏற்படுத்தியது.

அவனது இதய பிரதேசமெங்கும் நிவேதா என்ற மலரின் வாசனை மெல்ல மெல்ல மணம் பரப்பி முழுப் பிரதேசத்தையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

காதலுக்கு மணம் உண்டு. அதனை மனசு தான் அறியும் நிவேதா மீதான ரதனின் அன்பும் ரதனின் மீதான நிவேதாவின் பாசமும்.... மெல்ல மெல்ல.... காதல் கதவுகளைத் திறக்கத் தொடங்கியது. அவர்களை அறியாமலேயே அவர்கள் இருவரும் தமது பேச்சுக்கள் மூலம் நெருங்கிக் கொண்டனர். நேசம் அவர்கள் கண்ணை மறைத்தது. அது அவர்களுக்கிடையேயான தடைகளை அகற்றியது.

இருவரும் சாப்பிட்டு முடிக்கவும் நேரம் 12.45க் காட்டவும் சரியாக இருந்தது. கெண்டீன் வானொலியில் இலங்கை வர்த்தக சேவையின் செய்தி வாசிப்பு ஆரம்பமாகியிருந்தது. ரதன் தனது பார்சல் சுற்றிய பேப்பரையும் நிவேதாவின் பேப்பரையும் ஒன்றாக எடுத்து பக்கத்தில் இருந்த பக்கட்டுக்குள் வீசிவிட்டு வந்தான். இருவரும் ஆளுக்கொரு பைப்பில் தமது கரங்களை கழுவிவிட்டு தண்ணீர் அருந்திவிட்டு வந்தனர். "நிவேதா இப்படியே மெயின் ஹோலுக்குப் போவம். அங்குதான் கருத்தரங்கு நடக்கவிருக்கிறது. ரதனை தொடர்ந்து நிவேதாவும் சென்றாள்.

"மெயின் ஹோல் களைகட்டியிருந்தது. சகல யூனியர்ஸ் மாணவர்களும் மாணவிகளும் அங்கு கூடியிருந்தனர். அவர்களது கலைப்பிரிவுக்கே அதிக மாணவர்கள் தெரிவாகியிருந்தனர். மொத்தமாக அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கூடியிருந்தனர். அதிலும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் இருந்தும் கலையில் ஆர்வமுள்ள சில மாணவர்களும் வந்திருந்தனர்.

நிவேதாவும் ரதனும் ஹோலுக்குள் போய் அமர்ந்த சில நிமிடங்களில் பைனாட்ஸ் டிப்பார்ட்மண்டுக்குப் பொறுப்பான கலாநிதி குருமூர்த்தி அவர்கள் வந்தார்.

அனைவருக்கும் வணக்கம் சொல்லிவிட்டு அவர் தனது பேச்சை ஆரம்பித்தார். அப்போதுதான் ரதன் அவரை சரியாகப்பார்த்தான். அவர் வேறு யாருமல்ல..... ரதனும் நிவேதாவும் திருமலையில் இருந்து ரயிலில் வரும்போது கல்லோயாவில் வைத்து மாறி ஏறிய கொழும்பு ரயிலில் அவர்களுக்கு எதிரே இருந்து வந்த பெரியவர்தான் அவர். பொலனறுவை ஸ்டேசனில் வைத்து அவருக்கும் சேர்த்து யோக்கட் வாங்கி கொடுத்தது ஞாபகத்திற்கு வந்தது. ரதனைப் போலவே நிவேதாவும் நினைத்துக் கொண்டு ரதனைத் திரும்பிப் பார்க்கவும் ரதனும் விளங்கியது போன்று சிரித்துக் கொண்டான்.

கலைப்பிரிவு பற்றியும் கலைப்பிரிவிலுள்ள பாடங்கள் பற்றியும் விளக்கிக் கூறிய அவர் நுண்கலைப் பாடம் தொடர்பாக விளக்கம் கொடுத்தார். பைனாட்ஸ் படிக்க விருப்பமானவர்கள் கையை உயர்த்துங்கள் என்று அவர் கேட்கவும் தொன்நூறு வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், மாணவிகளும் தமது கரங்களை உயர்த்தினர். ரதனும் நிவேதாவும் கூட தமது கரங்களை உயர்த்தினர். தொடர்ந்து அவர் பேசும்போது இன்னும் சில நாட்களுக்குப் பின்னர் உங்களுக்கு விரிவுரைகள் ஆரம்பமாக உள்ளன. எனவே இந்த வகுப்பை ஒரு அறிமுகமாக வைத்துக் கொள்வோம் என கூறிய அவர் மனித சமூகத் தோற்றம் பற்றிய சிறிய விரிவுரையுடன் மனித ஆரம்பம் பற்றியும் அதன் பரிணாம வளர்ச்சி பற்றியும் பேசிய அவர் "வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நாவலை வாசித்தவர்கள் உங்களில் யார்? கையை உயர்த்துங்கள்" என்றார். அதில் ஒருவர்கூட கையை உயர்த்தியதாக தெரியவில்லை. ஆனால் ரதன் அந்த நாவலை வாசித்திருந்ததால் கைகளை உயர்த்தினான். அதனை கண்டுகொண்ட அவர் "அந்த நாவலை எழுதியவர் பெயரென்ன கூறும்" என்றார். ரதன் எழுந்து "ராகுல்ய சாங்கிரித்தியாயன்" எனக் கூறவும் அதனை ஆமோதித்த அவர் அவனை அப்போதுதான் கண்டார். ரதனை ஏற்கனவே ரயிலில் கண்ட ஞாபகம் அவருக்கும் வந்திருக்க வேண்டும். மென்மையாக சிரித்துக் கொண்டார். தொடர்ந்து அவர் அவனது பெயரைக் கேட்டு அவனைப் பாராட்டிவிட்டு தனது பேச்சைத் தொடர்ந்தார்...... நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன...!


மேலும்.... ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## அனல் மின் நிலையம்



நனி சிறந்த நானிலம் கொண்ட பூமி
கனியும் காயும் பூவும் மொட்டும்
பூத்துக் குலுங்கும் புராதன வாழில்
,துவோ அனல்மின் நிலைய பூமி?

முருகைக் கல்லும் முகிழ்ந்த பவளப் பாறையும்
தெருவில்லாடும் தேடரிய மூலிகைகளும்
நிலை கொண்ட நித்திய பூமியில்
உலை வைப்பதேன்? -அனல்மின் நிலையத்தால்!

நிலத்தடி நீரெடுத்து நிலக்கரியும் சேர்த்தெடுத்து
பலத்துடனெடுத்த பண்ணிலத்தில்
கடல் நீர் கொண்டு குளிர்விக்கையில் -மண்
உடலெங்கும் உவராகுதே - அனல்மின்
நிலையத்தால்!

கந்தகவீரொட்சைட் காபனீரொட்சைட்
கலந்த அமில மழையில்
எந்தன் சந்ததி ,ங்கு வாழ்வது
எந்த வகையில்? - அனல்மின் நிலையத்தால்!

சம்பூர் சதீஸ்

## தமிழன் எழுப்பும் குரல்

தலை நிமிர்ந்து வாழ்ந்தவன் இன்று
தலை குனிந்து அழுகிறான்
உடல் வியர்க்க உழைத்தவன் - இன்று
உரிமை இழந்து தவிக்கிறான்

குரல் எழுப்பி அழுகிறான் - தன்
குறைகளைக் கொட்டித் தீர்க்கிறான்
சனத் தொகையும் அங்கில்லை.
செவிடர்களும் அங்கில்லை、
சபை முன்னே அவன் குரல்
இன்னும் ஒலிக்கவில்லை

சிறையினிலே அடைந்து கொண்டு
கம்பியிடையிலே மறைந்து கொண்டு
உறவுகளை பிரிந்து கொண்டு
தமிழன் எனும் பெருமையினை
இழந்துகொண்டு

தனிமையினை ஏற்று
தமிழன் எனும் தாகத்தினை
தீர்க்காது நிற்கும்
தமிழன் இவன் குரல் கேட்கிறதா?

நந்தீஸ்வரன் நித்தியா
தரம் 10பீ, மெதடிஸ்த மகளிர் கல்லூரி




## என் ஆன்மாவாய்

என்னை விடவும் - எதுவும்
பெரிதில்லை என்றிருந்தேன்
உன்
ஸ்பரிசத்தை உணரும் வரை
இனி நகரும் - என்
நாட்கள் அனைத்திலும்
நீ மட்டுமே
உயிர்த்திருப்பாய்
என் ஆன்மாவுக்குள்

- தன்யா -

## நன்றாம்!



கால் கடுக்குதையா - ஐயா,
காசைத் தாருங்கோவன்!
தோல் சுருங்குதையா - என்பும்
துண்டுபட்டதையா!

மக்கள் வங்கியல்லோ - ஐயா,
மறந்து போனதென்ன?
மிக்க பக்தியோடும் - காசை
மிக விரைந்து தாரும்!

ஓய்வில்லாதவேலை - செய்து
ஓய்ந்தவர்களல்லோ?
சாய்ந்து நிற்பதற்கும் - பின்னால்
தங்கை மார்களன்றோ?

ஆயுர்வேத எண்ணெய் - பூசி
அடிக்க வேண்டும் ஒத்து!
நோயைக் கூட்டிடாமல் - மூன்று
நொடிக்குள் முடித்தால் நன்றாம்!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)

## வழி. . . .

திருமலை சுந்தா



பழஞ்சோற்றைக் கொடுப்பதற்கு
மாடுகளின் வரவு தேடி . . .

காலையில் காத்திருக்க
தெரு மூளையில் அந்த
கொம்பு கறுப்பனொன்று
விரைந்து வருகின்றது

காகங்கள் கரைகின்றன
மனதை பிடித் திழுத்து
இழகியும் வழியும் விட
கொம்பனும் நெருங்கிட

காகங்கள் மீதி உணவுக்காய்
கொம்பனின் முதுகினில்.....

# வீரத் தமிழன் எல்லாளன் பற்றிய சிறு குறிப்பு



எல்லாளன் கி.மு 145 இல் இருந்து கி.மு 101 வரை அனுராதபுரத்தை த த தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன். இந்தத் தகவலைச் சிங்கள வரலாற்று ஆவணமான மகாவம்சம் பதிவுசெய்துள்ளது. இவனது ஆட்சிக்காலம் நீதியானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்ததாகப் பொதுவாக சிங்களச் சார்பான ஆவணமாக பார்க்கப்படும் மாகவம்சம் குறிப்பிடுகின்றது.

மகாவம்சத்தின்படி எல்லாளன் தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழ நாட்டைச் சேர்ந்த ஒருவன் ஆவான். இவன் "பெருமை மிக்க உஜு இனக்குழுவைச்" சேர்ந்தவன் என்று மகாவம்சம் கூறுகிறது.

ஆனால் எல்லாளன் ஈழவூரின் உத்தரதேசத்தை (தற்போதைய பூநகரி) சேர்ந்தவன் என்று சிலர் கருதுகிறார்கள். அதற்கான ஆதாரமாக, உத்தரதேசத்தில் குறுநில மன்னனாக எல்லாளன் முதலில் விளங்கியமையால் தான் வவுனிக்குளத்தை அக்காலவேளையில் கட்டியுள்ளான் என்பர். ஆங்கிலேய நாட்டவரான எச்.பாக்கர் மகாவம்சத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கேயமைந்த பெபிலாபியை பூநகரியின் தென்னெல்லையிலுள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத்தோற்றம் எல்லாளனின் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமெனக் கூறியுள்ளார்.

இலங்கையை 44 ஆண்டுகள் ஆண்ட தமிழ் மன்னன் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆண்டதாக ஆதாரபூர்வமான வரலாறு கூறுகிறது. சிங்களர்கள்தான் இலங்கையின் பூர்வக்குடிகள் என்று நிரூபிப்பதற்காக எழுதப்பட்ட நூல் "மகாவம்சம்." சிங்கள வம்சத்தை தோற்றுவித்தவன் விஜயன்தான் என்று அந்நூல் கூறுகிறது. ஆனால், அவன் இலங்கையில் காலடி வைக்கும்போதே, அங்கே குவேனி என்ற தமிழ் அரசி இருந்திருக்கிறாள் என்று அதே மகாவம்சம் குறிப்பிடுகிறது. அப்படியானால், விஜயனுக்கு முன்பே தமிழர்கள் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மகாவம்சமே ஒப்புக்கொள்கிறது. இலங்கையின் மற்ற பகுதிகள் காடுகளாக இருந்தபோது, அனுராதபுரத்தை பெரிய நகரமாக தமிழர்கள் உருவாக்கி, அங்கிருந்து ஆட்சி நடத்தியிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

விஜயன் தனக்கென்று ஒரு ராஜ்ஜியத்தை உருவாக்குவதற்கு முன்பே, அனுராதபுரத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நடந்திருக்கிறது. விஜயனின் வருகைக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே அனுராதபுரம் பெரிய நகரமாக இருந்திருக்கிறது என்பது, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு. அந்தக் காலத்தில் இந்தியாவில் உஜ்ஜயினி பெரிய நகரமாக இருந்தது. அதற்கு சமமாக அனுராதபுரம் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

**புகழ் பெற்ற தமிழ் மன்னன்.**

இலங்கைக்கு இந்தியப் பேரரசர் அசோகர் அனுப்பிய புத்த மதக் குழுவினர், அனுராதபுரத்தில் திசையன் என்ற தமிழ் மன்னனை சந்தித்தது பற்றி, பாலி மொழி வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. திசையன் இறந்த பிறகு, சேனன், குத்தன் என்ற இரு தமிழ் மன்னர்கள் 22 ஆண்டுகள் அனுராதபுரத்தில் நல்லாட்சி நடத்தினர். இவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர் எல்லாளன். சிங்களர்களைப் புகழ்வதற்காகவே எழுதப்பட்ட "மகாவம்சம்" நூலில், எல்லாளனின் வீரம் பற்றி உயர்வாகவே கூறப்பட்டுள்ளது. அவனுடைய குணநலன்கள், மனுநீதிச் சோழனின் இயல்பை ஒட்டி சித்தரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மன்னன் எல்லாளன் பற்றி மகாவம்சம் கூறுவதாவது. எல்லாளன், இயேசு கிறிஸ்துவுக்கு 235 ஆண்டுகளுக்கு முன்னதாகப் பிறந்தவன். அவன் அனுராதபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு, 44 ஆண்டுகள் ஆட்சி நடத்தினான். அவன் சோழ வம்சத்தை சேர்ந்தவன். நீதி தவறாதவன். அவன் தன் படுக்கை அறையில் ஒரு மணியை தொங்கவிட்டிருந்தான். அது, அரண்மனைக்கு வெளியே தொங்கவிடப்பட்டிருந்த ஒரு கயிற்றுடன் இணைக்கப்பட்டு இருந்தது. தங்களுடைய குறைகளை மன்னருக்குத் தெரிவிக்க, யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் மணியை அடிக்கலாம்.

ஒருமுறை, ஒரு பெண் அந்த மணியை அடித்தாள். எல்லாளன் அந்தப் பெண்ணை அழைத்து, "உன் குறை என்ன?" என்று கேட்டான். "உன் மகன் ரதத்தில் செல்லும்போது, என் கன்றுக்குட்டி மீது ரதத்தை ஏற்றிக் கொன்றுவிட்டான்" என்று கூறினாள். அதைக்கேட்ட எல்லாளன், தன் மகனையும் ரதத்தை ஏற்றி கொன்றுவிடுமாறு கட்டளையிட்டான். அக்கட்டளைப்படி இளவரசன் கொல்லப்பட்டான். (மனுநீதி சோழன் வரலாற்றிலும் இதே போன்ற சம்பவம் வருகிறது) ஒருமுறை எல்லாளன் ரதத்தில் செல்லும்போது, ரதம் மோதி புத்தர் கோவில் சேதம் அடைந்தது. ரதத்தில் இருந்து கீழே இறங்கிய எல்லாளன், கோவில் இடிந்ததற்காக மிகவும் வருந்தினான். உடனே மந்திரிகளை அழைத்து, "புத்தர் கோவிலை சேதப்படுத்திய நான் படுபாவி பெரிய குற்றவாளி. என்னைக் கொன்றுவிடுங்கள்" என்றான். அதற்கு மந்திரிகள் மறுத்துவிட்டனர். "நீங்கள் உங்களுக்கே மரண தண்டனை விதித்துக் கொள்வதை, புத்த பகவானே ஏற்கமாட்டார்" என்று கூறினர். "நீங்கள் உங்கள் உயிரைப் போக்கிக் கொள்வதற்கு பதிலாக, கோவிலை புதிதாகக் கட்டிக் கொடுத்து விடலாம் எனக் கூறி புதிதாக கட்டிக்கொடுக்கப்பட்டதாக வரலாறு சான்று பகர்கின்றது.

தொகுப்பு – கோபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனின் எதிர்பார்ப்பு

தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் அவர்களுக்கு சுயாட்சியுடன் கூடிய சம அந்தஸ்துடனான நியாயமான ஒரு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற உண்மையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்வார் என்ற நம்பிக்கை உள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு ஒரு உறுதியான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்ற நிலையில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பார்கள் என்று சர்வதேசம் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் ஒருபோதும் நாட்டினை பிரிக்கும்படி கூறவில்லை. இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சிமுறை வேண்டுமென்று கூட நாங்கள் கேட்கவில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு ஒரு நியாமான அரசியல்தீர்வு அவசியமாகும்.

ஒருநாட்டில் பிரச்சினைகள் தொடர்கதைகளாக இருக்க முடியாது. ஒரு கட்டத்தில் முடிவுகள் வந்தாக வேண்டும். எம்மைப் பொறுத்தவரை அவ்வாறான முடிவு வரவேண்டிய காலம் கனிந்துள்ளது என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் நாடு தீர்க்கமானதொரு கட்டத்தை அடைந்துள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதாவது தமிழ் மக்களுக்கு அவர்களது வரலாற்று ரீதியான பிரதேசங்களில் தீர்வு வழங்கப்பட வேண்டுமென்ற விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்வார் என்ற நம்பிக்கையை கூட்டமைப்பின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களை பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். காரணம் தமிழ் மக்களுக்கு நியாயமானதொரு அரசியல்தீர்வை வழங்குவதில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கையின்மையும் சந்தேகப் பார்வையும் கடந்த காலம் முழுவதும் மிகப்பெரிய பிரச்சினைகளாக காணப்பட்டு வந்தன. அந்த நிலை தற்போது கூட தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் அவதானிக்கின்றோம்.

தென்னிலங்கையில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கான அரசியல்தீர்வு தொடர்பான தவறான வழிகாட்டல்களும், சந்தேகத்திற்குரிய செயற்பாடுகளும் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதனால் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படுமிடத்து எங்கே நாடு இரண்டாகப் பிரிந்துவிடுமோ என்ற அச்சம் பெரும்பான்மை மக்கள் மத்தியில் பாரிய அளவில் வேரூன்றியுள்ளது.

இவ்வாறான பின்னணியிலேயே அதனை போக்கி தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்கக்கூடிய தலைவராக மைத்திரிபால சிறிசேன உருவெடுப்பார் என்ற நம்பிக்கையை கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.

நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னரான காலகட்டத்திலிருந்தே தமிழ் மக்கள் தமக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கவேண்டுமென்பதில் உறுதியாக இருந்து வந்துள்ளனர்.

இதற்கான போராட்டங்கள் கடந்த காலங்களில் பல வடிவங்களைப் பெற்றிருந்தன. எனினும் அனைத்து விதமான முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்த



வரலாற்றையே தமிழ் மக்கள் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

உதாரணமாக அண்மைக்கால வரலாற்றைப் பார்க்கும் போது 2002 மற்றும் 2003ம் ஆண்டுகளில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வந்த போதும் அவை இறுதியில் வெற்றியடையவில்லை.

இந்த இடத்தில் பதவியிலிருந்த அரசாங்கங்கள் இதயசுத்தியுடன் செயற்படாத நிலையில் தமிழ் மக்கள் தரப்பிலும் சரியான முறையில் விடயங்கள் அணுகப்பட்டதா என்ற கேள்விக்குறியும் எழுப்பப்படுகின்றது.

2003 ஆம் ஆண்டு ஒஸ்லோ பிரகடனம் வெளியிடப்பட்ட போது தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் இறுதியில் அனைத்து முயற்சிகளும் தோல்வியை சந்தித்தமையையே காணமுடிந்தது.

மாறாக அன்று சமஷ்டி குறித்து பேசிய நாடு இன்று அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை தாண்டுவதற்கு அச்சமடையும் நிலைக்கு சூழல் மாறிவிட்டது.

எனவே இந்த அரசியல் தீர்வு முயற்சியில் இரண்டு தரப்புகளும் சரிவர தமது அர்ப்பணிப்பை வெளிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

தென்னிலங்கையில் அரசாங்கம் இதய சுத்தியுடனான முறையிலும் ஆக்கபூர்வமான வழியிலும், தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்க முன்வரவேண்டுமென்பது வலியுறுத்தப்படுகின்ற அதேவேளை தமிழர் தரப்பிலும், இதய சுத்தியுடனான அர்ப்பணிப்பு இருக்கவேண்டியது அவசியமாகும்.

கடந்த மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் போது சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அவை கைகூடவில்லை.

குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் கடந்த அரசாங்கத்திற்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன. இந்த பேச்சுவார்த்தையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாரிய அர்ப்பணிப்பை வெளிக்காட்டியிருந்த போதும் கடந்த அரசாங்கமானது இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைகள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள சென்றிருந்த போதும் ஆளும் தரப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாமல் ஏமாற்றிய வரலாறும் காணப்படுகிறது.

இந்நிலையிலேயே தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பதவியில் உள்ள நிலையில் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினையான அரசியல் தீர்வு விவகாரத்திற்கு ஆக்கபூர்வமான தீர்வொன்றை பெற முடியும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தாங்கள் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு ஒருபோதும் முயற்சிக்க மாட்டோம் என்றும் ஐக்கிய இலங்கைக்குள் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எதிர்பார்ப்பதாகவும் வலியுறுத்தி வருகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை பயன்படுத்தி நீண்டகாலமாக நிலுவையில் இருக்கும் அரசியல் தீர்வுப் பிரச்சினைக்கு ஆரோக்கியமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிர்வாகம் முன்வர வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று தீர்வொன்றைக் காண்பதற்கு தற்போது கிடைத்துள்ள பொன்னான சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதும் முக்கியமானதாகும்.

இந்த விடயத்தில் அனைத்துத் தரப்புக்களும் தீர்க்கமான முறையிலும் ஆழமான அர்ப்பணிப்பின் ஊடாகவும் நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதே பிரதான தேவையாகவுள்ளது.

கடந்த கால வரலாற்றில் இடம்பெற்ற தவறுகளில் சிறந்த பாடங்களைக் கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டு தீர்வைக் காண வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தற்போது அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13வது திருத்தச் சட்டமானது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதி தீர்வாக அமையாது என்பது ஒரு பொதுவான கருத்தாகும்.

எனவே 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்றோ அல்லது பிரச்சினைக்கான தீர்வில் புதுவிதமான அணுமுறைகளைப் பின்பற்றியோ தீர்வொன்றைக் காணவேண்டும்.

எனவே நாட்டில் தற்போது காணப்படுகின்ற புதிய அரசியல் சூழலைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களும் முன்வரவேண்டும்.



**கடந்த அரசாங்கத்தின் போது சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றைப் பெற முடியவில்லை**

இந்த விடயத்தில் அரசாங்கமும் சரி, தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளும் சரி இதய சுத்தியுடனும் பொறுப்புடனும் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போது கிடைத்துள்ள இந்த பொன்னான சந்தர்ப்பத்தை எவரும் தவறவிட்டுவிடக்கூடாது.

தற்போதைய அரசாங்கத்தை உருவாக்குவதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகப் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளதால் தீர்வு விடயத்தில் குரலெழுப்பும் தார்மீக உரிமை கூட்டமைப்பிற்கு உள்ளது. எனவே இந்த அனைத்து விதமான சூழலையும் பயன்படுத்தி ஆக்கபூர்வமான தீர்வொன்றுக்காக அனைத்துத் தரப்பினரும் பயணிக்க வேண்டியது கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் என்றுமில்லாதவாறு அவதானத்தை செலுத்தியுள்ள நிலையில் அதனை உரிய முறையில் பயன்படுத்தி தீர்வைக் கண்டுவிடவேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு எந்தத் தரப்பும் முயற்சிக்கக்கூடாது. அதேநேரம் தமிழர் தரப்பும் மிகவும் நிதானத்துடனும் பொறுப்புடனும் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

- -www.tamilwin.com - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## இரு புதிய வெளியீடுகள்

அண்மையில் கூகுள் நிறுவனத்திற்காக Nexus ஸ்மார்ட் கைப்பேசிகளை LG நிறுவனம் வடிவமைத்து வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தது. ஆனால் தற்போது LG நிறுவனத்துடன் Huawei நிறுவனமும் கூகுளிற்காக ஸ்மார்ட் கைப்பேசிகளை வடிவமைக்கவுள்ளதாக , மற்றுமொரு தகவல் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. இதன்படி இந்த வருடம் கூகுள் நிறுவனம் இரு வகையான Nexus கைப்பேசிகளை அறிமுகம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பேப்லெட் சாதனை

யாஹூ நிறுவனத்துக்குச் சொந்தமான ஃபிளரி மொபைல் ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வின் போது போன் பயனாளிகள் பலரும் டேப்லெட்டின் ஆற்றல் இணைந்த பேப்லெட்களை வாங்கத் தொடங்கியிருப்பதாக தெரிவிக்கிறது. போனில் பேசும் நேரம் குறைந்த திரையைப் பார்த்தபடி படிப்பது, சேட் செய்வது, கேம் ஆடுவது ஆகிய செயல்களில் ஆர்வம் அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம்.

## 2ம் நிலைக்குப் போன ஜியோமி

Apple

சீனாவில் ஸ்மார்ட்போன் விற்பனையில் ஜியோமி நிறுவனம் முன்னணியில் இருந்து வந்துள்ளது. வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தின்படி ஜியோமி ஸ்மார்ட்போன்கள் விற்பனையை ஆப்பிள் முதல் முறையாக முந்தியுள்ளது. இதன்படி ஆப்பிள் நிறுவனம் 2015 ன் முதல் காலாண்டில் சீனாவின் ஸ்மார்ட்போன் சந்தையில் 14.7 சதவீத சந்தையையும், ஜியோமி நிறுவனம் 13.7 சதவீத சந்தையை மாத்திரமே பிடித்து இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.



## அறிந்திராத விடயங்கள்

இன்டர்நெட் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்தாலும் சில சுவாரஸ்யமான தகவல்கள் பற்றி யாரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

2010ம் ஆண்டு கூகுள் நிறுவனம் இன்டர்நெட்டின் மொத்த அளவு 6 மில்லியன் டெராபைட்களாக இருக்கும் என எதிர்பார்த்தது.

இன்டர்நெட் பயன்படுத்தும் 2.4 பில்லியன் பயனாளிகளில் 50 சதவீதத்தினர் பேஸ்புக் தளத்தினை மட்டும் தான் பயன்படுத்துகின்றனர்.

உலகின் முதல் மின்னஞ்சல் 1971 ஆம் ஆண்டு ரே டாமிலின்ஸன் என்பவரால் அனுப்பப்பட்டது.

தினமும் 250 பில்லியன் மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இதில் 81 சதவீத மின்னஞ்சல் ஸ்பேம் ஆகும்.

உலகின் முதல் ட்வீட்டினை அதன் நிறுவனர் ஜாக் டார்சீ 2006 ஆம் ஆண்டு மார்ச் 21ம் திகதி பதிந்தார். தற்போது தினமும் 1,700 டுவீட்கள் ஒவ்வொரு நொடியிலும் பதியப்படுகின்றன.

தற்சமயம் 637 மில்லியன் வெப்சைட்களும், 250 மில்லியன் ப்ளாகுகளும் பயன்பாட்டில் இருக்கின்றன.

ஒவ்வொரு மணி நேரத்திற்கும் சுமார் 4200 புதிய டோமைன் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதன் எண்ணிக்கை 37 மில்லியனாக இருக்கின்றது.

பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க்கின் பேஸ்புக் ஐடி நம்பர் 4.

முதல் யூடியூப் வீடியோ ஏப்ரல் 23, 2005ம் ஆண்டு பதிவேற்றப்பட்டது. அந்த வீடியோ "Me at the zoo" ஆகும்.

இணையத்தில் அதிகமாக தேடப்பட்ட வார்த்தை "What is"

GIF format ஸ்டீவ் வில்கே என்ற கணனி சேவை பொறியாளரால் 1987ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.




## விபத்துக்குள்ளாகும் தானியங்கி கார்

தாமாகவே இயங்கக்கூடிய கார்கள் தற்போது 50 வரையில் காணப்படுகின்றன. இவற்றினை பரிசோதனைக்கு உட்படுத்திய போது இதுவரை 4 தடவைகள் விபத்தில் சிக்கியுள்ளன. இதில் கூகுள் நிறுவனத்தின் கார்கள் உட்பட Delphi Automotive நிறுவனத்தின் கார்களும் அடங்கும். நிறுவனங்களும் தெரிவித்துள்ளன. இதேவேளை குறித்த கார்கள் மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் போதே விபத்துக்குள்ளாகியுள்ளன.

OTHER

## மனிதரையும் கட்டுப்படுத்தக் கூடிய ரோபோக்கள்

எதிர்வரும் நூறு ஆண்டுகளுக்குள் மனிதர்களை , ரோபோக்கள் கட்டுப்படுத்தும் நிலை ஏற்படும் வாய்ப்புள்ளதாக உலகப் புகழ்பெற்ற பிரித்தானிய பௌதிகவியலாளரான ஸ்டீவன் ஹவ்கிங் எச்சரித்துள்ளார். செயற்கை மதிநுட்பத்துடன் கூடிய ரோபோக்களின் உருவாக்கமானது அந்த செயற்கை மதிநுட்பத்தை யார் கட்டுப்படுத்துவது என்பதை விடவும் அந்த மதிநுட்பம் அனைத்தையும் கட்டுப்படுத்தும் நிலையை ஏற்படுத்த வழிவகை செய்வதாக அமையும் எனவும் செயற்கை மதிநுட்பம் மனிதர்களை விஞ்சி அவர்களை கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்று விடும் என அவர் தெரிவித்தார். அவர் கூறினார்.



## காலநிலையை அறியும் கருவி

Mind Lab எனும் நிறுவனம் கால நிலை பற்றிய தகவல்களை அறிவிக்கக்கூடிய உலகின் மிகச்சிறிய சாதனம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. இதில் வெப்பநிலையை அளவிடும் கருவி, ஈரப்பதனை அளவிடும் கருவி மற்றும் கழி ஊதா கதிர்களின் அளவு என்பவற்றினை அளவிடும் கருவிகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் இச்சாதனத்தினூடாக iOS மற்றும் Android சாதனங்களுக்கு தகவல்களை பரிமாற்றம் செய்யும் வசதியும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## செவ்வாயில் ஒட்சிசன்

இந்தியாவைச் சேர்ந்த டெக்ஷாட் என்ற நிறுவனத்துடன் இணைந்து நாசா செவ்வாய் கிரகத்தில் ஒட்சிசன் தயாரிக்கும் ஆராய்ச்சியை மேற்கொள்ள உள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த திட்டத்தின் படி, செவ்வாய் கிரகத்தில் மணலில் உள்ள நுண்ணுயிர்களைக் கொண்டு செவ்வாய் கிரகத்திலேயே ஒட்சிசன் உருவாக்கப்பட்டு மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான சூழல் அமைப்பை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கம்.

# குறுக்கெழுத்து புதிர் 060

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 16 ரா | 17 | | | ■ | 2 | | 18 |
| | 3 க | | | | ■ | ரை | ■ | |
| | 4 | | தா | | ■ | 5 | 19 | 20 |
| | | | 6 | 21 | | 7 | சு | |
| 8 | | 9 | | 22 | ■ | | | 23 |
| | | ■ | | 10 | | 24 | 25 | |
| ■ | ■ | 11 | | 12 தா | | | | 13 |
| 14 தா | | | ■ | ■ | ■ | | ழ் | ■ |
| 15 | | | போ | | | | | ■ |

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 21.05.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

### இடமிருந்து வலமாக

1. திருக்கோணேஸ்வரத்தில் காணப்படும் வெட்டு யாருடையது
2. பால் கறக்கும் இடம்
3. அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகம்
4. விக்கிரமாதித்தன் கதையில் வருவது - குழம்பியுள்ளது
5. 7ம் அறிவு திரைப்படத்தில் டோங்லி பாவிக்கும் வர்மம் - குழம்பியுள்ளது
6. காற்றைத் தருவது
7. இது அதிகம் இருந்தாலும் நிம்மதி இருக்காது
8. குடும்பத் தலைவன்
9. …………. வா வா என்கிறது, வீடு போ போ என்கிறது
10. சிறார்கள் செய்யும் அட்டகாசம்
11. ஆர்ப்பாட்டக்காரர்கள் கையில் ஏந்தி நிற்பது - குழம்பியுள்ளது
12. இல்லாதோருக்கு வழங்குவது - குழம்பியுள்ளது
13. தன் …….யே தனக்கு உதவி
14. சேற்றில் மலர்வது
15. இறுதி இராபோசனத்தை வரைந்தவர்

### மேலிருந்து கீழாக

1. பிரித்தெடுக்க முடியாத ஓர் உணவு
2. தலையால் நடந்து சென்ற அம்மையார்
6. அவிழ்க்கக் கூடியது
11. கூறுவது
14. பெண்கள் பாதுகாக்கும் ஓர் ஆபரணம்
16. ரஜினி, லோரன்ஸ் வழிபடுவது
17. [illegible]
18. விரதம் - கீழிருந்து மேலாக
19. சேட்டையைக் குறிக்கும்
20. இரவில் சூரியன் உதிக்கும் நாடு
21. தலைமுடியில் ஏற்படுவது
22. அடி - ஒத்த சொல் - குழம்பியுள்ளது
23. புலி
24. மதிப்பை இவ்வாறும் கூறலாம் - குழம்பியுள்ளது
25. சாதனையால் கிடைப்பது

## புதிர் 059 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | மு | 2 தை | ய | ல் | ■ | ■ | 3 சை | 15 ப |
| 4 ங் | த | 5 க | ம் | மா | ளை | ■ | வ | ழ |
| 6 கா | ர் | த் | 14 தி | கே | ய | ன் | ம் | ங் |
| ணி | ■ | 7 தி | ரு | கோ | ண | 16 ம | லை | கு |
| ■ | 8 வா | ழை | ச் | 17 சே | னை | ன் | ■ | டி |
| ■ | ழை | ■ | 9 சி | வ | ன் | 10 ம | ல் | யி |
| 11 சி | ல | ம் | 12 பு | ல் | ■ | த | ■ | ன |
| ■ | ■ | ■ | ம் | ■ | ■ | ன் | ■ | ர் |
| 13 கா | ண் | டா | வ | ன | ம் | ■ | ■ | ■ |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

திருமதி. செல்வச்சோதி. ச
572ஏ. ஏகாம்பரம் வீதி, திருகோணமலை

திருமதி. கே. ஶ்ரீதியா
105, லோவர் வீதி, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## திரை விமர்சனம்

## இயக்குனர் ஐஸ்வர்யா தனுஷின் கௌதம் கார்த்திக், பிரியா ஆனந்த் நடிக்கும்

# வை ராஜா வை

இந்த படத்திலும் ஹீரோவின் பெயர் கார்த்திக், பிரியா என்ற ஹீரோயினை காதலிக்கிறார். ஆனால் இவருக்கு வழக்கத்துக்கு மீறிய ஒரு சக்தி இருக்கிறது, அதுதான் நடக்கபோவதை முன்கூட்டியே அறியும் சக்தி. அதை எல்லோரிடமிருந்து மறைக்க நினைக்கிறார். இவருடன் பணியாற்றும் விவேக்கிற்கு அது ஒருகட்டத்தில் தெரிய, சூதாட்டத்தில் தான் இழந்ததை மீட்க, தன் பிரச்சனையில் இருந்து வெளிவர கௌதமை சூதாட அழைக்கிறார். அதற்கு அவரும் சம்மதிக்கிறார், இதிலிருந்துதான் பிரச்சனை ஆரம்பம் ஆகிறது.

சூதாட்டத்தில் கௌதமிடம் ஒரு கோடியை இழக்கும் டேனியல் பாலாஜி, இவரை பயன்படுத்தி பல கோடிகளை சம்பாதிக்க நினைக்கிறார். அவர் விரித்த வலையில் அவரையே சிக்க வைத்துவிட்டு அலேக்காக எஸ்கேப் ஆகிறார் கௌதம். டாப்சியின் உதவியுடன் தப்பித்து கௌதமை பழிவாங்க ரீஎண்ட்ரி கொடுத்து மிரளவைக்கிறார் டேனியல்! இதன் பின் என்ன நடந்தது என்பது தான் மீதி கதை!

கௌதம் கார்த்திக் எளிதாக நடித்திருக்கிறார். டேனியல் தன் மீது துப்பாக்கி வைத்து மிரட்டும் போதும் சரி, இவர் டேனியல் மீது துப்பாக்கி வைத்து மிரட்டும் போதும் சரி விசில் சத்தம் காதை கிழிக்கிறது! பிரியா ஆனந்த் கண்ணுக்கு குளிர்ச்சியாக வந்து செல்கிறார். விவேக் இதில் வெறும் நகைச்சுவை நடிகராக மட்டும் இல்லை அதற்கும் மேல் இப்படத்தில் இவருக்கு ஒரு முக்கிய கதாப்பாத்திரம் கிடைத்திருக்கிறது, கிடைத்த இடத்தில் எல்லாம் கில்லி ஆடியிருக்கிறார்

என்னதான் இயக்குனர் வசந்த் இதில் நடித்திருந்தாலும் அது ஒரு கௌரவ வேடம் போல் தான் உள்ளது. டாப்சியின் நடிப்பு ஜோர். படத்தின் நீளம் குறைவு என்பதால் சுவாரஸ்யம் குறையாமல் படம் நகர்கிறது. மொத்தத்தில் அழகிய தமிழ் மகன் மங்காத்தா விளையாடுவது போல் உள்ளது.



## சிங்கிளாக இருப்பதே சந்தோஷம்



வருண்மணியனுடனான காதல் முறிவின் பின்னர் தான் சந்தோசமாக இருப்பதாக திரிஷா தெரிவித்துள்ளார். ஒரு வழியாக பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கும் அவர், "வெளிவந்தந் பல தவறான ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். சிங்கிளாக சந்தோஷமாக இருக்கிறேன்" என்று டுவீட் செய்திருக்கிறார்.

ஆனந்தின் இயக்கத்தில் வெளியான "இந்தியா பாகிஸ்தான்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## அனல் பறக்கும் போட்டோ ஷூட்

கிம் கர்தஷியான் தனது கவர்ச்சியை மீண்டும் ஒரு முறை பளிச்சிட வைத்துள்ளார். கிம் பங்கேற்கும் கீப்பிங் அப் வித் தி கர்தஷியான் நிகழ்ச்சிக்காக இந்த நிர்வாண போட்டோ ஷூட்டை பாலைவனத்தில் வைத்து நடத்தியுள்ளார். பாலைவனத்தின் நடுவே நிர்வாணமாக காட்சி தரும் கிம், தனது முக்கிய உடல் அங்கங்களை வெள்ளை நிற பெயின்ட்டால் பூசி மறைத்துள்ளார். இந்த போட்டோ ஷூட் மிகவும் அழகாகவும், தன்னம்பிக்கை தருவதாகவும் தனக்கு அமைந்ததாகவும் கூறியுள்ளார் கிம். இருப்பினும் அவரின் மகள் நார்த் வெஸ்ட்டுக்கு அடுத்த மாதம் 2 வயது பிறக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## காதலில் விழுந்த நயன்



நயன்தாரா ஏற்கனவே சிம்பு, பிரபுதேவா ஆகியோருடன் காதலில் விழுந்து பின், அதிலிருந்து விலகி தற்போது சினிமாவில் கவனத்தை செலுத்தி வருகிறார். இந்நிலையில் இவர் விக்னேஷ் சிவன் இயக்கும் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக 'நானும் ரவுடி தான்' படத்தில் நடிக்கின்றார். சில நாட்களுக்கு முன் விக்னேஷ் சிவனை தன் சொந்த ஊருக்கு அழைத்து சென்றுள்ளாராம் நயன். கூடிய விரைவில் ஒரு நல்ல செய்தி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "பேய்" ரிலீஸ்

தொடர்ந்து 40க்கும் அதிகமான பேய்ப் படங்கள் வந்திருப்பதால், மாஸ் படத்தில் நடிக்க பயந்ததாக தெரிவித்துள்ளார் நடிகர் சூர்யா. வெங்கட் பிரபு இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள பேய்ப்படம் 'மாஸ்' இல் சூர்யாவின் ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். வரும் 29ம் தேதி இப்படம் ரிலீசாக உள்ளது.

## சிங்கம் - 3இல் இணையும் ஸ்ருதி



ரசிகர்களை வெகுவாக கவர்ந்த சிங்கம்-2 படம் தமிழில் மாத்திரமல்லாமல் ஹிந்தியிலும் ரீமேக் செய்யப்பட்டு வெற்றியும் அடைந்தது. தற்போது "சிங்கம் - 3" விரைவில் தொடங்கப்படவுள்ளதாக கோலிவுட் வட்டாரத்தில் செய்தி பரவி வருகிறது. இந்த படத்தின் கதாநாயகி "ஸ்ருதி ஹாசன்" தானாம். தன்னை விட உயரமான அனைத்து ஹீரோயின்களுடனும் தான் ஜோடி சேர்கிறார் சூர்யா என விஜய், அஜித் ரசிகர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமன்னாவும் காதலிப்பாரா?



மில்க் பியூட்டி தமன்னா இவர் காதலில் விழுந்துள்ளார் என்ற செய்தி மட்டும் வந்து கொண்டே இருக்கிறது. ஆனால் மற்றவர்களை போல் இல்லாமல் இந்த வதந்தியை உடனே மறுத்தி-ருந்தார் தமன்னா. ஆனாலும் தமன்னாவை விட்ட-பாடில்லை. இதனால் அவர் ஆமாம் நான் காதலிக்கிறேன். ஆனால் காதலிப்பது ஒரு ஆணை அல்ல என் வேலையை என்று பதிலடி கொடுத்துள்ளார்.

## என்ன ஒரு மாஸ்டர் பிளான்

செல்வராகவன் இயக்கத்தில் மயக்கம் என்ன படத்தில் தனுஷின் நண்பராக நடித்த சுந்தர் ஒரு வருடத்தில் 365 பேருடன் டேட்டிங் சென்றுள்ளார்.

இதுகுறித்து அவர் விளக்கமளிக்கையில், எல்லா ஏரியாவிலும் பெண்களோடு டேட்டிங் உண்டு. அவர்களுடன் மனம்விட்டுப் பேசுவேன். அதற்கு பிரதிபலனாக அந்த மாத இறுதியில் ஏதேனும் ஓர் ஆதரவற்றோர் இல்லம், மறுவாழ்வு மையத்துக்குச் சென்று என் சொந்தச் செலவில் அவர்களுக்கு உணவளித்து அவர்களோடு சாப்பிடுவேன். இதுதான் என் திட்டம் என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 53

# நாம் ஏன் சட்டத்திற்கு பணியவேண்டும்

(வி. என். சந்திரகாந்தி)



சமூக வழக்கில் ஒழுங்கும் அமைதியும் பேணப்பட வேண்டுமாயின் ஒவ்வொருவரும் சில கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும். அவை சம்பிரதாயம் என்றோ சட்டம் என்றோ நடைமுறையில் இருக்கலாம். சம்பிரதாயம் சமூக மட்டத்தில் தீர்மானிக்கப்படுவது. சட்டம் அரச மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவது.

சமூக மட்டத்தில் உள்ள சம்பிரதாயங்கள் அவ்வவ் மக்களின் சுமூகமான வாழ்கை ஓட்டத்துடன் இணைந்தது. சம்பிரதாயங்கள் ஒரு போதும் கடுமையாக இருப்பதில்லை. அவை எழுத்திலும் இல்லை. அதே போன்று சம்பிரதாயங்களை மீறுவதென்பது பெரிய தண்டனைக்குரிய குற்றமாகாது. அது சம்மந்தப்பட்டவர்களை அன்றி பரந்த அளவில் எவரையும் பாதிக்காது.

சொல்லப் போனால் பெரியவர்களை பணிந்து நடக்க வேண்டும் என்பது ஒரு சம்பிரதாயம். பெரியவர்களை பணிந்து நடப்பவர்களை அனைவரும் கௌரவிப்பார்கள். அவர்களுக்கு பெரியவர்களின் ஆசியும் ஆலோசனையும் கிட்டும். அவர்கள் தவறான பாதையில் செல்ல மாட்டார்கள். அவர்களுக்கு தீங்கோ அன்றி துயரமோ நேருமாயின் அவர்களது கண்ணீரை துடைக்க பலர் முன்வருவார்கள். நல்ல குல வழக்குகள் தான் சம்பிரதாயங்களாக பரிணமித்துள்ளன. அறத்தை பேணுதல், அன்பு செலுத்துதல், விருந்தோம்புதல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், புறம் கூறாமை, தீவினை அச்சம் ஆகியன நல்ல குல வழக்குகளாகும். இவற்றை கடைப்பிடித்தால். சமூகத்தில் ஒற்றுமை நிலவும்.

அப்படியல்லாமல் சமூகத்தில் சண்டை சச்சரவுகளும் அத்துமீறல்களும் தலைவிரித்தாடும் நிலையில் தான் அவற்றை தடுக்கும் வகையில் அரசாங்கம் சட்டங்களை யாக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சட்டம் என்பது ஒரு சமூகத்தின் தேவையாக உள்ளது. அவை நிச்சயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டியவையே. சட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் இல்லாவிட்டால் மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் மனம் போன போக்கில் நடக்க முற்படுவதுடன் மற்றவர்களின் நன்மை பற்றி கிஞ்சித்தும் கவலைப்படமாட்டார்கள்.

சுயநலமுள்ளவர்கள் தான் அதிகம் சட்டத்தினை மீறி நடக்கிறார்கள். அவர்களே கொலை, கொள்ளை, போதைவஸ்து, கடத்தல், பாலியல் வல்லுறவு, இலஞ்ச ஊழல் ஆகிய பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். அவர்களை புத்திமதி கூறி திருத்த முடியாது. எந்த ஒரு மதமும் கூட அவர்களுக்கு சரியான நெறியை புகட்ட முடியாது.

இந் நிலையில் சட்டத்தை மீறி செய்யப்படும் ஒவ்வொரு குற்றச் செயல்களுக்கும் வகை வகையான தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. பலர் சிறைக்கு செல்ல பயந்து சட்டத்தை அனுசரித்து நடக்கின்றார்கள். இன்னும் சிலர் மரண தண்டனைக்கு பயந்து சட்டத்தை அனுசரித்து நடக்கின்றார்கள்.

'கொலை' என்ற குற்றச்செயலை எடுத்தால் அது திட்டமிடப்பட்டு செய்த கொலை என்றும் கைமோசக் கொலை என்றும் வேறுபடுத்திப் பார்க்கப்படும். பழி தீர்க்கும் வஞ்சத்துடன் குரூரமாக மேற்கொள்ளப்படும் கொலைகளும் உண்டு. இவற்றின் தன்மைக்கு ஏற்ப சிறைவாசத்தின் காலம் நீடிக்கப்பட்டு ஆயுள் தண்டனை மற்றும் மரண தண்டனை என தீர்ப்பளிக்கப்படும்.

'போதைப் பொருள் கடத்தல்' இந் நாட்களில் பாரிய குற்றச் செயலாக கருதப்படுகின்றது. போதைப் பொருள் வர்த்தகத்தால். உலகில் அனைத்து நாடுகளிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். சரி எது தவறு எது என்பதை வேறுபடுத்தி பார்க்க அறியாத மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு உட்படுவதால் அதிலிருந்து மீள முடியாத நிலைக்கு உட்படுகின்றார்கள். பதிலாக தமது கல்வியையும் எதிர்காலத்தையும் தொலைத்துவிட்டு தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு ஆட்படுகின்றார்கள். சில நாடுகளில் போதைபொருளுடன் பிடிபட்டால் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படுகின்றது. அதற்கு மேலாக போதைபொருளின் அதிகரித்த நிறையை கருத்துக்கெடுத்து மரண தண்டனையும் வழங்கப்படுகின்றது! ஏனைய குற்றச் செயல்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் அதே சமயம் போதை பொருளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை பல்லாயிரம் மடங்குகளால் அதிகரித்து காணப்படுவதே அதற்கான அதிகரித்த தண்டனைக்கும் காரணமாக இருக்கின்றது.

இந் நாட்களில் 'பாலியல் வல்லுறவு' மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது. இரவுப் பயணங்களில் பேருந்துகளிலும் தொடரூந்துகளிலும் புறம்போக்கான இடங்களிலும் இக் குற்றச் செயல்நிகழ்கிறது. சிறப்பான எதிர்காலத்துக்காக கல்வி, தொழில் முயற்சி என்று போட்டி போட்டு முன்னேறிக்கொண்டிருக்கும் இளம் பெண்களை சீரழிப்பதென்பது மன்னிக்கமுடியாத குற்றமாகும். அரசாங்கமும் மனித உரிமைகளுக்கான அமைப்புக்களும் குற்ற செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கிளம்பியும் அந்நிகழ்வுகளை தடுக்க முடியவில்லை. கடுமையான சட்டங்களாலும் அதிகரித்த தண்டனைகளாலும் தான் இந்த அட்டூழியக்காரர்களின் கொட்டத்தை அடக்க முடியும். மகளிர் பொலிஸ் பிரிவினர் இக் குற்றவாளிகளை உடனுக்குடன் கைது செய்வதிலும் அவர்களை 'ரிமாண்டில்' போட்டுவைப்பதிலும் வெற்றி கண்டு வருகின்றார்கள். சட்டம் இப்படி குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனையை ஆயுள்கால சிறைத்தண்டனை வரை நீடித்துள்ளது. எந்த ஒரு குற்றத்தை புரிபவர்களுக்கும் மன்னிப்பு வழங்கலாம். ஆனால் பெண்களின் வாழ்கையை சீரழிப்பவர்களுக்கான தண்டனையை மரண தண்டனை வரை நீடிக்க வேண்டும். அது மட்டுமன்றி சமூகம் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு இப்படியான சம்பவங்கள் நிகழும் இடங்களில் துரோகிகளுக்கு எதிராக திரும்ப வேண்டும் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் சட்டம் மட்டும் வெறுமனே குற்றங்கள் நிகழ்வதை தடுக்க முடியாது.

தவிர, தினமும் வீடு உடைத்து 'கொள்ளை' இடம் பெறுகின்றது. 'பொலிஸார்' 24 மணி நேரமும் கடமையிலும் 'றோந்திலும்' ஈடுபட்டிருந்தாலும் எப்படி கொள்ளையர்களால் தம் கை வண்ணத்தை காட்ட முடிகின்றது என்பது ஆச்சரியமாகவே உள்ளது. அதனை விட மேலாக ஆச்சரியமளிப்பது கொள்ளையர்களை பொலிஸார் சட்டத்தின் முன் கொண்டுவர முடியாமல் இருப்பதாகும்.

இனி இலஞ்ச ஊழல் நாட்டில் பரவலாக உள்ளது. இலஞ்ச ஊழல் திணைக்களம் தன்னாலான அனைத்து முயற்சிகளை எடுத்தாலும் இலஞ்ச ஊழல் ஒழிந்தபாடில்லை. அரசாங்க ஊழியர்கள் இலஞ்சம் பெற்றால் 07 வருட சிறைத் தண்டனையும் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சொல்லப்போனால் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளிலிருந்தே சட்டம் உருவாகின்றது. எங்கெல்லாம் சிறுபான்மை இனத்தவர் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களை ஒடுக்கும்படியான சட்டங்கள் இருக்கின்றன. பயங்கரவாத சட்டம், மொழிச்சட்டம், மதச்சட்டம், என்று பல சட்டங்களால் சிறுபான்மையினத்தவர் பாதிப்புக்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றார்கள். சட்டம் ஆட்சியிலுள்ளவர்களுக்கு சௌகரியத்தை வழங்குகின்ற அதே சமயம் பலவீனமானவர்களுக்கு குறைந்த பட்சம் பாதுகாப்பையேனும் வழங்கவேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்கள் சட்டத்தை புறக்கணிக்க முடிகின்றது. அது பலத்துடன் இருக்கும் வரை மட்டுமே!



சில சட்டங்கள் தவறாக இருக்கக்கூடும். பல முட்டாள்கள் அவற்றை பின் பற்றுகிறார்கள். சில சட்டங்கள் நல்லவை. பலர் அவற்றை கடைப்பிடிப்பதில்லை.

ஒரு சமூகம் நல்ல முறையில் நீடிக்கவேண்டுமாயின் பெரும்பான்மையோர் சட்டத்துக்கு பணிந்து ஒழுக வேண்டும். சமூகம் நல்லதொரு ஒழுங்கில் அமையுமாறு ஒவ்வொருவரும் சட்டத்துக்கு கீழ்ப்படிய வேண்டும். பொறுப்புள்ள பிரஜைகளாக ஒவ்வொருவரும் வாழவேண்டும். சிலர் சுயநலம் உள்ளவர்களாக சட்டத்துக்கு பணியாது நடக்கிறார்கள் , எதிர்காலத்தில் என்ன தீங்கு ஏற்படும் என்பதை அவர்கள் கணிக்க முடியாதவர்களாக உள்ளார்கள்.

சட்டத்தை கடைப்பிடிக்காத சமூகத்திற்கு முன்னேற்றமில்லை. சட்டமில்லாத இடத்தில் சண்டையும் சச்சரவும் தான் நீடிக்கும். நாம் அனைவரும் முன்வந்து சட்டத்தை அனுசரித்து நடக்காவிட்டால் எமது அடுத்த தலைமுறைக்கு நல்ல எதிர்காலம் இல்லாமல் போய்விடும்!

# "தனியே இயங்கும் கணனி"

சஞ்சயன் செல்வமாணிக்கம்

ஒரு நாள், ஒரு மூதாட்டி என்னைக் கணணி உதவிக்கு அழைத்தார். மூச்சிரைத்தபடி நான்கு மாடிகளை ஏறி அவரின் வீட்டின் முன் நின்ற போது கதவு ஓட்டைவழியாக என்னைப் பார்த்து, நீயா கணணி திருத்துவது என்றார். அவரின் குரலில் பலத்த அவநம்பிக்கை இருந்தது. கறுப்பன் ஒருவனை அவர் அங்கு எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை நான் அறிந்து கொண்டேன்.

ஆம் நான் தான் கணணி திருத்துவது என்றேன். சந்தேகத்துடன் என்னை உள்ளே அனுமதித்தார். பின் கணணியைக் காட்டினார். அவரைப் பார்த்து என்ன பிரச்சனை என்றேன். சிலர் என் கணணியை எனக்குத் தெரியாமல் எனது கணணியினுள் வருகிறார்கள், எனது நடவடிக்கைகளை கவனிக்கிறார்கள் என்றார் பதட்டத்துடன். எனக்கு தலை சுற்றத் தொடங்கியது. இருந்தாலும் மீண்டும் என்ன என்று கேட்டேன்.

நான் இல்லாத நேரங்களில் கணணிமௌஸ் விருப்பத்திற்கு அலைகிறது. எனது மெயில் தானே திறந்து மூடுகிறது. எனது ஆவணங்கள் திறந்து மூடுகின்றன. இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்? நான் ஒன்றும் முட்டாளில்லை என்றார்.

என்னால் நம்ப முடியவில்லை. சற்று நேரம் கணணிக்குள் தலையை விட்டு பிரச்சனையை தேடிப்பார்த்தேன். எதுவும் தென்படவில்லை.

இந்தக் கணணியை நீங்கள் மட்டுமா பாவிக்கிறீர்கள் என்ற கேள்வியை அவரிடம் கேட்டேன். என்னை உற்றுப் பார்த்தவர் கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல ஒரு கதையைச் சொன்னார். முன்பு மெதுவாய்ச் சுற்றத் தொடங்கிய தலை இப்போது 100 மைல் வேகத்தில் கண்படி சுற்றத்தொடங்கியது.

அவரின் கதையின் சாரம் இது தான்.

அவர் சுகயீனம் காரணமாக தொழில் செய்ய முடியாததனால் சுகயீன ஓய்வு பெற்றவர். தனியே வாழ்பவர். அடிக்கடி கிரேக்கத்தீவுகளுக் பயணிப்பவர். அப்படி அவர் அங்கு பயணப்பட்ட நாட்களில் அங்கு ஒரு குடும்பத்தினர் நன்கு அறிமுகமாயிருந்ததனால் அவர்களுக்கு இவர் சில உதவிகளைப் புரிந்துள்ளார். அந்தக் குடும்பத்தில் இருந்த ஒரு மனிதர் 40 வயதிருக்கும் நோர்வேயில் வேலை தேடி வந்திருக்கிறார். இவரும் தான் தனியே இருப்பதால் அவரை தன்னுடன் தங்கியிருக்க அனுமதித்திருக்கிறார். இவரின் வீட்டில் தங்கிய மனிதர் எதுவித பண உதவியையும் இவருக்குச் செய்யாமல் தன்னிஸ்டப்படி அவரின் வீட்டில் வாழ்ந்திருக்கிறார். இவரின் சேமிப்பும் கரைந்திருக்கிறது. இதற்கிடையில் அம் மனிதரின் அடாவடித்தனங்கள் அதிகரித்து, இவரின் கணணியை பாவிப்பது. தொலைபேசியை பாவிப்பது என்று எல்லைகளை மீறியபடியே இருந்திருக்கிறார் அம் மனிதர். இவர் வயதானவர் என்பதால் அமைதியாய் இருந்திருக்கிறார். ஒரு நாள் இவர் சமைக்கவில்லை என்ற கோபத்தில் அம் மனிதர் பெரிதாய் சத்தம் போட்டு அமர்க்களம் செய்த போது பயந்து போன இவர் சற்றுத் துணிவை வரவழைத்தபடியே வெளியே போ என்றிருக்கிறார்.

அன்று தொடக்கம் இவரை வெருட்டியபடியே அவ் வீட்டில் அம்மனிதன் வாழ்ந்திருக்கிறான். இவருக்கும் அதிகம் வெளியே செல்ல முடியாதிருந்திருந்ததால் அம் மனிதனே தேவையான பொருட்களை இவரின் பணத்தில் வாங்கிவர இவர் சமைத்துக்கொடுத்திருக்கிறார். தொல்லை தாங்க முடியாத நாட்களில் ஒரு நாள், அம் மனிதன் பயணம் சென்றிருந்த போது வீட்டுக்கதவுக்கான பூட்டை அருகில் இருந்த பூட்டுக்கடையின் உதவியுடன் மாற்றியிருக்கிறார். அத்துடன் அம் மனிதனின் உடமைகளையும் வீட்டுக்கு வெளியே வைத்திருக்கிறார்.

ஓரிரு நாட்களில் திரும்பி வந்த அம் மனிதன் இம்சை செய்த போது வேறு பலர் அவனைக் கலைத்திருக்கிறார்கள். அதன் பின் அவன் அங்கு வருவதில்லை. ஆனால் இவரின் கணணி இணையத்துடன் தொடர்பு உள்ள நேரங்களில் தன்னிச்சையாக இயங்க ஆரம்பித்திருக்கிறது. இவரின் இந்தக் கதையைக் கேட்டதும் எனக்கு கணணி தானே இயங்கும் மர்மம் புரிந்தது. தொலைவில் இருந்து கணணியை இயக்கும் மென் பொருள் இருக்கிறதா என்று பார்த்தேன். பிரபல்யமான ஒரு மென்பொருள் இருந்தது. அவருக்கு பிரச்சனையை விளக்கிக் கூறி அக் கணணியை மீண்டும் இன்ஸ்டால் செய்து கொடுத்தேன்.

அதன் பின் சிறு சிறு பிரச்சனைகளுக்காக என்னை அழைத்திருக்கிறார். வயது முதிர்ந்த காலத்தில், தனியே பயந்து பயந்து வாழ்ந்து கொண்டிருந்தார். குடும்பத்தவர் என்று எவருமில்லை. எனவே தனிமையில் தான் அவரது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

இறுதியாக அவரைச் சந்தித்த போது தற்போதும் அம் மனிதனின் குடும்பத்தவர்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்வதாகச் சொன்ன போது, உங்களுக்குப் பைத்தியம் என்றேன். என்னைப் பார்த்துச் சிரித்தார். அச் சிரிப்பு, அவரளவுக்கு நான் இன்னும் பக்குவப்படவில்லை என்பதை உணர்த்திப் போயிற்று.

**தொடரும் மனசாட்சி...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுநடப்பு

# உப்புத் தின்றவன் தண்ணீர் குடித்துத் தான் தீரவேண்டும்

**- பாலையூற்றான் -**

பசிக்காக ஓடும் சிறுத்தையை விட பயத்தினால் ஓடும் மானின் வேகம் அதிகம் என்பதனை நாம் பல நிகழ்ச்சிகளின் வாயிலாக அறிந்துள்ளோம். மிருகங்களின் கொடூரமான செயற்பாடுகள், நம்பமுடியாத மிருகங்களின் அற்புத சாகசங்கள் போன்றவற்றை டிஸ்கவரி அலைவரிசை ஊடாக காட்சிப்படுத்தப்படுவதை நாம் அறிவோம். சிலர் அந்தக் கொடிய மிருகங்களை விட மிகக் கொடூரமானவர்கள் என்பதனை ஊடகங்கள் பல உண்மையான நிகழ்வுகள் மூலம் சித்தரித்துக் காட்டி வருவதையும் நாம் காணாமல் அல்ல.

நாட்டில் கொடூரமான குற்றச் செயற்பாடுகளுக்கான தண்டனைகளையும் தண்டிக்கப்பட்டவர்களையும் பல ஊடகங்கள் சமூகத்திற்கு வெளிப்படுத்தினாலும் நம் நாட்டில் இன்னும் குற்றச் செயல்கள் குறைந்த பாடாகத் தெரியவில்லை.

அது ஒரு பின்தங்கிய பிரதேசம் அங்கே ஒரே ஒரு பாடசாலையே மிக பின்தங்கிய நிலையில் இயங்கிக் கொண்டிருந்தது. வாரத்தில் இரு தடவையே அங்கு ஆசிரியர் வந்து போவார். அவர் கூட மிகத் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றிலிருந்து தான் அங்கு செல்வார். கல்விக்காக பெற்றோர் அப்பாடசாலையை உபயோகிக்க வில்லை. பிள்ளைகளின் தொல்லைகளிலிருந்து விடுபடவே அக்கட்டிடத்தை உபயோகித்தனர்.

சுமார் 75 மாணவர்களைக் கொண்ட அப்பாடசாலை சீராக இயங்குகிறதா என பார்வையிட எந்தவொரு கல்வி அதிகாரியும் அங்கு காலெடுத்து வைப்பதே இல்லை. மேலும் அப்பாடசாலை சீராக இயங்காமைக்கு பல ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களுமுள. போக்குவரத்து, ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, முறையான வீதிகள் இன்மை, மின்சாரம், நீர் போன்ற அத்தியவசிய குறைபாடுகள் என காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பல பாரிய குற்றச்செயல்கள் தொடர்பில் பல தடவைகள் சிறைக்கு சென்று வந்த அஞ்சா நெஞ்சன் செந்தில் எந்த விடயத்திலும் துணிந்து செயல்படுபவன். செந்தில் அப்பிதேசத்தில் உள்ள மக்களுக்கு, இருப்பவர்களிடம் இருந்து பிடுங்கி இல்லாதவர்களுக்கு கொடுத்தான். இதனால் அவன் செய்யும் அட்டூழியங்கள் கூட நன்மைக்கானவையாக மாறியது. அவனது கொள்கையை மக்கள் ஏற்றுக் கொண்டாலும், சட்டம் அவனை பலமுறை கைது செய்து சிறைக்குத் தள்ளியது.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த அவன் வீதிச்சிறுனாக வாழ்ந்து கொண்டிருந்த போதுதான் அவனுக்கு 13 வயதாகும் போது அவன் முதல்முறையாக திருட்டை மேற்கொண்டான். அன்று வீதியிலே கடும் வெயிலில் கடமை புரிந்து கொண்டிருந்த வீதிப் போக்குவரத்து காவல்துறை உத்தியோகத்தரிடமே அவன் தனது முதலாவது கைவரிசையை காட்டினான். தாங்கமுடியாத பசியினாலேயே அவருடைய மணிப்பர்சை களவெடுக்க நேர்ந்தது அவனுக்கு.

அந்த ஊர் பிள்ளையார் கோவிலின் முன்னால் அடர்ந்து வளர்ந்திருந்த ஆலமரத்தடியே அவனது நிரந்தர வசிப்பிடம். மணிப்பர்சிலிருந்த பணம் அனைத்தையும் முடித்துவிட்டு மரத்தடியில் படுத்திருந்த போதே செந்தில் முதலாவதாக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டான். 13 வயதிலேயே சிறுவர் நன்னடத்தைவிடுதிக்கு நீதிமன்றத்தினால் அவன் அனுப்பி வைக்கப்பட்டாலும் அங்கு கூட அவன் திருந்த முயற்சிக்கவில்லை. பல தவறுகளை அவன் அங்கு புரிந்து வந்தான்.

சுமார் 26 வயதில் விடுதியை விட்டு வெளியேறிய யாருமற்றிருந்த அவனுக்கு வெளியில் பல நண்பர்கள் கிடைத்தனர்.

அக்குறித்த பாடசாலையில் 75 மாணவர்கள் மாத்திரமே இருந்தமையால் எதுவும் செய்யமுடியாதென கைவிடாமல் மத்திய அரசு அங்கு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அப்பாடசாலைக்கு தேவையான வளங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்தது. பல பாடசாலைகள் நாட்டில் திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படும் எனும் முதுமொழிக்கு ஏதுவாக மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டு முன்னேற்றியது. அப்பாடசாலைக்கு காவலாளி ஒருவர் தேவை என்பதால் அந்நியமனத்தை அப்பகுதி மக்கள் செந்திலுக்கு பெற்றுக் கொடுத்தனர். மழைக்குக் கூட பாடசாலை தாவாரத்திற்குள் ஒதுங்காத செந்தில் பாடசாலையில் பணிபுரிவதை இட்டு மிகவும் சந்தோசப்பட்டான்.


அவ்வேலை அவனுக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. கொடூர செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த செந்தில் அற்றினை விடுத்து சிறந்த விழுமியங்களுடன் இணைந்து வாழ ஆசைப்பட்டான்.

அப்பாடசாலை தனது பிரதேச சிறார்களை நல்வழிப்படுத்தும் ஒரு கோந்திர நிலையமாதலால் அதனை மேம்படுத்தும் நடவடிக்கையில் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் வாழ்ந்தான். வீதிச்சிறுவனாக வாழ்ந்து சிறைக்குச் சென்று வருவதை பொழுதுபோக்காக மேற்கொண்டு வந்த அவனுக்கு இப்படி ஒரு நல்ல வாழ்க்கையை அப்பிரதேச மக்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது அதைப் பயன்படுத்தி மேலே வருபவனே புத்திசாலி. அதை உதாசீனம் செய்பவன் வாழ்க்கையில் என்றுமே உயர செல்ல முடியாது. செந்திலின் புதிய பயணம் ஊரிலுள்ள அனைவரையும் கவர்ந்திருந்ததுடன் அனைவரையும் ஆச்சிரியத்திலும் ஆழ்த்தியது.

அன்று திங்கட் கிழமை பாடசாலை வழமைக்கு மாறாக பரபரப்பாக இருந்தது. அங்கு ஓர் பதற்ற நிலை உருவாகியிருந்தது. பாடசாலைக்கு தற்காலிக விடுமுறை வழங்குவது குறித்து ஆசிரியர்கள் முடிவெடுத்து செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இவற்றிற்கெல்லாம் காரணம் திருந்தி வாழ்ந்த செந்திலுக்கு ஆயுள் முடிந்திருந்தமையே ஆகும். அவன் நேற்றைய இரவுப் பொழுதினில் இனம் தெரியாதவரினால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இறந்திருந்தமையே இப்பதற்ற நிலைக்கு காரணமாகியது.

காவல் துறையினரின் தொடர் விசாரணைகளுக்குப் பின்னரே அவனை கொன்றவர்கள் குறித்த தகவல்கள் வெளியாகின. அவன் முன்னொரு காலத்தில் வேலை புரிந்த பாதாள கோஷ்டியினர் இவனுக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து அவனை மீண்டும் தொழிலுக்கு அழைத்துள்ளனர். அதற்கு மறுப்புத் தெரிவித்ததாலேயே அவன் அவர்களால் கொல்லப்பட்டான் என அமைந்திருந்தது காவல்துறையினரின் அறிக்கை.



# விபத்தின் பேரில் நடந்த கொலை

அன்று ஞாயிற்றுக்கிழமை மகன் தன் தாயை மோட்டார் சைக்கிளிலில் ஏற்றிக் கொண்டு தன் கிராமத்தின் ஒற்றையடிப் பாதையால் பயணித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வயது பதினாறு மட்டுமே. உள்வீதிகளில் தலைக்கவசம் அணியாது பயணிப்பது என்பது அனைத்து இடங்களிலும் பரலாக சட்டத்திற்கு முரணாக கையாளப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. அவர்கள் மட்டும் என்ன விதிவில்க்காக அணிந்தா செல்லப் போகின்றனர்? இருவரும் தலைக்கவசம் அணியாமலே சென்று கொண்டிருந்தனர்.

வெங்காயம் விதைத்திருந்த-வர்கள் தமது தோட்டத்தை பார்வையிட்டு தண்ணீர் பாய்ச்சிவிட்டு தமது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களின் வீட்டிற்குச் செல்ல பிரதான வீதியை கடக்க வேண்டியிருந்தது. மகன் மோட்டார்வண்டியை ஓட்டி வந்து கொண்டிருந்த வேளையில் வீதிக்கு அருகே வந்ததும் அங்கே போக்குவரத்து பாவல்துறையினர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை கண்டுகொண்டான். நல்ல வேகத்தில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை நிறுத்துவதற்காக இரண்டு பிறேக்குகளையும் ஒரேடியாகப் பிடித்தான்.

பதினாறே நிரம்பிய அவனால் அவ்வளவு சக்தி கொண்டு மோட்டார் சைக்கிளை நிறுத்தி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனது. பின்னால் இருந்து வந்த எதையும் அறிந்திராத அனது தாய் மகனிட்ட திடீர் பிறேக்கினால் தூக்கி எறியப்பட்டார். அவன் ஒருவாறு மோட்டார் சைக்கிளை பற்றை ஒன்றுக்குள் விட்டு தானும் பைக்குடன் விழுந்தான்.

அங்கு நின்றவர்களும், இதை அவதானித்த அங்கு கடமையில் நின்ற போக்குவரத்து காவல் துறையினரும் அருகே ஓடி வந்து மகனையும் அவன் வந்த பைக்கையும் பற்றைக்குள் இருந்து மீட்டனர். பின்னர் தாயை தேடிய போது வேறோர் பற்றைக்குள் இருந்து முணகல் சத்தம் கேட்டு தேடிய போது மயக்க நிலையில் தலையில் கல் குற்றப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டார்.

அவரை வெளியில் எடுத்து முதலுதவி செய்ய எத்தனிக்கும் முன்பாக அவரது கண்கள் சொருகி தலை சரிந்தது. அவ்விடத்திலேயே அவர் நிசப்தமாகிப் போனார்.

வாகனம் ஓட்டும் சான்றிதழும் இல்லை, ஆகக் குறைந்தது அவர்கள் தலைக்கவசம் கூட அணியவில்லை. இதற்கிடையில் காவல்துறையினரைக் கண்ட மகனின் பயத்தினால் ஏற்பட்டது இந்த நிர்க்கதி.



**- - உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை - -**

## இப்படியும் நடக்கலாம்

- சிங்கப்பூரில் உள்ள KTV என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனம் கடந்த வாரம் நடாத்திய சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் நபரொருவர் நிகழ்ச்சி தொகுப்பாளரான 27 வயது பெண்ணிடம் ஒவ்வொரு கிளாஸ் மதுவை அருந்தினால், சிறப்பு விருந்தினர் நிகழ்ச்சி தொகுப்பாளருக்கு 50 சிங்கப்பூர் டொலர் வழங்குவார் எனும் போட்டியை வைத்துள்ளார். 18வது கிளாஸ் மதுவை அருந்திய அப்பெண், திடீரென மயங்கி விழுந்துள்ளார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் அவர் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

- ஒரு தாய்க்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் வெவ்வேறு தந்தைகளுக்குப் பிறந்த வினோதம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது. தன் காதலருடன் தனிமையில் இருந்த குறித்த தாய் அதே வாரத்தில் வேறு ஒரு நபருடனும் தனிமையில் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

- புதிய வேன் ஒன்றையும் வீடு ஒன்றை வாங்குவதற்காக தமது 12 வயதான மகளை விபசாரத்தில் ஈடுபடுத்தி அச்சிறுமி வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் காட்சிகளை வீடியோவில் பதிவு செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒரு தம்பதியை மெக்ஸிகோ காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அதிலும் வல்லுவறவுக்கு உட்படுத்தப்படும் காட்சிகளை அச்சிறுமியின் தாயாரே வீடியோவில் பதிவு செய்ததாக தெரிய வந்துள்ளது.



- அன்னையர் தின பரிசாக பிரசவ வலியை அனுபவிக்க குடும்ப தலைவன் முடிவு செய்துள்ளார். இதையடுத்து செயற்கையாக பிரசவ வலியை உடலில் ஏற்படுத்தும் ஸ்முலேடரை தனது கணவரின் உடலில் பொருத்தி அவரும், குழந்தைகளும் சேர்ந்து கணவன் அனுபவித்த பிரசவ வலியை பார்த்து ரசித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# இறந்தவர்களை நினைவு கூறல்

சில ஆண்டுகளுக்கு முன் ஜே.வி.பியின் முன்னாள் மூத்த உறுப்பினர் ஒருவரோடு உரையாடும் போது அவர் சொன்னார், ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி நசுக்கப்பட்ட பின் அதில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வது என்பது உடனடுத்து வந்த ஆண்டுகளில் மிகவும் ஆபத்தாக இருந்தது. ஆனால், சந்திரிக்காவின் வருகைக்குப் பின் நிலைமை மாறத் தொடங்கியது. 90களின் முன்கூறில் ஓரளவுக்கு இரகசியமாக இறந்தவர்களை நினைவுகூறக் கூடியதாக இருந்தது. அப்பொழுது அது மிகவும் புனிதமானதாகவும் ஒரு வழிபாடாகவும் இருந்தது. அந்த வழிபாட்டிற்கு ஓர் ஆத்மா இருந்தது. பின் வந்த ஆண்டுகளில் நிலைமைகள் மேலும் இறுக்கம் குறைந்தன. இதனால், இறந்தவர்களை நினைவு கூர்வது ஆபத்தற்ற ஓர் அரசியல் நிகழ்வாக மாறியது. அந்நாட்களில் பெருந்திரளானோர் அந்நிகழ்வுகளில் உணர்வெழுச்சியோடு கலந்து கொண்டார்கள். அதன் பின் பகிரங்கமாகவே அந்நிகழ்வு நடாத்தப்பட்டது. பெருந்திரளானோர் அதில் கலந்துகொண்டார்கள். ஆனால், அடுத்தடுத்து வந்த ஆண்டுகளில் படிப்படியாக பங்கு பற்றுவோரின் தொகை குறையத் தொடங்கியது. இப்பொழுது அது ஒரு சடங்கைப் போலாகிவிட்டது. அது அதன் ஆன்மாவை இழந்துவிட்டது. அது ஏறக்குறைய நாட்காட்டிக்குள் வரும் ஒரு திகதி போல் ஆகிவிட்டது என்று.

ஜே.வி.பியின் தியாகிகள் நாள் அதன் ஆன்மாவை இழந்ததற்கு முக்கிய காரணம் அதற்கிருந்த தடைகள் அகற்றப்பட்டதல்ல. மாறாக, மிதவாத அரசியலில் ஜே.வி.பியின் செயற்பாடுகள் அவற்றின் அரசியல் ஆன்மாவை எப்பொழுதோ இழந்துவிட்டது. ஓர் அமைப்பின் அரசியலானது புனிதமிழக்கும் போது அதன் தியாகிகள் வழிபாடும் ஆன்மாவை இழக்கிறது. இது சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய ஓர் ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்ட பின்னரான நிலை. ஆனால், தமிழ் மக்களின் நிலை?

இறந்தவர்களை நினைவு கூரும் விவகாரத்திலும் இச்சிறிய தீவு இனரீதியாக இரண்டாகப் பிளவுண்டே இருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய ஓர் ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்ட சில ஆண்டுகளிலேயே அதன் தியாகிகளை நினைவுகூரக் கூடிய சூழல் உருவாகியது. குறிப்பாக ஆட்சிமாற்றத்தோடு அப்படியொரு நிலைமை தோன்றியது. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை கடந்த 5 ஆண்டுகளாக அவர்களால் இறந்தவர்களை நினைவு கூற முடியவில்லை. இப்பொழுது ஆட்சி மாறிவிட்டது. இனிமேலாவது தமிழர்கள் இறந்தவர்களை நினைவு கூரக் கூடியதாக இருக்குமா?

கடந்த 5 ஆண்டுகளாக தமிழ் மக்களால் இறந்தவர்களை நினைவுகூற முடியவில்லை என்பது மட்டுமல்ல, இறந்தவர்களையும் காணாமற் போனவர்களையும் எண்ணிக் கணக்கெடுக்கவும் முடியவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இறந்தவர்களை நினைவுகூர்தல், இறந்தவர்களையும் காணாமல் போனவர்களையும் கணக்கெடுத்தல் ஆகியவை எல்லாமும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமையின் பாற்பட்டவை. அவ்வாறு நினைவு கூர்வதற்கும் கண்கெடுப்பதற்கும் உரிய அரசியற் சூழல் நிலவவேண்டும். அப்படிப்பட்ட அரசியல் சூழலை உருவாக்குவது முழுக்க முழுக்க ஓர் அரசியற் தீர்மானம்தான். அப்படியொரு தீர்மானத்தை எடுப்பதற்கான அரசியற் திடசித்தம் மைத்திரி அரசிடம் உண்டா?

சில மாதங்களுக்கு முன்பு ஒரு மேற்கத்தேய தூதுவரோடு உரையாடும் போது அவர் சொன்னார், போரில் இறந்தவர்கள், காணாமற் போனவர்கள் தொடர்பில் எந்தவொரு நாடும் மிகச் சரியான கணக்கு விபரத்தை வைத்திருப்பதில்லை என்று. இங்கு பிரச்சினை, எது சரியான கணக்கு விபரம் என்பதல்ல. தமிழ் மக்களால் இன்னமும் சுதந்திரமாக கணக்கெடுக்க முடியவில்லை என்பதுதான். நம்பகத்தன்மை மிக்க, சுயாதீனமான, அனைத்துலக நியமங்களுக்கு ஏற்புடைய எந்தவொரு அமைப்பும் அப்படியொரு கணக்கெடுப்பை இன்னமும் செய்யத் தொடங்கவில்லை என்பதுதான்.

ஆட்சி மாற்றத்தின் பின் வடக்குக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் ஒரு வட மாகாணசபை உறுப்பினர், காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் குறித்து கதைத்திருக்கிறார். அப்பொழுது அமெரிக்க பிரதானிகள் இது தொடர்பான• புள்ளி விபரங்களைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், மாகாணசபையிடம் அப்படியொரு புள்ளி விபரமும் இருக்கவில்லையாம். அமெரிக்கப் பிரதிநிதிகள் கேட்டபோது புள்ளி விபரங்ளைக் கொடுக்கமுடியவில்லை என்பது இணையத் தளங்களில் குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டது.

ஆனால், இங்கு விவகாரம் எதுவெனில், எந்தவொரு தமிழ்த் தரப்பினாலும் திருத்தமான புள்ளிவிபரங்களைக் கணக்கெடுக்கத் தேவையான ஓர் அரசியல் சூழல் உருவாகவில்லை என்பதுதான். அதைத்தான் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சுட்டிக்காட்ட வேண்டும்.

மேலும், அவ்வாறு கணக்கெடுப்பது என்பதையே ஒரு சிவில் போராட்டமாக, ஒரு சிவில் செயற்பாட்டியக்கமாக முன்னெடுக்க முடியும். ஆட்சிமாற்றத்தின் பின் கிடைத்திருக்கும் ஒப்பீட்டளவில் அதிகளவிலான சிவில் வெளிக்குள் மேற்சொன்ன போராட்டத்தை ஒரு பரிசோதனையாக தமிழ்க் கட்சிகளோ அல்லது செயற்பாட்டியக்கங்களோ முன்னெடுத்திருக்கலாம். இது விடயத்தில் அனைத்துலக மனித உரிமை நிறுவனங்களிடமும் மனிதநேய நிறுவனங்களிடமும் ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கலாம். தமிழ் கட்சிகள் கிராமங்கள் தோறும் தமது வலையமைப்பை விஸ்தரிப்பதற்கும் தமது ஆதரவாளர்களோடு உயிர்த்தொடர்பைப் பேணுவதற்கும் இது உதவக்கூடும். ஆனால், எந்தவொரு தமிழ்க் கட்சியிடமும் அப்படியொரு அரசியல் தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை.

இத்தகையதோர் பின்னணியில் ஆட்சி மாற்றத்தின் பின்னரான முதலாவது நினைவுநாள் அடுத்த கிழமை வருகிறது. தமிழ்க் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் செயற்பாட்டியக்கங்களும் என்ன செய்யப்போகின்றன? வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் கடந்த 5 ஆண்டுகளாகக் கடந்து சென்றது போல இம்முறையும் மே 18ஐ கடந்து செல்லப்போகின்றனவா? சில மக்கள் பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையில் நினைவு கூர்வது வேறு. அதைக் கட்சிகள் தமது கொள்கைத் தீர்மானமாக நிறைவேற்றி கட்சிச் செயற்பாடாக முன்னெடுப்பது என்பது வேறு. அவ்வாறு முன்னெடுப்பதில் சட்டச் சிக்கல்களும் பாதுகாப்புப் பிரச்சினைகளும் இருப்பதாக ஒரு விளக்கம் கூறப்படுகிறது. [illegible] 2009 மே மாதமளவில் கொல்லப்பட்டவர்களில் பொதுமக்களும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதானிகளும் அடங்குவர். அந்த இயக்கத்தின் உயர் மட்டத்தினர் கூட்டாக இல்லாமற் செய்யப்பட்ட ஒரு காலகட்டம் அது. எனவே, இறந்தவர்களை நினைவு கூர்தல் என்பது புலிகள் இயக்கத் தலைவர்களையும் நினைவு கூர்வதாக அமைந்துவிடலாம் என்பதே கடந்த 5 ஆண்டுகளாக அதைத் தடுப்பவர்கள் கூறும் காரணமாக இருந்து வந்துள்ளது.



புலிகள் இயக்கத்திலிருந்து இறந்தவர்களை நினைவு கூருமிடத்து அது அந்த இயக்கத்தை மகிமைப்படுத்துவதாகவும், அதை மீள உயிர்ப்பிப்பதாகவும் அமைந்துவிடும் என்றுமோர் விளக்கம் கூறப்படுகிறது. இந்த இடத்தில் சில கேள்விகளைக் கேட்கலாம்.

கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதால் ஒரு குறிப்பிட்ட அமைப்பின் அரசியலானது மீளத்துளிர்க்கலாம் என்ற ஓர் அச்சம் உண்டெனில் குறிப்பிட்ட அந்த அமைப்பை அழித்ததன் மூலம் அதன் அரசியலை அழிக்க முடியவில்லை என்றா பொருள்?

ஆயின் மே 19ஆம் திகதி முடிவுக்குள் கொண்டுவரப்பட்டது ஓர் இயக்கமா அல்லது அது முன்னெடுத்த அரசியலா?

அந்த அரசியல் அப்படியே நீறு பூத்திருக்கின்றதென்றால் இனப்பிரச்சினையின் மூல காரணங்கள் தீர்க்கப்படவில்லை என்பது தானே பொருள்?

இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது ஒரு கூட்டுரிமை. அக்கூட்டுரிமையானது இலங்கைத்தீவில் இரண்டு இனங்களுக்கும் சமமானது இல்லையா?

ஆட்சி மாற்றத்தின் பின்னரான ஓர் அரசியற் சூழலில் இக்கேள்விகளின் மீதான வாதப்பிரதிவாதங்கள் மாற்றத்தின் உண்மையான உள்ளடக்கத்தையும் மாற்றத்தின் பின் தமிழ் மக்களின் நிலைமைகளையும் விளங்கிக்கொள்ள உதவக் கூடும்.

தமிழ்ப் பெரும்பரப்பில் நவீன வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உயிர் இழப்பை கடந்த 5 ஆண்டுகளாக நாட்டுக்குள் வாழும் ஈழத்தமிழர்களால் நினைவு கூர முடியவில்லை. இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது மனித நாகரிகத்தின் மிக ஆதித் தொடக்கங்களில் ஒன்றாகும். இறந்தவர்களுக்கு மரியாதை செய்தல், மூதாதையரை வழிபடுதல், பூதவுடலுக்கு மரியாதை செய்தல் போன்றவை மனிதன் நாகரீகமடையத் தொடங்கியதன் பிரதான குறிகாட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன. மிருகங்களிடமிருந்து மனிதர்கள் துலக்கமாக வேறுபடும் இடங்களில் இதுவும் ஒன்று. சில மிருகங்கள் பறவைகளின் மத்தியில் இறந்த தமது இனத்தவரைச் சுற்றியிருந்து துக்கம் கொண்டாடும் சில நடைமுறைகளைக் காணமுடியும். ஆனால், மனிதர்களே அதனைச் சடங்காகவோ வழமையாகவோ பேணி வருகிறார்கள். மனிதன் நாகரீகமடையத் தொடங்கியதன் ஒரு முக்கிய குறிகாட்டியாக அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அப்படிப் பார்த்தால் அது ஓர் அரசியல் உரிமை மட்டுமல்ல, அது ஒரு பண்பாட்டுரிமையும் கூட.

மனித நாகரிகத்தின் ஆதித்தடங்களைத் தேடிச் சென்றால் மனித குலத்தின் முதலாவது நிரந்தரக் குடியிருப்புக்களில் ஒன்றாக கருதப்படும் ஹெற்றல்கியூக்கிலும், ஜெரிக்கோவிலும் மனிதர்கள் மூதாதையர்களை வழிபட்டிருப்பதைக் காணலாம். மனித நாகரிகமானது நதிக்கரைகளில் எண்ணோடும் எழுத்தோடும் கட்டியெழுப்பப்படுவதற்கு சில நூற்றாண்டுகளுக்கும் முன்னரே உருவாக்கப்பட்ட நிலையான குடியிருப்புக்கள் அவை. நீர்ச்சுனைகளை மையமாகக் கொண்டிருந்த அந்நிலையான குடியிருப்புக்களில் மூதாதையர் வழிபாட்டுக்குரிய சான்றாதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது, மனித நாகரீககத்தின் ஆதித் தொடக்கங்களைக் கண்டுபிடித்த போது அங்கே இறந்தவர்களை மரியாதை செய்ததற்கான சான்றாதாரங்களும் காணப்பட்டன.

இறந்தவர்களை நினைவு கூர்வதைத் தடுப்பது நாகரீகமற்றது என்று நம்பியதாலேயே மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் அதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். குறிப்பாக சில ஆண்டுகளுக்கு முன் ஒரு ஐரோப்பிய பிரதானி ஆனையிறவுக்கு அருகே மலர் வணக்கம் செலுத்தினார். அதைப் போலவே சில மாதங்களுக்கு முன்பு ஒரு அமெரிக்கப் பிரதிநிதியும் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று மலர்வணக்கம் செலுத்தியிருக்கிறார். இவைகள் யாவும் குறியீட்டு நடவடிக்கைகளே. ஆனால், தமிழ் மக்களுக்குத் தேவையாயிருப்பது குறியீட்டு நடவடிக்கைகள் அல்ல. மாறாக தமது கூட்டு உரிமையை உறுதி செய்யும் ஓர் அரசியல் சூழலே. அதற்கு வேண்டிய ஓர் அனைத்துலக அழுத்தமே. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அதை பின்னிருந்து பலப்படுத்தும் மேற்கு நாடுகள் முன்னைய ஆட்சி காலத்தில் அதை ஒரு குறியீட்டு நடவடிக்கையாகச் செய்தது என்பது வேறு. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் அப்படிச் செய்வது என்பது வேறு. மாற்றத்தைக் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஐயங்களையும் அச்சங்களையும் விரக்தியையும் போக்குவது என்றால் இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

நவீன தமிழ் வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உயிரிழப்பை நினைவு கூர்வதற்கு 5 ஆண்டுகளுக்குப் பின்னராவது தமிழ் மக்கள் அனுமதிக்கப்படுவது என்பது மாற்றத்தின் மீது அவர்களுக்கு ஏதாவது ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தக் கூடும் என்பது மட்டுமல்ல பின்வரும் காரணங்களுக்காகவும் அது மிக அவசியமானது.

இலங்கைத் தீவில் நல்லிணக்கத்தை நடைமுறைச் சாத்தியமான வழியில் சிந்திப்பதற்கு அது ஒரு தவிர்க்கப்படவியலாத நுழைவுப் புள்ளியாக இருக்கும்.

அது ஒரு கூட்டுச்சிகிச்சை. வெளிப்படுத்தப்படாத கூட்டுத்துக்கமானது உளவியல் அர்த்தத்தில் தீங்கானது. கூட்டுக்காயங்களிலும், கூட்டு மனவடுக்களிலும் உழன்று கொண்டிருக்கும் ஒரு சமூகத்துக்குக் கூட்டு சிகிச்சை அளிப்பது பற்றி சிந்திக்கும் எல்லா உள மருத்துவ நிபுணர்களும் இதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அதாவது, ஒரு சமூகத்தின் கூட்டுத்துக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு வெளிப்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது சிகிச்சைக்கு உதவியாக அமையும் என்று.

அது ஒரு கூட்டுவழிபாடு. மத நம்பிக்கைகளுக்கூடாக சிந்திப்பவர்களை பொறுத்தவரை இது இறந்தவர்களின் ஆத்மா சாந்தி அடைவதோடு தொடர்புடையது. இறந்தவர்களுக்குரிய இறுதி கிரியைகளை அச்சமின்றி செய்வதன் மூலம் அந்த ஆத்மாக்கள் மட்டும் சாந்தியடைவதில்லை. அந்தத் துக்கத்தை அடைகாத்துக்கொண்டிருக்கும் அவர்களுடைய உறவுகளும் சாந்தியடைகிறார்கள் என்பது மதம் சார்ந்த ஒரு நம்பிக்கை.

அது தமிழ் மக்களின் கூட்டு உரிமைகளில் ஒன்றாக இருக்கிறது என்பதும் அதை மேற்கு நாடுகளும் இந்தியாவும் பகிரங்கமாக நிராகரிக்கத் தயாரில்லை என்பதும்.

அது ஒரு பண்பாடு. அதை ஏற்றுக்கொள்வது ஒரு அரசியல் நாகரீகம். மனிதகுலம் நாகரீகம் அடைந்ததற்குரிய முக்கிய குறிகாட்டிகளில் ஒன்றாக இறந்தவர்களை மதித்தல் காணப்படுகிறது. எனவே, தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஈழப்போரில் கொல்லப்பட்டவர்களையும் காணாமல்போகச் செய்யப்பட்டவர்களையும் நினைவு கூர அனுமதிக்கப்படும் போது அது முழு இலங்கை தீவின் அரசியலையும் நாகரீகமடையச் செய்யும்.

இலங்கைத் தீவின் நவீன அரசியலில் அது ஒரு புதிய அரசியல் நாகரீகத்தின் தொடக்கப்புள்ளியாகவும் அமையும்.

– –நிலாந்தன்– –

- www.mattramcom -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ரூ62 விலையுள்ள பொருட்களுக்காக பணத்தைச் செலுத்துவதற்கு ரூபா 100 தாளை கொடுக்கும் போது கிடைக்கும் மீதிப் பணம் யாது?

02. மணியின் வயது கண்ணனின் வயதிலும் 3 குறைவு கண்ணனின் வயது x வருடங்கள் எனக் கொண்டால் மணியின் வயதிற்கான கோவையை x சார்பில் காண்க.

03. கொடுக்கப்பட்டுள்ள முக்கோணி ABC யின் கோணங்கள் B, C என்பற்றின் இருசம கூறாக்கிகள் O வில் சந்திக்கின்றன. கோணம் BAC = $80^\circ$ எனின், கோணம் DOC யின் பெறுமதியைக் காண்க.




04. நாணயமொன்று இரண்டு தடவை சுண்டும் போது இரண்டாம் தடயையாகவும் பூ விழுவதற்கான நிகழ்தகவு யாது?

05. 10 மாணவர்களின் இடை உயரம் 132.3செமீ. 10 மாணவர்களினதும் மொத்த உயரம் யாது?

**பகுதி 02**

01. நிலையான வைப்புகளுக்கு ஆண்டுதோறும் 12சதவீத எளிய வட்டி கொடுக்கப்படும்.

1. ரூ60,000த்தை ஓர் ஆண்டிற்கு மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யும் போது ஆண்டின் இறுதியில் கிடைக்கும் வட்டியையும், மொத்தப் பணத்தையும் காண்க.
2. ரூபா 60,000த்தை மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யாமல் ஆண்டுதோறும் பங்குலாபமாக 18சதவீதத்தைக் கொடுக்கும் கம்பனி ஒன்றின் ரூ10 பங்குகளை ரூபா 15வீதம் கொள்வனவு செய்ய பயன்படுத்தலாம். அப்போது கம்பனியில் இருந்து கிடைக்கும் ஆண்டு வட்டியைக் காண்க.

## பாடம் : வரலாறு

1. எந்த யாப்பகூவ ஆட்சியாளன் இந்தியாவின் குலசேகர பாண்டிய மன்னனின் ஆக்கிரமிப்புக்கு ஆளானான்?
   1. 2ம்பராக்கிரமபாகு 2. 3ம்பராக்கிரமபாகு 3. 1ம்புவனேகபாகு 4. 1ம் விஜயபாகு

2. கி.பி 1638, கி.பி 1766 ஒப்பந்தங்கள் தொடர்பான சரியான கூற்று எது?
   1. இலங்கை அரசர் ஒருவர் இன்றி இலங்கையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்
   2. மலைநாட்டு மன்னர்கள் போர்த்துக்கேயருடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தம்
   3. ஒல்லாந்தருடன் மலைநாட்டு மன்னர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம்
   4. ஐரோப்பாவில் நிலவிய போர்த்துக்கேய ஒல்லாந்த நட்புறவை உறுதி செய்த கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம்

3. இலங்கையில் அமைந்துள்ள பொலநறுவை இராசதானிக்கு ஜனநாபுரம் எனப் பெயர் சூட்டியோர் யார்?
   1. சோழர் 2. சேரர் 3. பாண்டியர் 4. நாயக்கர்

4. அமெரிக்காவின் இரு கண்டங்களிலும் 16ம் நூற்றாண்டில் மிகக் கூடிய குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய தேசம்?
   1. ஸ்பானியா 2. பிரான்ஸ் 3. போர்த்துக்கல் 4. ஒல்லாந்து

5. பண்டைய இந்தியாவில் சமூகம் பிரிக்கப்பட்டிருந்த நான்கு சாதிகளுக்கும் ஏற்ப கல்விப் பணி பின்வரும் எந்தப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டிருந்தது?
   1. பிராமணர் 2. சத்திரியர் 3. வைஷியர் 4. சூத்திரர்

6. இருக்கு தேவ வைதீக ஆரியர்களின் சமய பற்றுறுதிகளினதும் நம்பிக்கையினதும் முனைப்பான அம்சம்?
   1. இயற்கைப் பொருட்களை தெய்வங்களாக கருதுதல்
   2. பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் என்ற இந்து. மும்மூர்த்திகளில் உள்ள நம்பிக்கை
   3. தாய் தெய்வங்களை ணங்குதல்
   4. தியான முறைகளிற்கும் தவத்திற்கும் முக்கியத்துவம் அளித்தல்

## பாடம் : விஞ்ஞானம்

01. நொதியங்கள் பற்றி பின்வரும் எக்கூற்று சரியானது?
   1. நொதியங்கள் உணவு சமிபாட்டின் போது மாத்திரம் செயற்படும் உக்கிகளாகும்.
   2. நொதியங்கள் துணிகளைக் கழுவும் போது துப்பரவாக்கிகளாக பயன்படுகின்றன
   3. நொதியங்களைப் பயன்படுத்தி மின்பகுப்பைச் செய்யலாம்
   4. வெப்பநிலை அழிவடையும் போது நொதியங்கள் அழிவதில்லை.

02. அங்கிகள் வாழும் சூழலின் நிறத்தை எடுத்தால் தாவர இலைகளை அல்லது கிளைகளை ஒத்திருத்தல். தோலின் வரிகள் புள்ளிகள் போன்ற கோலங்களைக் கொண்டிருத்தல் ஆகிய இயல்புகளின் மூல் பின்வரும் எக்கொள்கையை வெளிப்படுத்துகின்றன?
   1. சூழலில் நெடுங்காலம் இருப்பதால் சுற்றாடலில் உள்ள நிலைமைகளுக்கு பொருத்தமானவாறு அங்கிகள் மாறுதல்
   2. அங்கிகளில் உண்டாகும் இசைவாக்கங்கள் இயற்கைத் தீர்வுக்கு உட்படுத்தல்
   3. உலகில் அங்கிகள் தோன்றியதிலிருந்து இன்று வரைக்கும் அவ்வாறே இருத்தல்
   4. பகைவரிடமிருந்து பாதுகாப்பதற்கு அங்கிகள் மாற்றங்களை ஏற்படுத்தல்

03. டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பிரயோகிக்கப்படும் B.T.I பக்டீரியா விலை மிக்கது. ஆகவே அதனைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பயன்படுத்துவதற்கு பின்வரும் எந்த யோசனை மிகவும் உகந்தது?
   1. நுளம்புகள் பரவத்தக்க எல்லா நீர்த்தேக்கங்களிலும் தெளிக்க வேண்டும்
   2. டெங்கு நுளம்புத் தொல்லை உள்ள பிரதேசங்களில் துப்பரவற்ற நீர் சேர்ந்திருக்கும் நீர்த்தேக்கங்களில் தெளிக்க வேண்டும்
   3. டெங்கு நுளம்புத் தொல்லை உள்ள பிரதேசங்களில் தூயநீர் தேங்கியுள்ள சிறிய இடங்களில் தெளிக்க வேண்டும்.
   4. குபபை கூலங்கள் சேரும் எல்லா இடங்களிலும் தெளிக்க வேண்டும்

04. முட்புதர் உள்ள காட்டில் வாழும் நீண்ட கொம்புகளை உடைய விலங்குக் கூட்டம் ஒன்று விரைவாக ஓட முடியாமையினால் இரைகொன்றுண்ணிகளுக்கு இரையாகி படிப்படியாக அழிந்து போயிற்று. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது
   1. வாழ்க்கைப் போர் 2. மிகையான குடித்தொகை
   3. தக்கனபிழைத்து வாழ்தல் 4. தேர்வு

05. கடற்கரைப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு தாவரம் எது?
   1. இரைசே போரா 2. ஜப்போமியா பைலேரியா
   3. ஜக்கோணியா 43 நெலும்பியம்

06. மின்காந்தம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எது?
   1. நுண்மின் உடைப்பான்களில்
   2. தொலைப்பேசி செவிப்பன்னியில்
   3. மின்மானியில்
   4. மேற்கூறிய மூன்றும் சரியானவை

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**உயிரளபெடை**

அளபெடை என்பது அளவு எடுத்தலாகும். அதாவது எழுத்து நீண்டு ஒலித்தல் என்பதாகும். உயிரெழுத்துக்களில் நெட்டெழுத்துக்கள் மட்டுமே அளபெடுக்கும். நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக்குரிய மாத்திரையினின்று நீண்டொலித்தல் உயிரளபெடை எனப்படும். உலகியல் வழக்கில் பாடுதல் புலம்புதல் கூவியழைத்தல் முதலான செயற்பாடுகளின் போதும் செய்யுளில் ஓசை குறைந்தவிடத்து அதை நிறைவு செய்தற் பொருட்டும் நெட்டெழுத்துக்கள் நீண்டொலிக்கும். சொல்லின் முதல் இடை இறுதி நிலைகளில் இவை நீண்டொலிப்பதுண்டு.

எடுத்தக்காட்டு –

ஓதல் வேண்டும் - சொல்லின் முதல்
தெய்வம் தொழாஅள் - சொல்லின் இடை
நசை (விரும்பி) - சொல்லின் இறுதி

இவ்வாறு நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தற்கு அறிகுறியாக அதனதன் இனக்குற்றெழுத்து அதனதன் பக்கத்தில் எழுதப்படும். இதற்குரிய மாத்திரை குறைந்தது 3 ஆகும்.

**ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையுமிடத்து மெல்லின எழுத்துக்கள் ஆறும் ர் ழ் தவிர்ந்த நான்கு இடையின எழுத்துக்களும் ஆய்த எழுத்துமாக பதினொரு எழுத்துக்களும் தமக்குரிய அரைமாத்திரையிலிருந்து நீண்டொலித்தல் ஒற்றளபெடை எனப்படும். நீண்டு ஒலித்தற்கு அடையாளமாக அதே மெய் அதன் பக்கத்தில் எழுதப்படும். (* ஆய்தமும் ஒற்றளபெடைக்குள்ளே கொள்ளப்படுவதைக் கவனத்திற் கொள்க.)

எடுத்துக்காட்டு –

இலங்கு வெண்பிறை திரள்ள சேனை எஃஃகு

ஒற்றெழுத்து சொல்லின் இடையிலும் இறுதியிலுமே அளபெடுக்கும். இதற்கு மாத்திரை ஒன்று..



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: **Underline the most suitable word in the brackets.**

While I was abroad I picked up a mystery ......................... (infect / infection / infectious). My doctor sent me to see a .............. (special / specially / specialist) because he didn't recognize my symptoms. After a through .................... (examine / examination / examiner) he asked a nurse to give me an ............................ (inject / injector / injection). Although the arm was quite ......................... (pain/ painful / painfully) for several days, my ........................... (recover / recoverable /recovery) was quick.

***Write a reply note. Use 50 words***

Dear Naveen,
I got to know that you leaving he country. If so, when and where are you going? Can we meet before you leave? Please tell me when and where we can meet.
Best Regards,
Amal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 20

01. பூக்கும் தாவரம்?
 i. கற்றாளை ii. பன்னம் iii. பாசி iv. மடுப்பனை

02. மின்காந்தத்தின் மூலம் செயற்படும் கருவி எது?
 I. தைனமோ ii. திசைக்காட்டி iii. மின்மாணி
 iv. கைக்கடிகாரம்

03. மீன்கள் நீந்தும் போது அவை செல்லும் திசையை மாற்றுவதற்கு உதவுவது
 i. மீன்பூ ii. குதச்செட்டை iii. மார்புச்செட்டை
 iv. வாற்செட்டை

04. இஞ்சி சேர்த்ததேனீரை பருகிய ஒருவர் உண்ணக் கூடாதது
 I. வற்றாளை ii. மரவெள்ளி iii. பழப்புளி
 iv. பாகற்காய்

05. எதிரியைத் தாக்குவதற்கு நகத்தை பயன்படுத்தக்கூடிய பிராணி எது?
 i. குதிரை ii. அணில் iii. பூனை iv. பூனை

06. அவசரகால மின் தடங்கல் பற்றிய முறையீட்டைத் தெரிவிப்பதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
 i. 1999 ii. 1898 iii. 1987 iv. 1929

07. கையில் ஒட்டிய பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தக்கூடிய பொருள்?
 i. தேங்காய் ii. வினாகிரி iii. பெற்றோல் iv. வெந்நீர்

08. சுனாமி வருவதை முன்கூட்டியே அரியும் பிராணி
 i. கழுகு ii. பருந்து iii. யானை iv. முயல்

09. ஒளி புகக்கூடிய இரண்டு சோடி இறகுகள் உள்ள பூச்சி
 i. வெட்டுக்கிளி ii. வண்ணத்துப்பூச்சி iii. குளவி iv. தும்பி

10. நீர் வெறுப்பு நோய் ஏற்படுவது எதன் மூலம்?
 I. நுளம்பு ii. பறவைகள்
 iii. பால்குடித்துவளரும் விலங்குகள் iv. அசுத்தநீர்

11. மின்சாரம் இல்லாது இயங்கும் உபகரணம்?
 i. சலவை இயந்திரம் ii. சிகை உலர்த்தி
 iii. தட்டச்சுப்பொறி iv. அமிழ்ப்பு வெப்பமாக்கி

**பகுதி 02**

01. வட்டம் ஒன்றின் ¼ பங்கு நீலநிறமாகவும், ½ பங்கு சிவப்பு நிறமாகவும் நிறந்தீட்டப்பட்டுள்ளது அதன் படி, அவ்வட்டத்தில் நிறந்தீட்டப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்?

..............................................................................

02. போத்தலொன்றின் 1½லீ எண்ணெய் இருந்தது அந்த எண்ணெயை ஒரு குப்பிக்கு 150மி.லீ வீதம் 08 குப்பிகளுக்கு ஊற்றப்பட்டன. அதன் பின் பேத்தலில் மீகுதியாக இருந்த எண்ணெய்யின அளவு?

..............................................................................

03. பின்வரும் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.
 அ. நண்பன் பாட்டுப் பாடினான்.
 ஆ. அவன் மிக வேகமாக ஓடினான்.

04. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
 அ. ஆகா என்ன அருமையான பூக்கள்
 ஆ. சந்தைக்கு சென்று கத்தரிக்காய் வெண்டிக்காய் புடோலங்காய் பாவற்காய் என்பன வாங்கினேன்

05. வெற்றிடத்திற்குப் பொருத்தமான மிகச் சரியான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.
 அ. பூக்கள் ................................ மணம் பரப்பின. (மழர்ந்து, மலர்ந்து, மனர்ந்து)
 ஆ. கல்வி ..................... செல்வமாகும். (அளிவில்லாத, அழிவில்லாத, அலிவில்லாத)
 இ. அடம்பன் கொடியும் ................................ மிடுக்கு (திரண்றால், திறண்டால், திரண்டால்)



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

# சிறுவர் முரசு



குட்டிக்கதை

## பயந்தால் சாதிக்க முடியாது



முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் ஓர் குடிசையில் முனிவர் ஒருவர் இருந்தார். அக்குடிசையினருகே இருந்த ஓர் சிறிய மலையினருகே உள்ள ஒரு துவாரத்தில் சின்ன சுண்டெலி ஒன்று வாழ்ந்து வந்தது. அது மிகவும் பயத்துடன் வாழ்ந்தது.

ஒரு நாள் பூனை ஒன்றின் பிடியில் இருந்து தப்பிய சுண்டெலி குடிசையில் இருந்த முனிவரை சரணடைந்தது. முனிவர் அதை அன்புடன் கவனித்தார். பயப்படாதே என்று ஆறுதலும் கூறினார்.

நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டார். சுவாமி நான் பூனைகளைக் கண்டு அதிகம் அஞ்சுகி-ன்றேன். ஆகவே என்னையும் பூனையாக மாற்றிவிட்டீர்கள் என்றால் நான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? என்றது சுண்டெலி.

உடனே முனிவரும் சுண்டெலியை பூனையாக மாற்றினார். ஒரு மாதம் சென்றது, பூனை அவர் முன் வந்து, சுவாமி பூனையாக இருப்பதிலும் பிரச்சினை இருக்கிறது. ஓநாய்கள் என்னை விரட்டுகின்றன என்றது. பூனையின் எண்ணத்தை அறிந்து கொண்ட முனிவர் உடனே பூனையை ஓநாயாக மாற்றினார். ஓநாயும் சந்தோசமாக சென்றது.

மீண்டும் ஒரு நாள் ஓநாய் திரும்பி வந்தது. என்ன விஷயம்? என்று புன்சிரிப்புடன் வினவினார் முனிவர். ஆம் முனிவரே! என்னை சிறுத்தைகள் கடிக்க வருகின்றன என்றது. ஓஹோ என்ற முனிவர் அதை சிறுத்தையாக மாற்றினார். மீண்டும் சில காலம் கழிந்த பின் சிறுத்தை முனிவரைத் தேடி வந்தது.

சிங்கங்கள் என்னை காட்டை விட்டு வெளியேறு என்று உத்தரவிடுகின்றன என்றது. காரணம் என்ன என்று முனிவர் கேட்டார். பலசாலிகள் ஒரே காட்டில் இருக்கக் கூடாது என்பதே சிங்கங்களின் எண்ணம் என்றது. உடன் அதை சிங்கமாக மாற்றினார். சிங்கம் ஆகிய பின்னரும் ஒருநாள் அவசர அவசரமாய் முனிவரிடம் ஓடி வந்தது சிங்கம். சுவாமி நகரத்திலிருந்து வந்த அரசன் ஒருவன் சிங்க வேட்டை ஆடினான். தப்பிப் பிழைத்தது நான் மட்டும்தான் என்றது.

முனிவரும் சிங்கத்தை அரசனாக்கினார். அதன் பின்னர் ஆறு ஏழு மாதங்களின் பின்னர் அரசன் கிழிந்த துணிமணிகளுடன் முனிவரைப் பார்க்க வந்தான்."என்ன ஆயிற்று உனக்கு?" என்றார் முனிவர். "எதிரி நாட்டு அரசன் போர் தொடுத்தான். எனக்குப் போர் செய்யவே பயமாக இருந்தது. இருப்பினும் என் சார்பாக எல்லோரும் போர் புரிந்தனர். கடைசியில் எதிரிகள் அரண்மனைக்குள் புகுந்து என்னைக் கைது செய்து பாதாளச் சிறையினுள் அடைத்தனர். நான் தப்பி வந்துவிட்டேன்" என்றான் அரசன்.


இப்போது நான் என்ன செய்ய வேண்டும், உனக்காக எதிரியுடன் போராட வேண்டுமா? என்றார். அந்த அரசன் அமைதியாக இருந்தான். முனிவர் சொன்னார். "சிற்றெலியாக இருந்த உன்னை அரசர் வரை உயர்த்தினேன். ஆனாலும் உன்னுள் உள்ள எலித்தன்மை மாறவில்லை. பயத்துடனே இருந்தாய். இனி நான் உனக்கு உதவுவதற்காக எது செய்தாலும் அது உனக்கு உதவாது. இதுவரை எலியின் மனதையே பெற்றிருக்கும் நீ இனியும் எலியாக இருப்பதே நல்லது" என்று கூறி அரசனை எலியாக மாற்றினார் முனிவர்



- எம்மிடமிருக்கும் பயத்தினை விலக்காது விடின் கிடைக்கும் வாய்ப்புகள் கூட வீணாகிப்போகும்

**சிந்திக்க .. ..**

விதைத்தவன் உறங்கலாம்,
ஆனால் விதைகள்
ஒருபோதும்
உறங்குவதில்லை:



லாவண்யா.மா
தரம் - 08,



வீ.தனகேசினி
தரம் - 01

**பொது அறிவு - 22**

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. விக்கிபீடியாவினை உருவாக்கியவர்கள் யாவர்?
 ஜிம்மி வேல்ஸ், லாரி சங்கர்
02. விக்கிபீடியா எப்போது, எங்கு உருவானது?
 அமெரிக்காவில் 2001 ஜனவரி 15இல்
03. பொதுக் கழிப்பறைகள் இல்லாத நாடு எது?
 பெரு
04. தனக்கென தாய்மொழி இல்லாத நாடு எது?
 சுவிட்சர்லாந்து
05. சர்வதேச அளவில் 2013இல் புழக்கத்திலுள்ள முதலாவது நாணயம் எது? சீனாவின் யுவான்
06. 2020இல் உலக வர்த்தக கண்காட்சி எங்கே நடைபெறவுள்ளது? துபாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாதப் போட்டியில் வெற்றி

திரு/விபுலானந்தா கல்லூரி மாணவர்கள் வலையமட்ட தமிழ்த்தின விவாதப் போட்டியில் முதலாம் இடமும், மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்று வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

படத்தில் கல்லூரியின் அதிபரையும் ஆசிரியர்களையும் பங்குபற்றிய மாணவர்களையும் காணலாம்.




## சின்னம் சூட்டும் விழா

கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய சுற்றாடல் படையணியினருக்கு முதலாவது சின்னம் சூட்டும் நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி.என்.எஸ்.அமீன்வாரி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது பிரதம விருந்தனராகக் கலந்துகொண்ட கிண்ணியா கோட்ட சுற்றாடல் ஆணையாளர் எம்.எம். இபாதுல்லாவினால், பாடசாலை சுற்றாடல் படையணியில் இணைந்து பணியாற்றிவரும் 30 மாணவிகளுக்கு சின்னம் சூட்டப்பட்டது.



## விபுலானந்தாவின் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு மற்றும் சின்னம் சூட்டு விழா

-சேனையூர் நிரூபர்-

தி/விபுலானந்தாக் கல்லூரியின் 68வது கல்லூரித் தின நிகழ்வும், மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், இல்லவிளையாட்டுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் அதிபர் ஆர்.ஜெரோம் அவர்களின் தலைமையில் பாடசாலையின் விபுலானந்தர் மண்டபத்தில் 11.05.2015 அன்று இடம்பெற்றது..

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் கலந்து கொண்டிருந்தார். கௌரவ விருந்தினராக திருக்கோணமலை கல்வி வலய உடற்கல்வி உதவிப்-பணிப்பாளர் திருமதி டி.இராஜதுரை அவர்களும், சிறப்பு விருந்தினராக பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.கோனேஸ்வரநாதன் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். கல்லூரித்தினம் கேக் வெட்டிக் கொண்டா-டப்பட்டதுடன், மாணவர்களின் கலை நிகழ்வு-களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.










## நூல் வழங்கி வைப்பு

ஏறாவூர் பொதுநூல-கத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒருதொகுதி புத்தகங்கள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்-பட்டது. ஏறாவூர் நகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களே இவ்வாறு நூலகர் விமலா சித்திரவேலிடம் கையளிக்கப்பட்டது.



## மாயனின் "அவனும் அதுவும்" சிறுகதைத்தொகுதி

**மக்கள் முரசு**

ஈழத்து இலக்கிய உலகில் தடம்பதிக்கும் இளம் தலைமுறை எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக 'மாயன்' என்னும் புனைப்பெயருக்குள் ஒழிந்து கொண்டிருக்கும் திரு.இரா.ஸ்ரீஞானேஸ்வரன் காணப்படுகிறார். இலக்கியத்துறை மீது மிகுந்த ஆர்வம் காட்டுகின்ற இவர் பத்திரிகைத்துறையில் தனது பங்களிப்பைச் சிறப்பாக செய்துவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையிலிருந்து வெளிவரும் 'மலைமுரசு' பத்திரிகையின் ஆசிரியராகிய இவர் 1999 முதல் 2012 வரை தான் எழுதிய எட்டுச் சிறுகதைகளைத் தொகுத்து 'அவனும், அதுவும்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். அண்மையில் இந்நூலைப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது.




இச்சிறுகதைத் தொகுதியில் எட்டுக் கதைகள் அடங்கியுள்ளன. 'அவனும் அதுவும்' 'ஒரு புயலின் பிறப்பு' 'நசுங்கல்' 'நிறங்களற்ற கனவுகள்' 'ஊமையின் பாடல்' 'சபிக்கப்பட்ட நாயின் சாவு' 'பரிநிர்வாணம்' 'அஞ்ஞாத வாசம்' ஆகியவை அவைகள்.

இவர் திரு.இராமநாதன், திருமதி நாகமணி ஆகியோர்களின் புதல்வர். முதுமாணி பட்டயக் முகாமைக்கணக்காளர், மலைமுரசின் ஆசிரியர், திருகோணமலை முத்தமிழ்ச் சங்க செயற்பாட்டாளர், திருகோணமலை திரைப்-படச்சங்கத் தலைவர் எனப் பல தளங்களில் இயங்கிவருபவர்.

இவர் எழுதிய முதலாவது சிறுகதை 'சிறகு' வடக்குகிழக்கு மாகாண பரிசினைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. 'சரிநிகர் சஞ்சுதன்' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். நாடகங்களை நெறிப்படுத்து-வதிலும், நடிப்பதிலும் வல்லமை பெற்றவர். இவர் இயக்கிய நாடகங்கள் மாகாணமட்டத்தில் முதலாவது இடத்தையும், தேசிய மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. 40 கவியரங்குகளுக்கு மேல் கலந்து கொண்ட ஒரு நல்ல கவிஞன்.

ஒரு சிறுகதையின் உருவம், உள்ளடக்கம், மொழிநடை பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் அச்சிறுகதை வாசகனின் மனத்தில் விதைக்கும் உணர்வே அச்சிறுகதையின் தரத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாக அமைந்து விடுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் இச்சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள எட்டுக் கதைகளுமே வெவ்வேறு வகையில் நமது மன உணர்வுகளைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இதற்கு 'மாயனின்' மொழி நடையே பெரிதும் உதவி செய்துள்ளது எனத் துணிந்து கூறலாம்.

சிறுகதை சிறப்பாக அமைவதற்கு மொழி ஆழுமை மிகவும் தேவையான ஒன்றாகும். 'அவனும், அதுவும்' சிறுகதைத் தொகுப்பில் மொழிநடை மிகச் சிறப்பாகவே கையாளப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

'காலத்தின் கண்ணாடி இலக்கியம்' என்பார்கள். ஈழத்திலும், வியட்நாமிலும் நடந்த போர் அவலங்களை, உள உணர்வுகளை உள்ளம் உருக்கும் வகையில் எடுத்துக் கூறுகின்றன இத் தொகுப்பில் அமைந்துள்ள எட்டுக் கதைகளும்.

இத்தொகுப்பிலுள்ள முதலாவது கதையான 'அவனும் அதுவும்' வியட்னாமிய கிராமம் ஒன்றின் போர்க்கால சூழலை வெகுசிறப்பாக எடுத்துச் சொல்லுகிறது. வன்செயலின் விளைவு எத்தகைய கொடுமையானது என்பதை இக்கதை மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. மிக இயல்பான நடையில் கவித்துவம் நிறைந்த சிறுசிறு சொற்களால் இக்கதையை வளர்த்துச் செல்லும் மாயனின் பாணி கதைக்கு மெருகூட்டுகிறது.



'நிறங்களற்ற கனவுகள்' யாழ்ப்பாண மண்-வாசனை நிறைந்த கதை. தன்னுடைய ஆசைகளை தனது குடும்பத்தோரின் தேவைகளுக்காக தனக்குள்ளாகவே எரித்துக் கொண்டு தியாகம் செய்கிறான் ராம். அவனுடைய தியாக உள்ளம் நம்மை பிரமிப்படையச் செய்கிறது.

ஒரு புயலின் பிறப்பில் வரும் சிறுவனும், அவன் சிந்தனைகளும் யதார்த்த பூர்வமானவை. சபிக்கப்பட்ட நாயின் சாவு யுத்தகாலத்தின் கோரத்தை அப்படியே யதார்த்த பூர்வமாக சொல்லும் அருமையான படைப்பு.

இதயத்தைப் பிழிந்தெடுக்கும் வகையில் ஏழ்மையின் கோரத்தை, வாழ வழியில்லாமல் ஒரு பெண் எடுக்கும் முடிவைச் சொல்கிறது 'பரிநிர்வாணம்'. வாழ்க்கையில் சகிக்க முடியாத அளவு துன்பங்களை அனுபவித்த ஒரு பெண் எடுக்கும் முடிவை நாசூக்காக அது கூறுகிறது. குடும்ப வாழ்க்கையில் வெறுப்புக்களை சம்பாதித்த தந்தை இறந்ததை விடுதலை உணர்வாய்க் கருதும் ஒரு போர்வீரனின் மனதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது 'அஞ்ஞாதவாசம்'.

சமூகத்தில் பரவிக்கிடக்கும் எண்ணக் கருக்களைப் பயன்படுத்தி தனது ஆற்றல் மிக்க மொழி நடையால் அவற்றை சிறுகதைகளாகச் செதுக்கித் தந்திருக்கிறார் திரு.மாயன் அவர்கள் தொடர்ந்தும் அவர் இம்முயற்சிகளில் ஈடுபட்டு சமூக நலன் சார்ந்த எண்ணக்கருத்துகளை முயன்று எடுத்து மேலும் நல்ல சிறுகதைகளை தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு தருவார், தரவேண்டும் என வாழ்த்துவோம்.

--கலாபூசணம் வே.தங்கராசா --

www.geevanathy.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகரை....

தெரிவித்தார்.

காலை 11மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந் நினைவேந்தல் நிகழ்விற்கு தமிழ் மக்கள் அனைவரையும் வருமாறு அக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

வாகரை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள இடத்தில் நடைபெறும் இந் நினைவேந்தலில் நினைவுச் சுடரேற்றல் மற்றும் நினைவுரைகள் ஆகியன நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சம்பூர் மண்....

வர்த்தமானி அறிவித்தலைச் சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்திருந்தது.

தான் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அந்த நிறுவனம் நீதிமன்றத்தில் கூறியது.

முதலீட்டு சபையில் இந்த அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக சீனித்தொழிற்சாலை, உர உற்பத்தி, மின்சார உற்பத்தி வாகனங்களை பொருத்தும் தொழிற்சாலை உள்ளிட்டவை மேற்படி காணியில் நிர்மாணிக்கப்படவிருந்ததாக மனுதாரர் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அத்துடன் நேரடியாக ஐயாயிரம் தொழில்வாய்ப்புகளும், மறைமுகமாக 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கும் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் என அந்த மனுவில் கூறப்பட்டது.

வாதங்களை கவனத்தில் எடுத்து கொண்ட உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட காணியை கையகப்படுத்தும் இவ்வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த தீர்மானித்ததுடன் காணி கையகப்படுத்தப்படுவது சம்பந்தமாக வாதங்களை முன்வைக்குமாறு அரச சட்டத்தரணிக்கு அறிவித்துள்ளது.

## ஊடக....

பன்குளம் பகுதியின் செய்தியாளர் யாசின் தாக்கப்பட்ட விடயம் தொடர்பாக திருகோணமலை ஊடகவியாளர் சங்கமானது கடும் கண்டனத்தை தெரிவிப்பதுடன் ஊடக சுதந்திரத்தினை கேள்விக்குள்ளாக்கும் செயலில் ஈடுபட்டவர் மீது காவல்துறை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோளையும் விடுத்துள்ளனர்.

இதேவேளை அரசியல் தலையீட்டினால் தாக்கியவரைக் கைது செய்வது தாமதமாவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மாகாண சபையின் அதிகாரங்கள் கேள்விக்குரியனவே!

நாங்கள் மாகாண சபை என்று பெரிதாக கூறிக்கொண்டுள்ள போதிலும் எங்களுக்கு எந்தளவு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது என கிழக்கின் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற மாகாணசபையின் நடமாடும் சேவையைத் தொடக்கிவைத்த உரையாற்றும் போதே முதல்வர் ஹாபிஸ் நசீர அஹமட் இவ்வாறு தெரிவித்தார்.

## ஒரு தேசமாக....

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - இலங்கைத்தீவு காலனித்துவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது முதல் இன்றுவரை தொடரும் தமிழ் மக்களுக்கெதிரான தொடர்ச்சியான இனப்படுகொலை நடவடிக்கைகளின் அதிமூர்க்கமான ஒரு காலகட்டம் கிழக்கே 2006 இல் மாவிலாறில் ஆரம்பித்து வடக்கே 2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த இறுதிப் போரின் காலமாகும்.

இக்காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இழப்பு தனிநபர்களாக இறந்தவர்களது உறவினர் நண்பர்கள் மீதும் அவர்களது குடும்பங்கள் மீதும் ஒட்டுமொத்தமாக தமிழர்களாக எமது கூட்டிருப்பின் மீதும் ஆறாத மனவடுவை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

இந்நிலையில் எமது தனிமனித மற்றும் கூட்டுக் குணப்படுத்தலுக்கும் ஒரு தேசமாக எமக்குரிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான எமது பயணத்தின் தொடர்ச்சிக்கும் நாம் எமது இழப்புக்களை நினைவுகூர்வதும் நினைவுகளைப் தொடர்ச்சியாக பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எமது கடமையும் உரிமையுமாகும்.

இதயம் நிறைந்த வேதனைகளோடு தமிழ் மக்களாகிய நாம் மே 18ஐ அண்மித்து வரும் இவ்வேளையில் உணர்வுபூர்வமாக இத்தினத்தை அனுசரிக்க தமிழ் சிவில் சமூக அமையம் அனைவரையும் வேண்டி நிற்கிறது. பொருள்பொதிந்த ஒரு நினைவுகூரலை உறுதிப்படுத்த பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கிறோம்.

- அஞ்சலி நிகழ்வுகள் கூட்டு ஒழுங்கு செய்யப்படும் இடங்களுக்கு மக்கள் ஆர்வத்துடன் சென்று கலந்து கொள்ளவேண்டும்.
- அன்றைய தினத்தில் அனைத்து ஆலயங்களிலும் உணர்வுபூர்வமான நினைவேந்தல் வழிபாடுகளை மேற்கொள்ளல்.
- பாடசாலைகளில் காலை ஒன்றுகூடலின்போது நினவுச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தலும் அஞ்சலி உரை ஒன்றை நிகழ்த்தலும்.
- அரச அரசு சார்பற்ற நிறுவனங்களில் பொருத்தமான நேரத்தில் ஒன்றுகூடி நினைவுச்சுடரேற்றி அஞ்சலி செலுத்துதல்.
- தமது நிர்வாகத்திற்கு உட்பட்ட திணைக்களங்களில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனையை வடக்கு, கிழக்கு மாகாணசபைகள் விடுக்கவேண்டும்.
- பொது அமைப்புக்கள் அன்றைய தினத்தில் மாலைப்பொழுதில் கிராம மட்ட அஞ்சலி நிகழ்வுகளை ஒழுங்கு செய்யவேண்டும்.
- மரணித்தவர்களுக்கான நினைவுச்சின்னம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்சொல்லப்பட்டவை போன்ற முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் உணர்வு பூர்வமான நினைவேந்தல் ஒன்றை மேற்கொள்ள அனைத்து தமிழ் மக்களையும் அழைத்து நிற்கின்றோம் என தமிழ் சிவில் சமூக அமைய அறிக்கை தெரிவிக்கின்றது.

## திருகோ....

தெரிவித்தார்.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு நினைவுச் சுடரேற்றுவதுடன் பிரார்த்தனையும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அனைத்துத் தமிழ் மக்களையும் அங்கு கூடுமாறு திருகோணமலைத் தமிழ் சிவில் சமூக அமைப்பு வேண்டுகோளை விடுத்துள்ளது.

## திருமலை நகர....

காலையிலேயே தொழிலாளிகள் இக்கலைவைச் சந்தோசத்துடன் கொண்டாடியுள்ளனர்.

இதேவேளை 15ம் திகதி காலை தொழிலாளிகள் இவ்வாறு கொண்டாட்ட மொன்றை ஏற்பாடு செய்துள்ளதை அறிந்துகொண்ட நகரசபைச் செயலாளர் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும் வடக்குகிழக்கு மாகாண உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைத்து கொண்டாட்டத்தை நடத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து உத்தியோகத்தர் சங்கம் இக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதைக் கைவிட்டுள்ள போதும் தொழிலாளர் சங்கம் இந்நிகழ்வை நடத்தியுள்ளது.

சாதிவெறி பிடித்த, மதிப்பற்ற தலைமைத்துவமே இதுவரை காலமும் நடைபெற்றதாகத் தெரிவித்துள்ள தொழிலாளர்கள் நகரசபை கலைக்கப்பட்டதைத் தாம் விருப்புடனேயே கொண்டாடியதாகத் தெரிவித்தனர்.

## இனப்படுகொ.....

மக்கள் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த சுமந்திரன் தற்போதுள்ள ஆட்சியுடன் தமது கட்சி எவ்வித எழுத்தாலான ஒப்பந்தங்களையும் செய்யவில்லை, ஆனால் தாங்கள் இதயத்தால் இணைந்திருப்பதாகத் தெரிவித்திருந்தார். அதையடுத்து தனது பதிவைச் செய்த கஜேந்திரகுமார் சந்திரிக்கா அம்மையார் 75 வீதப் போரை முடித்ததாகக் கூறுகின்றார். தற்போதைய சனாதிபதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்ட தானே போரில் பிரதான பங்கு என்கின்றார், தற்போதைய பிரதமர் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தான் போரை முடிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தாக கூறியுள்ளார். சரத்பொன்சேகாவோ எல்லோரும் குளிர் அறைகளில் இருக்க தானே களத்தல் நின்று பணியை முடித்ததாகக் கூறுகின்றார். இவர்கள் அனைவரும் உள்ள அணியில் நீங்களும் இதயத்துடன் இணைந்திருப்பதாகக் கூறுவதால் நீங்களும் இனவழிப்பிற்குத் துணைபோனவர்களா? என கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

சிங்கக்கொடி சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்வியை அடுத்து சிங்கக்கொடி தமிழரின் தேசியக் கொடி என்பதால் கட்சிக்கு விருப்பமில்லாவிட்டாலும் அதனைக் கையேந்தவேண்டியுள்ளது என சுமந்திரன் தெரிவித்துள்ளார். அப்போது அங்கு கலந்துகொண்டிருந்தவர் சிங்கக் கொடியை கையில் வைத்து ஆட்டிக்கொண்டிருக்க என்ன தேவை உள்ளது என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்க அவர் விரும்பவில்லை

## இரால்குழி....

13ம் திகதி காலை தெருவோரத்தில் கவனயீர்ப்பாக ஆரம்பித்த இந்தப் போராட்டமானது காலை 9 மணியளவில் தெரு மறிப்புப் போராட்டமாக மாறியதை அடுத்து பெரும் பரபரப்பு அங்கு ஏற்பட்டது.

மட்டக்களப்பு திருகோணமலை பெருந்தெருவில் போக்குவரத்து முற்றாக நிலைகுழைந்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூர் தலைவர்கள் சிலர் அங்கு வந்து போராட்டத்தைக் கைவிடுமாறு மக்களை வேண்டிய போதும் மக்கள் அந்த வேண்டுகோள்களை நிராகரித்ததை அடுத்து நிலைமை மோசமடையத் தொடங்கியிருந்தது.

போராடும் மக்களின் நிலைமையைக் கேட்டறிந்துகொள்ள மூதூர் பிரதேசச் செயலக அலுவலர்கள் எவரும் அங்கு வராததால் போராட்டத்தைத் தொடரவே மக்கள் முனைப்புடன் இருந்தனர்.

தகவலறிந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஹரி, மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் மற்றும் மலைமுரசின் ஆசிரியர் ஸ்ரீஞானேஸ்வரன் அவ்விடத்திற்குச் சென்று மக்களுடன் பேசி வீதிப் போக்குவரத்தைச் சீர்செய்ய மக்களை அனுமதிக்கும் படி கேட்டுக் கொண்டதுடன் தாங்கள் சென்று பிரதேசச் செயலக அலுவலர்களை அழைத்து வரும்வரை போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறும் வேண்டுகோளை விடுத்தனர்.

அதனையேற்றுக்கொண்ட மக்கள் வீதிப்போக்குவரத்தைச் செய்ய அனுமதியளித்ததும் மலைமுரசின் ஆசிரியரும் போராடிய மக்களின் சார்பாக மேலும் நால்வரும் மூதூர் பிரதேசச் செயலாளரைச் சந்தித்து அங்கிருந்து சில அலுவலர்களை அழைத்து வந்து மக்களின் குறைகளைக் கேட்க ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

அவ்வலுவலர்களிடம் மண் அகழ்வதை முழுவதுமாக நிறுத்த வேண்டும் என மக்களால் கோரிக்கை விடப்பட்டதுடன் இரால்குழிக்குப் பொறுப்பான கிராம சேவையாளரை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்றும் மக்கள் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ்விரு வேண்டுகோள்களுக்குமான தீர்வுகளை எதிர்வரும் 25ம் திகதிக்கு முன்னர் தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவ்வாறில்லாவிடில் மீண்டும் மக்கள் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்குவர் என்றும் தெரிவிக்கப் பட்டதை அடுத்து போராட்டத்தைத் தற்காலிகமாக முடிவிற்கு வந்துள்ளது.

இதேவேளை போராட்டம் நடைபெற்ற இடத்தில் இருந்த பெயர்ப்பலகையொன்றை மக்கள் சேதமாக்கியதாகக் கூறி காவல்துறையில் மறுநாள் புகாரொன்று அளிக்கப்பட்டதன் பேரில் இரால்குழி மக்கள் காவல்துறைக்கு அழைக்கப் பட்டிருந்தனர். எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அந்தப் பெயர்ப்பலகைக்கான செலவினை மீளத் தருவதாக உறுதிப்படுத்தியதை அடுத்து அம்முறைப்பாடும் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணித்தும் வாழும் உயிர்கள்

கடந்தவார தொடர்ச்சி .. ..



அன்றாடம் உண்ண உணவில்லாமல் வாடும் அவரிடம் சென்று ஒரு கோடிப் பணம் வேண்டும் என்று கேட்டால் ஒன்று, அவரைக் கிண்டல் பண்ணுவதாக எடுத்துக் கொள்வார். அல்லது கேட்பவரைப் பைத்தியமாகப் பார்ப்பார்கள்.

உயிருடன் இயங்கிக் கொண்டிருப்பவரிடமே எதைக் கேட்க முடியுமோ எதை அவரால் செய்ய முடியுமோ அதை மட்டுமே கேட்க வேண்டும் என்றிருக்கும் போது, மகான்களின் மண்ணறைகளில் மண்டியிட்டு பிள்ளைப் பாக்கியத்தையும், நோய் நிவாரணத்தையும் கேட்பது எப்படி அறிவுப் பூர்வமாக அமையும் என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இவர்கள் யாரிடம் உதவி தேடுகின்றார்களோ அவர்கள் பூமிக்கு மேலே உயிருடன் இருந்தால் கூட இவற்றைக் கேட்க முடியாது எனும் போது பூமிக்குக் கீழே இறந்து போன நிலையில் இருப்பவர்களிடம் எப்படிக் கேட்க முடியும்!? உயிர்த்தியாகிகள் கூட சுவர்க்கத்தில்தான் உயிருடன் உள்ளனர் மண்ணறைகளில் அல்ல என்பது கவனிக்கத் தக்கதாகும்.

அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்வதை ஊக்குவிப்பதற்காக அருளப்பட்ட இந்த வசனங்களைத் தமது தவறான கொள்கைக்கு ஆதாரமாக இவர்கள் முன்வைக்கின்றனர். இவர்களின் இந்தச் செயற்பாட்டிற்கும் இந்த வசனங்களுக்கும் எள்ளளவு கூட சம்பந்தம் இல்லை என்பதே உண்மையாகும்.

தொடரும் .. ..

– இஸ்லாம்கல்வி –



# ஈரல் கூட்டு

**தேவையான பொருட்கள்**

ஆட்டு ஈரல் - 500 கிராம், வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 2, வர மிளகாய் - 4, இஞ்சி - பூண்டு விழுது 1 தே.கரண்டி, மிளகு - 1 தே.கரண்டி, சீரகம் - 1 தே.கரண்டி, சோம்பு - 1 தே.கரண்டி, மஞ்சள் பொடி - 1 தே.கரண்டி, கறிவேப்பிலை - தேவையான அளவு, எண்ணை - 3 மே.கரண்டி, பட்டை, இலை - தாளிக்க

**செய்முறை**



ஈரலை நன்கு கழுவி சிறிய துண்டுகளாக வெட்டி இருநூறு மி.லி தண்ணீர் விட்டு முக்கால் பதத்திற்கு வேக வைக்க வேண்டும். தண்ணீர் முழுவதும் சுண்டி விட வேண்டும். பின்னர் மிளகு, சீரகம், சோம்பு, வர மிளகாய் நான்கையும் பத்து நிமிடம் ஊற வைத்து ஒரு மே.கரண்டி உப்பு சேர்த்து விழுதாக அரைத்து ஈரலில் போட்டு பிசறி அரை மணி நேரம் வைக்க வேண்டும். வெங்காயத்தை நீள நீளமாகவும், பச்சை மிளகாயை சிறிது சிறிதாகவும் நறுக்கி வைக்க வேண்டும். அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் ஊற்றி பட்டை, இலைணை இட்டு தாளிக்க வேண்டும். வாசனை வந்ததும் வெங்காயம் போட்டு வதக்கி, சிவந்ததும் ப.மிளகாய், கறிவேப்பிலை போட வேண்டும். இரண்டு நிமிடம் கழித்து இஞ்சி - பூண்டு விழுது, ம.பொடி, ஒரு தே.கரண்டி உப்பு மூன்றையும் சேர்த்து வதக்க வேண்டும். வதங்கியதும் ஈரல் கலவையைப் போட்டு ஐந்து நிமிடம் வதக்கி, அரை டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பை குறைத்து வைக்க வேண்டும். அடிக்கடி திறந்து கிளறி விட வேண்டும். தண்ணீர் வற்றியதும் இறக்க வேண்டும்.

## முகத்தில் அதிகம் வியர்க்கிறதா?

**கோடை காலம் என்றவுடனே அனைவரும் சந்திக்கும் பிரச்னைகளில் ஒன்று தான் வியர்வை. வியர்வை அதிகம் வெளிவந்தால் துர்நாற்றத்தை ஏற்படுத்தி. சங்கடமான சூழ்நிலை உருவாகும்.**

**அழகு குறிப்பு**

- முல்தானி மெட்டி பொடியை ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து, அதனை முகத்தில் தடவி ½ மணிநேரம் உலர வைத்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.
- இதேபோன்று கடுகை அரைத்து அதனை ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி உலர வைத்து குளிர்ந்த நீரில் கழுவினால் பலன் கிடைக்கும்.
- அதிக நீர்ச்சத்துள்ள வெள்ளரிக்காயை அரைத்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.
- பால் மற்றும் தேனை ஒன்றாக கலந்து, சருமத்தில் தடவி ½ மணிநேரம் ஊற வைத்து கழுவ வேண்டும்.




## வேறு சில டிப்ஸ்

- இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.
- ஆப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை குறையும்.

இக்காலகட்டத்திற்குப் பொருந்தும்

# பைபிள் மொழி

ஒரு மாராவிற்குப்பின்
ஒரு மதுரம் உண்டு
ஒரு துயரத்திற்குப் பின்
ஒரு ஆறுதல் உண்டு
ஒரு புயலுக்குப் பின்
ஒரு அமைதி உண்டு
ஒரு பரீட்சைக்குப் பின்
ஒரு வெற்றி உண்டு
ஒரு யுத்தத்திற்குப் பின்
ஒரு ஜெயம் உண்டு
ஒரு வனாந்தத்திற்குப் பின்
ஒரு கானான் உண்டு
ஒரு மரணத்திற்குப் பின்
ஒரு உயிர்த்தெழுதல் உண்டு



தொகுப்பு : வேதாகமத்திலிருந்து
செ.செரூபி
உவர்மலை விவேகானந்தா கல்லூரி

# வியாதியைக் கட்டுப்படுத்தும் நீர்

மனிதனின் உடல் உழைப்புக்கு ஏற்றவாறு நீர்ப்போக்கு ஏற்படுகிறது, ஒரு நாளைக்கு ஆண்கள் 3 லிட்டர் தண்ணீரும், பெண்கள் 2.2 லிட்டர் தண்ணீரும் அருந்த வேண்டும். தினமும், உடலுக்கு தேவையான அளவு தண்ணீரை எடுத்துக்கொள்வதன் மூலம், நம்மை எந்த நோய்களும் நெருங்கவிடாமல் தடுக்கலாம்.

1. காலையில் எழுந்ததும் பல் துலக்கும் முன்பே 160மிலி (4 டம்ளர்) தண்ணீர் அருந்துங்கள்.
2. பல் துலக்கி வாய் அலம்பிய பின் 45 நிமிடங்களுக்கு உணவோ, நீராகாரம் எதுவாயினும் உட்கொள்ளக் கூடாது.
3. 45 நிமிடங்களுக்குப் பின் வழமையான உங்கள் உணவை உட்கொள்ளலாம்.
4. காலை உணவுக்கு பின் 15 நிமிடங்களுக்கும், மதியம் மற்றும் இரவு உணவிற்கு பின் 2 மணி நேரங்களுக்கும் எதுவும் உட்கொள்ள வேண்டாம்.
5. முதியோர், நோயாளிகளால் ஆரம்பத்திலேயே 4 டம்ளர் நீரை அருந்த முடியாவிட்டால், கொஞ்சம் கொஞ்சமாக நீர் உட்கொண்டு நாளடைவில் 4 டம்ளர் அளவு நீர் அருந்த பழகலாம்.



**எந்த நோய்க்கு எத்தனை நாட்கள் இந்த முறையை பின்பற்ற வேண்டும்:**

- உயர் இரத்த அழுத்தம் - 30 நாட்கள்.
- வாய்வுக்கோளாறுகள் - 10 நாட்கள்.
- சர்க்கரை வியாதி - 30 நாட்கள்.
- புற்றுநோய் - 180 நாட்கள்.
- காசநோய் - 90 நாட்கள்.

இதனை பின்பற்றி வாழ்ந்தால் நோய்கள் குணமாகும்.

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும். பணிகளில் ஈடுபாடு வளரும். நல்லோரின் ஆலோசனை கிடைக்கும்.

**ரிஷபம்** :பணவரவு அதிகரிக்க புதிய வாய்ப்பு உருவாகும். தவறாமல் பயன்படுத்துவீர்கள். ஆன்மிக நம்பிக்கை, மனதில் ஊக்கம் தரும்.

**மிதுனம்** : நடை, உடை, செயலில் வசீகரம் அதிகரிக்கும். வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். அரசு சார்ந்த உதவி கிடைக்கும்.

**கடகம்** : நற்செயல்களால் நண்பர், உறவினர்களிடம் புகழ் பெறுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க சிலருக்கு அனுகூலம் உண்டு.

**சிம்மம்**: பகைமை பாராட்டிய வரும் நல்ல எண்ணத்துடன் உதவுகிற சூழல் உருவாகும். பேசுவதில் நிதானம் வேண்டும்.

**கன்னி** : மனதில் தைரியம், செயலில் உத்வேகம் அதிகரிக்கும். இடம், சூழல் உணர்ந்து பேசுவீர்கள்.

**துலாம்** : கடந்த கால நற்செயலுக்கான புண்ணிய பலன் தேடி வரும். குடும்பத் தேவையை நிறைவேற்ற பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்** : பலநாள் நினைத்த எண்ணம் இனிதாக நிறைவேறும். உறவினர், நண்பரிடம் உங்கள் மீதான மதிப்பு, மரியாதை கூடும்.

**தனுசு** : சுற்றுச்சூழ்நிலையின் போக்கு உணர்ந்து செயல்பட வேண்டும். உடன்பிறந்தவர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில் சார்ந்த இடையூறை, தாமதமின்றி சரி செய்யவும்.

**மகரம்** : உடல்நலம் பேணுவதால் சொல், செயலில் புதிய பரிமளிப்பு உருவாகும். புதியவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும்.

**கும்பம்** :சொல், செயலில் நேர்மை நிறைந்திருக்கும். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். மகளின் ஜாதக யோக பலம், நன்மைகளை தரும்.

**மீனம்** :செயல் சிறப்பாக அமைந்து, அதிக புகழ், பணவரவை தரும். உடன்பிறந்தவர்களுக்கு சுப நிகழ்ச்சி நடத்த, அனுகூலம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## கிராமிய விளையாட்டுப் போட்டி

- தன்யா -




கடந்த 04.05.2015 அன்று மூதூரில் பிரபல்யம் பெற்ற தமிழ் விளையாட்டுக் கழகங்களுள் ஒன்றான ஈஸ்டன் விளையாட்டுக் கழகம் சித்திரைப் பொங்கல் விளையாட்டு விழாவைத் திறம்பட நடாத்தியிருந்தது.

இந்த விளையாட்டு விழாவிற்கான அனுசரணையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னயியினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் விளையாட்டு விழாவின் பிரதம அதிதியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் கஜேந்திரன், சிறப்பு அதிதியாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணன், மாட்ட அமைப்பாளர் ஹரிஹரன் மற்றும் மலைமுரசின் ஆசிரியர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

பாரம்பரிய விளையாட்டுக்கள் பல இங்கு நடத்தப்பட்டதுடன் சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களிற் பெரும்பாலானவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொண்டமை சிறப்பானதாகும்.









# விளையாட்டு முரசு

## கோல உடை வழங்கி வைப்பு

- கதிரவன் -

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கும் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் இடையே Battle of the Golds என்னும் பெயரில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வீரர்களின் போட்டிக்கான உத்தியோகபூர்வ கோல உடைக்கான அனுசரணையை இலங்கை வழங்கி வருகின்றது. இவ்வருடம் 22வது போட்டி நடைபெறவுள்ளது. கடந்த வியாழக்கிழமை 14.05.2015 ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அலுவலகத்தில் வைத்து திருகோணமலை நகர கிளை முகாமையாளர் கா.சந்திரன் அதனை அதிபரிடம் கோல உடைகளை வழங்கி வைத்த பின்னர் வீரர்களுக்கும் வழங்கி வைத்தார்.







## வெற்றி பெற்றவருக்கு வரவேற்பு

கட்டார் தோஹா விளையாட்டரங்களில் நடைபெற்ற முதலாவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற அம்பகமுவை பிரேதசத்தை சேர்ந்த யாமனி துலாஞ்சலிக்கு கினிகத்தேனை பகுதியில் வரவேற்பளிக்கப்பட்டது. பகுதி பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் யாமனி துலாஞ்சலியை வரவேற்றனர். யாமனி துலாஞ்சலிக்கும் இவரை பயிற்சி அளித்த அனுர பண்டார திஸாநாயக்கவுக்கும் வரவேற்பு இடம்பெற்றது.

# திருமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி தங்கங்களின் சமர் 16.05.2015 மட்டு சிவானந்தா கல்லூரி



கிழக்கு மாகாணத்தில் இராம கிருஷ்ன மிசன் கல்லூரிகளான திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி ஆகியவற்றுக்கிடையில் தங்கங்களின் சமர் ஒன்று விட்ட ஒரு வருடமாக திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் மாறிமாறி நடைபெற்று வருகின்றது. 1993 ஆம் ஆண்டு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் திரு. சி. தண்டாயுதபாணி, சிவானந்தா கல்லூரி அதிபர் திரு.விஜயரெட்ணம் தலைமையில் முதலாவது போட்டி 1993.09.15 திருகோணமலயில் நடைபெற்றது.

இந்தப் போட்டியை நடத்துவதற்கு சனச வங்கி ஊழியர் வி.நரேந்திரா, துர்க்கா தொலைத் தொடர்பு ஸ்தாபகர் திரு.சோ. நிமல்குமாருடன் கலந்துரையாடி அனுசரணையை பெற்றுக் கொடுத்தார். முதல் போட்டி சனச வங்கியினதும், துர்க்கா தொலைத்தொடர்பு நிறுவனத்தியதும் பெயரில் சனச துர்க்கா வெற்றிக் கிண்ணமாக தொடக்கி வைக்கப்பட்டது.

இது 20 ஒவர் கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியாக ஆரம்பமாகியது. இது திருகோணமலையில் நடைபெற்று இதில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் 06.05.1994 இல் மட்டக்களப்பு வெவர் மைதானத்தில் வன்பந்து கிரிக்கட் போட்டியாக இடம் பெற்ற போது சிவானந்தா கல்லூரி வெற்றி பெற்றது. 1995.05.31 இல் இனிங்ஸ் போட்டியாக நடைபெற்ற போது இப்போட்டிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்கள் தேவைப்பட்டதனால் 30 ஓவர் போட்டியாக 1996 இல் நடைபெற்றது. 1997ல் 30 ஓவர் போட்டியாக நடைபெற்றது. தற்போது 50 ஒவர் கொண்ட ஒருநாள் போட்டியாக நடத்தப்பட்டு வருகின்றது.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியினது அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி தலைமையில் 1993 முதல் 2003 வரையும், அதிபர் திரு.மா.இராஜரெத்தினம் தலைமையில் 2004 தொடக்கம் 2010 வரையும், அதிபர் திரு.இ.புவநேந்திரன் தலைமையில் 2011 முதல் 2012 வரையும், செ.பத்மசீலன் தலைமையில் 2013 தொடக்கம் இற்றைவரையும் நடைபெற்று வருகின்றது. மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியினது அதிபர் திரு.கே.விஜயரெட்ணம் தலைமையில் 1993 தொடக்கம் 1996 வரையும் திரு.கே.இராஜரெட்ணம் தலைமையில் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரை பொ.ஆனந்தராஜா தலைமையிலும், 2008 ஆம் வருடம் திரு.ரி.ஆனந்தரூபன் தலைமையிலும், 2009 தொடக்கம் 2010 திரு.ரி.இரவீந்திரமூர்த்தி தலைமையிலும் 2013 தொடக்கம் இற்றை வரை க.மனோராஜ் தலைமையிலம் நடைபெற்று வருகின்றது.

இந்துக் கல்லாரிக்குப் பொறுப்பாசிரியர்களாக ஜனாப் அ.ப்சீர் அமீர், சி.சசிக்குமார், நூ.மு.ம.:கும் ஆகியோர் வழி நடத்தினர். 2010ம் ஆண்டு முதல் திரு.சி.சசிக்குமார் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக வழிநடத்தி வருகின்றார். சிவானந்தாக் கல்லூரிக்கு பொறுப்பாசிரியராக திரு.மோகனகுமார், திரு கிருபாகரன், திரு. சதாசிவம், டி.ஆர்.மரியசெல்வம் ஆகியோர் வழி நடத்தி வந்தனர். தற்போது திரு. பு.குகாதரன் பொறுப்பாசிரியராக வழி நடத்தி வருகின்றார்.

போட்டி முடிவுகளானது 1,3,5,7. போட்டிகளில் இந்துக்கல்லூரி தங்களது மைதானத்தில் வெற்றிகளைப் பெற்றது. அதே போல 2,4,6 போட்டிகளில் சிவானந்தாக் கல்லூரி தங்களது மைதானத்தில் வெற்றி பெற்றது.

அதிபர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்களது வேண்டுகோள் சொந்த மைதானத்தில் வெல்வதைவிட மாற்று அணி மைதானத்தில் வெற்றி பெற வேண்டும் என அடிக்கடி ஆதங்கப்பட்டுக் கொண்டார். இந்துக் கல்லூரியானது முதல் தடவையாக 2000 ஆண்டில் 8 வது போட்டியில் சிவானந்தா மைதானத்தில் தனது முதல் வெற்றியை பதிவாக்கியது. சிவானந்தா கல்லூரியானது 2007 ஆம் ஆண்டு 15 வது போட்டியில் இந்துக் கல்லூரி மைதானத்தில் தமது முதல் வெற்றியைப் பதிவாக்கியது.

1993 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியானது "Battle of the gold's என அறிமுகப்படுத்தப்பட்டது. 2002ம் ஆண்டில் 10 வது போட்டி முதல் 20வது போட்டி வரை "விபுலானந்தா நினைவுக் கிண்ணம்" வழங்கப்பட்டு வந்தது. இப்போட்டியில் 11 தடவைகள் இந்துக் கல்லூரியும், 9 தடவைகள் சிவானந்தாக் கல்லூரியும் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டது.

21வது போட்டியின் போது புதிய கிண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு இராமகிருஷ்ணா கிண்ணம் எனப் பெயரிடப்பட்டது. இதனை முதல் தடவையாக திருகோணமலை மண்ணில் சிவானந்தா வித்தியாலயம் தனதாக்கி கொண்டது.

இது வரை நடைபெற்ற 21 போட்டிகளில் 12 தடவைகள் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினரும், 09 தடவைகள் சிவானந்தா வித்தியாலயமும் வெற்றி பெற்றுள்ளன. இவ்வருடம் 22வது போட்டி மட்டக்களப்பில் சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் சனிக்கிழமை 16.05.2015 நடத்தப்பட உள்ளது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி பண்பாட அலுவல்கள், இளைஞர் விவகாரம், தொழிநுட்பம், முன்பள்ளி அமைச்சர் சி.தண்டாயுதபாணி பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

- கதிரவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரால்குழி மக்கள் தெரு மறிப்புப் போராட்டம்





இரால்குழி தமிழ் மக்கள் கடந்த 13ம் திகதி மட்டக்களப்பு திருகோணமலை வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

சட்டவிரோதமாக மண் அகல்வதால் இரால்குழி கிராமம் கடும் வெள்ள அபாயத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவித்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

17

# "ஒரு தேசமாக எமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ள நினைவுகூர்வது அவசியம்"

## தமிழ் சிவில் சமூக அமையம் வேண்டுகோள்...

"ஒரு தேசமாக எமக்குரிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான எமது பயணத்தின் தொடர்ச்சிக்கும் நாம் எமது இழப்புகளை நினைவு கூர்வதும் நினைவுகளைப் தொடர்ச்சியாக பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எமது கடமையும் உரிமையுமாகும்" என தமிழ் சிவில் சமூக அமையத்தின் அறிக்கை வெளியாகியுள்ளது.

தமிழினம் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்ட போரின் 6ம் ஆண்டை நினைவுகூர்வது சம்பந்தமாக வெளியிடப் பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்

17




# இனப்படுகொலையை நிகழ்த்தியதாக கூறுபவர்களுடன் இதயங்களால் இணைந்திருப்பதால் நீங்கள் யார்?

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுமந்திரனை நோக்கிக் கேள்வி



யாழ்ப்பாணத்தில் நேற்று (15) நடைபெற்ற நேரடிக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை நோக்கி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தமிழரை இனவழிப்புச் செய்தவர்கள் தாங்களே என மார்தட்டுபவர்களுடன் இதயத்தால் இணைந்திருப்பதாகக் கூறும் நீங்களும் இனவழிப்புக்குத் துணை போனவர்களா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் ஒரே மேடையில் கலந்துகொண்ட இருவரும் தமது கட்சியின் கோட்பாடுகள் தொடர்பாக அங்கு கூடியிருந்த மக்களுடன் விளக்கங்களைப் பகிர்ந்துகொண்ட போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார் பொன்னம்பலம்.






# பாவோதலுக்கு வழங்கப்பட்ட பாடல்களில் எழுத்துப் பிழை

தமிழ்த்தினப் போட்டிகளை முன்னிட்டு வலயக் கல்விப் பணிமனையால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பாரதியின் பாடல்கள் மற்றும் பழமொழி நானூறு ஆகியவற்றில் எழுத்துப் பிழைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

நாலாம் மற்றும் ஐந்தாம் தரங்களின் முதலாம் பிரிவிற்கென வழங்கப்பட்ட பாரதியின் பாடல்களில் "என்ன" என்ற சொல்லுக்குப் பதிலாக "என்னை" என்ற சொல் பதிப்பாகியுள்ளதாகவும் பழமொழி நானூறு என்ற பாடலில் 228வது பாடலான சுட்டிச் சொல்லப்படும் என்ற பாடலில் "விருத்தம்" என்ற சொல்லுக்குப் பதிலாக "இழுக்கம்" என்ற சொல்லும், "ஊழே அடும்" என்ற இரு சொற்களுக்குப் பதிலாக "ஊழேயடும்" என்ற ஒரு சொல் பதிப்பாகியிருப்பதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

தமிழ்த் தினப் போட்டிகளில் தவறான தமிழ்ப் பதிப்புக்களை வழங்குவதையிட்டு தமிழ்ப் பெற்றோர் பலர் தமது கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

## மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்கள்

மணமகள் தேவை
பெயர்: மாணிக்கராசா இயேசுராஜன்
வயது: 34
உயரம்: 5' 3"
தொடர்பு எண்: 0262222632 - 0776779631

மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புங்கள். அனுப்புபவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 16.05.2015 அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.